44174-1

சோழமன்னர்

1931

885
44174

# CHOLA KINGS

PART I

16 FEB 1982

BY

PANDIT N. KANAKARAJIER,
"VIDWAN"
MAHARAJA'S COLLEGE, PUDUKOTAH

Lives of great men all remind us
We can make our lives sublime,
And departing, leave behind us
Footprints on the sands of time;—

*H. W. Longfellow.*

E. M. GOPALAKRISHNA KONE,
BOOKSELLER AND PUBLISHER
MADURA & MADRAS.

1211CL
N311
728C

ஸ்ரீ:

# சோழ மன்னர்

## முதற் பாகம்

### சோழன் கரிகாற் பெருவளத்தான்

16 FEB 1932

ஆசிரியர்:

பண்டித, நா. கனகராஜையர், வித்துவான்,

மஹாராஜா கல்லூரி,

புதுக்கோட்டை.

பிரசுர கர்த்தர்:

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,

புத்தக வர்த்தகர்,

மதுரை & சென்னை.

பதிப்புரிமை]　　1931　　[விலை அணா, 10

44174-1

# உரிமையுரை

வளமிகுபைந் தமிழ்மொழியை யடியேற்கு
வழங்கியருள் வண்மைச் செல்வர்
இளமைமுத லெனையுணர்ந்து மேன்மேலும்
எழுநெறியை இனிது காட்டி
உளநெகிழ்வா லரியபொருள் பலவெளிதி
னுணரவிரித் துரைத்த வள்ளல்
தெளிஞர்களி லுயர்ந்ததிரு நாரணவா
ரியர்பதங்கள் சிந்தை செய்தே

மனமொழிமெய் யுறவணங்கிப் பழந்தமிழின்
பனுவல்களின் வழியிற் சென்று
தினமுயன்று பெறுபொருளிற் சிறிதுசிறுர்
பொருட்டுதவிச் சிறப்பா வெண்ணிக்
கனகமழை பொழிவளவன் கரிகாலன்
வரலாற்றைக் காட்டு மிந்நூல்
எனதுசிறு பணியெனவே யேற்கவெனத்
தொழுதுரிமை யிசைத்தேன் மன்னோ.

நா. கனகராஜன்

77280
5591
954

ஸ்ரீ:

# முகவுரை

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

தமிழ் மொழியின் நூல் வளர்ச்சி முறையின் ண்டை வரலாற்றை ஆராய்வோர் அவ்வரும்பணியின் பாருட்டுச் சேர சோழ பாண்டிய மன்னர் பெருமக்கள் செய்திருக்கும் பேருதவியை அறியாதிரார். இந்நாளிலே ரம் சங்கச் செய்யுட்கள் என்று காண்பவற்றில் ஒன் றேனும் இம்மன்னர் தொடர்பு பெறாததாயில்லை. சங்கச் செய்யுட்கள் என்று வழங்கும் 'எட்டுத் தொகை, பத் துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகை களைத் தொகுப்பித்தோர்கள் இம்மன்னர்களே. எட்டுத் தொகையில் உள்ள தொகை நூலாகிய புறநானூற்றிலே மும்மன்னர் வரலாறுகளைக் குறிக்கும் செய்யுட்களே பெரும்பான்மையாம். இச்செய்யுட்கள் இம்மன்னர் களது வள்ளன்மை, அறநிலை, போர்த் திறம் முதலிய பெருமைகளைத் தெரிவிக்கின்றன. நற்றிணை, குறுந் தொகை, அகநானூறு என்ற அகப்பொருட் செய்யுட்கள் இம்மன்னர் வரலாறுகளை உவமை முகத்தானும் வேறு வழியானும் இடையிடையே தருகின்றன. பதிற்றுப் பத்து என்ற செய்யுள் நூல், சேரர் பரம்பரையினர் வர

லாற்றை விளக்க உதவியாய் அமைந்திருக்கின்றது. இ வாறாக, நாம் சங்கச் செய்யுள் என்று பயில்வன வெ லாம் நம் நாட்டுப் பண்டைத் தமிழ் மன்னர் வரலா றைத் தெரிவிப்பனவாகவே யுள்ளன. இவற்றால் நா அறியும் மன்னர் பலர் ஆவர் என்பதை இந்நூல்களை ஆராய்வதே பொழுது போக்காக வுடையோர் அறிவர்.

நம் நாட்டுப் பூர்வ சரித்திரத்தை வகுத்து எழு தற்குரிய ஆதார நூல்களாக இவை அமைந்திருப்ப வென்பதைத் தம் நுண்ணுணர்வால் நன்கு அறி வைத்தும், இந்நாளிலே புராதனமான எழுத்துருக்களை யாராய்ந்து, தென்னிந்திய சரித்திரம், தமிழ் நாட்டு வ லாறு என்பவற்றை ஆங்கில மொழியால் எழுதி உல குதவும் பெருமக்கள் இவற்றைத் தம் அரும்பணிக் வேண்டுமளவு பயன்படுத்திக்கொண்டதாகக் கூறுவத கில்லை. சமீப காலத்திலே காலஞ் சென்ற சரித்திராசிரியர் ஸ்ரீமான். பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் இத்துறையில் துணிந்து இறங்கி நன்கு முயன்று, தாம் கண்ட உண்மைகளைத் 'தமிழர் வரலாறு', 'ஆரியர் காலத்துக்கு முந்திய தமிழர் கல்வி நிலை' என்ற ஆங்கில நூல்களால் வெளியிட்டனர். இவர் ஆராய்ச்சி தமிழொன்றே பயின்றறிந்த பண்டிதர் ஆராய்ச்சி முறைக்கு வேறுபட்டிருப்பதை இவர் நூல்களால் உணரலாம். சென்னைச் சர்வ கலாசாலையில் இந்தியசரித்திர ஆசிரியராயிருக்கின்ற ஸ்ரீமான் ராமசந்திர தீக்ஷிதர் பெரும்பாலும் தமிழறிஞர் பின்பற்று முறையையே பின்பற்றித் "தமிழ் நூல் ஆராய்ச்சியும் சரித்திரமும்" என்ற பெயரால் ஓர் ஆங்கில நூல் வெளியிட்டனர். இதன்கண்ணும் பழம்பொருள்கள் சில புது முறை



யின் விளக்கப்பட்டிருப்பதை அறிஞர் காணலாம். இவை போன்ற இன்னும் பல புத்தகங்கள் வெளி வருவதற்கு வேண்டிய அரும்பொருள்கள் நம் தமிழ் நாட்டுப் பண்டைச் செய்யுள் நூல்களிலே உண்டு என்பது அறிஞர் கருத்தாம். நம் பண்டைப் பெருமையை நாமும் அறிந்து பிற நாட்டவரும் அறியச் செய்தற்பொருட்டே இக் காலத்தில் அயல் மொழிகளில் இத்தகைய நூல்கள் எழுதப்படுகின்றன என்பதை அறிகின்றோம்.

சென்ற வாண்டிலே சங்க காலத்துப் பாண்டியர் ஒருவர் வரலாற்றை ஆங்கில கலாசாலை மாணவரும் பிறரும் பயின்றின்புறுமாறு யான் பழம்பொருள்களோடு புதுப்பொருள்கள் சிலவற்றைச் சேர்த்து எழுதி வெளியிட்டேன். அவ்வண்ணமே சோழ மன்னருள் ஒருவர் வரலாற்றை விளக்க இந்நூற்றொகை எழுந்தது. இதன்கண் சோழ மன்னருள் மிக்க கீர்த்தி படைத்தவனாகிய சோழன் கரிகாற் பெருவளத்தான் வரலாறு முதற் பாகமாகிய இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுளது. பின்னர்க் கிள்ளிவளவன், நலங்கிள்ளி, கோச்செங்கட் சோழன், கோப்பெருஞ் சோழன் என்ற சோழர் வரலாறுகள் இத் தொகுதியின் இரண்டாம் மூன்றாம் பாகங்களில் கூறப்பட்டுள. இம்மன்னர்களின் வரலாறுகளை ஊகித்துணரச் சங்கச் செய்யுட்களே பெரிதும் உதவியாயின.

கரிகாற் பெருவளத்தான் வரலாற்றிலே வரும் சில செய்திகள் இந்நூற்றொகையில் புதுமைப் பொருள் சேர்த்துப் புனைந்துரை வகையால் நன்கு விரித்து எழுதப்பட்டுள. பழமொழியிலுள்ள,

"உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்: குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்."

"கழுமலத்து யாத்த களிறுங் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது."

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான்: இல்லை
உயிருடையோர் எய்தா வினை."

என்ற செய்யுட்களும் அவற்றின் உரையும் கரிகாலன் வரலாற்றை விரித்தெழுதக் கருவியாயின. கரிகாலன் உண்மை வரலாற்றைப்பற்றி இக்காலத்து வெளி வந்துள்ள புத்தகங்களுக்கும் இந்நூற்றொகைக்கும் சில வகையில் வேறுபாடுகள் உண்டு. பழமொழிச் செய்யுட்களில் உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியும் கண்கூடாகக் கண்டோர் கூறுமாறு விளக்கப்பட்டுள. கரிகாலன் தந்தையின் பெயர் உருவப் பஃறே ரிளஞ்சேட்சென்னி யென்பதைப் பண்டை நூல்களால் அறிவோம். அவன் பெயர் இளஞ்சேட்சென்னி யென்றிருத்தலால், மூத்தவனாகிய சேட்சென்னி யொருவன் இருந்தான் என்று இந்நூற்றொகையிலே கொள்ளப்பட்டுள்ளது. கரிகாலன் தந்தை அழுந்தூர் வேளிடை மகட்கொண்டான் என்று வழங்கும் பழஞ்செய்தியும், இரும்பிடர்த் தலையார் கரிகாலனுக்கு



அம்மானாராவர் என்றும் அவர் உதவியால் அவன் இழந்த அரசு பெற்றான் என்று வழங்கும் பழஞ்செய்தியும் இந்நூற்றொகையிலே தக்கவாறு ஆளப்பட்டுள்ளன. இங்கு இரும்பிடர்த் தலையார் அழுந்தூர் வேளின் மைந்தராவர் என்று கூறப்பட்டிருப்பது புதுமையேயாயினும், ஒருவாறு பொருந்துவதாக அறிஞர் ஏற்பர் என்று கருதி அமைக்கப்பட்டது. கரிகாலன் புகார் நகர் அமைத்தான் என்று வழங்கும் பழஞ்செய்தி தக்கவாறு பயன்படுத்தப்பட்டது. சிலப்பதிகாரத்தில் வரும் வட நாட்டுப் போரைப் பற்றிய செய்திகள் அங்கு உள்ள வண்ணமே கொள்ளப்பட்டன. இங்காளைச் சரித்திராசிரியர் ஸ்ரீமான் பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் இச்செய்திகளை உண்மைச் செய்திகளாக நம்பலாகாது என்று தமிழர் வரலாற்றிலே கூறுகின்றாராயினும், பண்டைச் செய்யுட்களின் ஆதரவு இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கரிகாலன் மக்கட்பேற்றைப்பற்றிப் பலர் பலவாறு கூறுவராகையால், அக்கொள்கைகளை ஆராய்ந்து முடிவுகட்டும் அரும்பணியில் இறங்காமல், பொதுமையாக அக்கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆதிமந்தியார் கரிகாலன் மகளார் ஆவர் என்று அறிஞர் கருதுதலால், அவர் வரலாறு இங்கு உரிய விடத்திலே சேர்க்கப்பட்டது. இவ்வாறு புதுமையும் பழமையும் கலந்தே யிருப்பது அறிஞர்க்குப் புலப்படும்.

நலங்கிள்ளியின் வரலாற்றிலே போர்ச் செய்தியே பெரும்பான்மையா மாகையால், கோவூர் கிழாரின் உண்மைப் பெருமைகளை விளக்குஞ் செய்திகள் அதன்கண் விளக்கப்பட்டன. மாவளத்தான் என்ற இளையோன் வர

லாறும் உரிய இடமறிந்து சேர்க்கப்பட்டது. சுவை வேறுபாடு தோன்ற வேண்டிச் சில புதுமைச் செய்திகள் அக்கால நிலைக்குப் பொருந்துமாறு இவ்வரலாற்றிற் சேர்க்கப்பட்டுள.

கோப்பெருஞ் சோழன் வரலாற்றிலே தமிழ்ப் புலவர் அனைவரும் அறிந்தின்புறும் பிசிராந்தையார் நட்பின் பெருமை நன்கு விளக்கப்பட்டது. அந்நட்பின் பெருமையை இந்நாளைச் சிறுவர் அறிதல் வேண்டும் என்றே செய்யுட்களை யெல்லாம் உரை நடையாக்கி உரிய வண்ணம் அறிந்து அமைத்துள்ளேன். கோப்பெருஞ் சோழன் அமைச்சரும் அரும்புலவருமாகிய பொத்தியார் மனை வாழ்வு கூற வேண்டுவது அவசியமாதலால், அஃது ஒருவாறு புனைந்துரைக்கப்பட்டது. சேர மன்னன் ஒருவன் அவனை வென்று பூத சதுக்கத்தைக் கொண்டு சென்றான் என்ற பழஞ்செய்தியும், கோப்பெருஞ் சோழன் மக்களோடு மாறுபட்ட செய்தியும் பழைய வரலாறுகளுக்கு மாறுபடாவண்ணம் புதுமுறையால் அமைக்கப்பட்டன. மக்கள் குணம் ஒருவாறு பிறகு சீர்திருத்தம் பெற்றதாகவும் காட்டப்பட்டுளது.

சோழன் செங்கணான் என்றும் கோச்செங்கட் சோழன் என்றும் அறியப்படும் சோழமன்னன், சைவத் திருமுறைகளாலும் திருமங்கையாழ்வார் திருவாக்காலும் புகழப் பெறும் பேறு பெற்ற அரசனே யாவன் என்பது சாஸன ஆராய்ச்சித் துறையிற் றேர்ந்த ஸ்ரீமான் வெங்கையர் என்பார் கொள்கையாம். இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டே செங்கணான் வரலாறு இங்கு விளக்கி யெழுதப்பட்டது. இவன் சேரமான்



கணைக்கா லிரும்பொறையோடு போர் புரிந்து வென்ற செய்தி பண்டைத் தமிழ் நூல்களால் அறியப்படுவதே. "தமிழ்ப் புலவர் வரலாறு" என்ற பெயரால் இரண்டு ஆண்டுகளின் முன்பு என்னால் எழுதி வெளியிடப்பெற்ற நூற்றொகையில் வரும் பொய்கையார் வரலாற்றிலே யான் இச்செய்தியைச் சரித்திர முறை பற்றி விளக்கினேன். அங்குச் சோழன் செங்கணான் சேரமான் கணைக்கா லிரும்பொறையோடு செய்த போர்கள் இரண்டு என்று கூறினேன். அதனை அறிஞர் சிலர் கண்டித்தனர். இவ்வுண்மைச் செய்தியைப்பற்றி மேலுஞ்சிறிதளவு ஆராய்ந்து இந்நூலில் ஆண்டிருக்கின்றேன். இங்கும் முன்போலவே இரண்டு போர்கள் நிகழ்ந்ததாகவே குறித்துள்ளேன். புறநானூற்றிலே எழுபத்துநான்காம் செய்யுளாகிய "குழவி யிறப்பினும்" என்று தொடங்கும் செய்யுள், சேரமான் கணைக்காலிரும்பொறை பாடியதாம். அச்செய்யுளின் கீழுள்ள குறிப்பு "சேரமான் கணைக்கா லிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தா வென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்பதாம். பொய்கையார் பாடிய களவழி நாற்பதிலே கழுமலப் போர் விவரிக்கப்பட்டது. கழுமலம் சோழ நாட்டின்கண் உள்ளது. குடவாயிற் கோட்டம்சேர நாட்டின்கண்ணிருப்பது. இங்குச் சிறை செய்யப்படுதற்கு முன் நிகழ்ந்த போர் திருப்போர்ப்புறம் என்ற ஊரில் உள்ள போர்க்களத்தில் நிகழ்ந்தது. திருப்போர்ப் புறம் எந்நாட்டின்கண்ணுள்ளது என்பது விளங்கவில்லை;

சேர நாட்டின்கண் இருப்பதாகவே ஊகிக்க வேண்டும். 'குழவி யிறப்பினும்' என்ற பாடலைச் சேரமான் பாடிய போது நிகழ்ந்த போர் சேர நாட்டில் திருப்போர்ப் புறத்தில் நிகழ்ந்ததெனவும், பொய்கையார் களவழி நாற்பது பாடக்காரணமாயிருந்த போர் சோழ நாட்டிலே கழுமல நகர்க்கருகே நிகழ்ந்த தெனவும் ஊகிக்கலாம். இப்போர் சோழ நாட்டகத்ததாகிய வெண்ணிப் பறந்தலையில் நிகழ்ந்ததென்று நற்றிணையுரையாசிரியர் ஸ்ரீமான். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். இவ்வாறு இரண்டு போர்கள் நிகழ்ந்தனவென்று கொள்ளாவிடின், கலிங்கத்துப் பரணி யாசிரியர் சயங்கொண்டார்,

"களவ ழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன்
கால்வ ழித்தளையை வெட்டியர சிட்ட பரிசும்"

என்று பாடியது பொய்யாய் முடியும். இவ்விரண்டு செய்திகளையும் பொருத்தக் கருதிச் "சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்" என்ற தம் உரை நூலிலே மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள், 'துஞ்சிய' என்ற சொல்லுக்கு 'மயங்கிக் கிடந்த' என்று பொருள் கொள்ள வேண்டும் என்பார்கள். 'நச்சினார்க் கினியனெச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்பது போல, ஐயரவர்கள் இட்ட பிச்சையாகத் தமிழ் பயின்று வரும் சிறியேன் அவர்கள் கருத்தை மறுத்துப் பேசத் துணிந்து வந்தேனிலேன்; நன்கு ஆராய்ந்து என் உள்ளத்துக்கு உண்மையென்று புலப்பட்டவற்றைக் கூறத் துணிந்தே இங்ஙனம் எழுதினேன். புறநானூற்றிலே பிற இடங்களிலே இச்சொல் இறந்த என்றே பொருள் தருதலாலும், சாஸன ஆராய்ச்சியாளர் ஸ்ரீமான் வி.



வெங்கையர் இப்பொருளே பொருத்தமெனக் கூறியிருப்பதாலும், 'குழவி யிறப்பினும்' என்ற செய்யுள் பாடிய அரசன் பிறகு உயிர் பெற்று வாழ்ந்தான் என்பது 'மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்று நீதி வழங்கும் நாட்டிற் பிறந்தார்க்குச் செவி சுடும் சொல்லாமாகையாலும், புனைந்துரை வகையாற் புதுமைகள் புகுந்திருப்பினும் உண்மைச் செய்திகளைப் பண்டையோர் கொள்கைக்கொப்பவே ஆராய்ந்து கூறுவது இந்நூற்றொகையின் நோக்கமா மாகையாலும், தமிழ்ப் புலவர் வரலாற்றிலே கூறியவாறு இங்கும் இரண்டு போர்கள் என்றே விரித்து எழுதியுள்ளேன். இவ்வாறு யான் கருதுவது பொருத்தமேயாமென என் தமிழாசிரியர் தம் கருத்தை வெளியிட்டருளியது எனக்குப் பேருதவியாயிற்று.

கிள்ளி வளவன் வரலாற்றிலே பழமைகளும் புதுமைகளும் கலந்துள. இங்குக் கிள்ளி வளவன் என்று கொண்டது, புறநானூற்றிற் கேட்கப்படுகின்ற சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்பானையேயாம். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இவன் பெயரொடு ஒரு புடையொத்த பெயர்கள் வருகின்றன. சிலப்பதிகார மணிமேகலைகளின் கால நிலையைப்பற்றிக் கொள்கைகள் பலவாம். அவற்றை யெல்லாம் ஆராய்ந்து முடிவு கட்ட இங்கு இடமுமில்லை; சிறியேனுக்கு அதற்கு வேண்டிய ஆராய்ச்சித் திறமையும் இல்லை. சிலப்பதிகாரத்திலே சோழன் பெருங்கிள்ளி யென்பான் உறையூரி லாண்டான் என்று கூறப்படுகிறான். இவன் பெயர் பெருநற் கிள்ளி யென்பார் அடியார்க்கு நல்லார். மணி

மேகலையில் வடிவேற் கிள்ளி, வென்வேற் கிள்ளி, நெடுமுடிக்கிள்ளி, கிள்ளி வளவன் என்ற பல பெயர்களோடு ஓர் அரசன் வழங்கப்படுகின்றான். இவன் மைந்தனை உதய குமரன் என்பான். கிள்ளி வளவன் சரித்திரத்தை ஆராய்ச்சி முறையால் தமிழகத்துக்கு எழுதி யுதவியிருக்கும் திருவாரூர் இலக்கணவிளக்கம் வைத்தியநாத தேசிகர் மரபினராகிய சோமசுந்தர தேசிகர், "பழந்தமிழ்ப் பெருமக்கள்" என்ற தம் உரை நூலிலே சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை உதய குமரன் தந்தையாகிய மணிமேகலைக்காவிய மன்னன் என்று அறுதியிட்டுளர். காலவாராய்ச்சியிலே துறை போகிய இன்னவர் கருதிய கருத்து ஆதரிக்கத் தக்கதே யென்று கொண்டு இந்நூற்றொகையிலே அவ்வண்ணம் மணிமேகலையில் வரும் செய்திகளையும் புறநானூற்றில் வரும் செய்திகளையும் கலந்து, புனைந்துரை வகையால் வேண்டுவன சேர்த்து எழுதப்பட்டது. சிலப்பதிகாரத்திலே இவன் சேரன் செங்குட்டுவனுக்கு உறவினனாக அறியப் படுகிறான். அகநானூற்றிலே ஒரு கிள்ளி வளவன் கூடல் நகரிலே பழையன் மாறனைப் போரிற் சாய்த்து கொண்டு கோதை மார்பன் மகிழ்ந்தான் என்ற செய்தி வருகின்றது. பொய்கையாரால் புகழ்ந்து பாடப்பெற்ற சேரமான் கோக்கோதை மார்பன் என்பான் இக்கோதை மார்பனுக்கு என்ன உறவின் முறையானோ வென்பது அறியக்கூடவில்லை. கிள்ளி வளவன் செங்கோற் சிறப்பும் அரசியற் பெருமையும் போர்த்திறமும் எங்கும் புகழ்ந்து பேசப்படுவதால், அவை விளங்க வேண்டியே இவ்வரலாறுகள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டன.



இளைஞர்க்கென்று கதை யுருவமாக எழுதப்பட்ட உரை நடை நூற்றொகையின் முகவுரையிலே இத்துணையும் கூறுவது, தமிழ் வளர்ச்சியில் நாட்ட முடையார் பலர் நன்முறையில் ஆராய்ச்சி செய்து தமிழ்த்திருப் பணி புரியும் இந்நாளிலே அத்தகையார் கையில் இவை அகப்படுமாயின், உண்மை விளங்க வேண்டும் என்பது கருதியேயாம்.

தமிழ் நாட்டுப் பண்டை வரலாறுகளையும் நாகரிகச் சிறப்பையும் அறிய முயல்வோர்க்கு அக்காலத்தில் மக்கள் வாழ்ந்த நிலையை நூல்களால் அறிந்தவாறே கூறுவது நன்றெனத் தோன்றும். அம்முறை கருதியே புலவர், பாணர், வயிரியர், விறலியர் முதலியோர் செய்திகள் கூறப்பட்டன. பாணாற்றுப்படையின் கருத்து ஒருவாறு இரித்துப் பாணன் ஒருவனை இடையிலே சேர்த்து இளைஞர்க்கு விளங்குமாறு புதுமையின் அமைக்கப்பட்டுளது. இவ்வாறு வரும் புதுமைப் புனைந்துரைகளெல்லாம் அறிஞர்க்கு வெறுப்பளியாவென்பது எதிர் பார்க்கப்படும்.

இளம்பருவத்திலே தந்தையை யிழந்து கலைப்பயிற்சிக்கு வழியின்றி மயங்கிய சிறியேனை மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலையிலே ஒரு மாணவனாகச் சேர்த்துக் கொண்டு பேணிப் புரந்த தமிழ் வள்ளல் பொ. பாண்டித்துரைத் தேவர் என்ற நல்லோர் பெயரை நினைந்துருகாதிருக்க இயலாது. அன்னார் உதவியின்றாயின், தமிழ் எங்கே சிறியேனெங்கே? தமிழ்ச் சங்கக் கலாசாலையில் கல்வி பயிற்றித் தமிழ்ச் செல்வத்தை யான் அடையுமாறு உதவிய தமிழாசிரியர்களாகிய ஸ்ரீ. சு. ஹரிஹரைய

ரவர்களுக்கும் காலஞ்சென்ற தமிழ்ப்புலவர் சு. அரங்கசாமி ஐயங்கார் அவர்களுக்கும் இந்நூலின் உரிமையை யேற்றுக்கொண்ட ஸ்ரீ. உ. வே. திருநாராயண ஐயங்கார் அவர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கங்கள் உரியனவாம். தமிழ்ப் புலவர் வரலாறு, பாண்டிய மன்னர் என்ற என் நூற்றொகைகளை அச்சிட வேற்றுக்கொண்டதுபோல இதனையும் ஏற்றுக்கொண்டு எனக்கு ஊக்கம் உதவிய மதுரைப் புத்தக வணிகர் ஸ்ரீமான். இ. மா. கோபால கிருஷ்ணக் கோனார்க்கும், அச்சிடும்போது ஒப்பு நோக்குதல் முதலிய பணி புரிந்துதவிய என் அன்பர் தமிழ்ப் புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனங்கள் உரியனவாம். தமிழ் வளர்ச்சியில் ஊக்கமுடைய இளஞ்சிறார் பலர் பெருகிய இந்நாளிலே இந்நூற்றொகை அவருள்ளத்தே உண்மையான தமிழபிமானத்தை வளர்க்க உதவுமாயின், அதுவே இவற்றை எழுதியதாற் பெற்ற பெரும்பயனாக மதிக்கப்படும்.

தமிழ்த் தெய்வம் துணை நிற்க.

21—11—'31
புதுக்கோட்டை

நா. கனகராஜையர்

ஸ்ரீ:

# சோழ மன்னர்

## முதற் பாகம்

### சோழன் கரிகாற் பெருவளத்தான்

I

"மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைந்தினி திருந்த
மையறு சோழ வளநா டென்ப."

சோழவள நாடு, அருந்தமிழமுதம் பருகிப் பிறக்குதவும் புலவர் பலர் பிறந்த சோழ நாடு; பத்தினிப் பெண்டிர் பலர் பிறந்து வாழ்ந்த சோழநாடு; மனுச்சோழன் கன்றை யிழந்து கதறிய பசுவின் பொருட்டுத் தன் மகனைத் தேர்க் காலிலிட்டு அரச முறை நிலை நிறுத்திப் புகழ்பூண்ட புண்ணிய நாடு; வளங்கள் பலவும் நிரம்பிய

வளவ நாடு; பிற நாடுகளின் சென்னி மணியாய் இலகும் சென்னிநாடு; இன்றளவும் தன் பண்டைப்புகழ் மாறாது சோற்று வளம் படைத்த சோழ நாடு. இந்நாட்டின் பெருமையை எண்ணி யுள்ள முருகிப் புகழ்ந்த பண்டைப் புலவர் எத்துணையர்? அப்புலவர்கள் பாடிய பாடல்கள் இந்நாளிலே இறைவன் அருட்சிறப்பால் நம்மவர்க்கு எளிதிற் கிடைத்தலாலன்றோ நாம் நம் தமிழகத்தின் இதய கமலமாகிய சோழ நாட்டின் பழம் பெருமையை உள்ளவாறு உணரக் கூடியவர்களாயிருக்கிறோம்?

இந்நாடு பண்டைக் காலத்திலே, அறிவும் திறனும் அருளும் ஆற்றலும் பொருளும் புகழும் படைத்த ஒரு தமிழ்ப் பழங்குடியினரால் ஆளப்பட்டது. இக்குடியினர் ஆண்மையும் வீரமும் நல்லிசைப் புலவர் பலராற் பாராட்டப்பட்டுள. சோழ மன்னர் என்று உலகம் புகழ வாழ்ந்த இக்குடியினர் காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தைச் சில காலம் அரசிருக்கையாகக் கொண்டிருந்தனர். 'ஊரெனப் படுவ துறையூர்' என்று புகழ்பூண்டு கோழியென்ற வேறு பெயர் படைத்த உறையூர் நகரைச் சில காலம் அரசிருக்கையாகக் கொண்டிருந்தனர்; பின்னாளிலே திருவாரூர், தஞ்சாவூர் என்ற நகரங்கள் இவ்வரசினர்க்குத் தலை நகராயின வென்பர்.

மனுச் சோழன் திருவாரூரிலிருந்து அரசாண்டான் என்று பெரிய புராணத்திற் கூறப்படுமாயினும், அவன் புகார் நகரத்திலிருந்து அரசியற்றினன் என்று சிலப்பதிகாரம் கூறுவதால், இரண்டு நகரங்களும் அவன்



காலத்திற் சிறந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. பிற்காலத்துச் சோழ அரசர்கள் தத்தம் பெயராற் பல நகரங்கள் நிருமித்தனர். அவை யெல்லாம் இப்பொழுது பெயரளவில் நிற்கின்றன.

பண்டைத் தமிழ் மன்னர் என்று தமிழர் கருதும் சேர சோழ பாண்டியருள், இந்நாளிலே திருவாங்கூர் மன்னர் சேர மன்னர் பரம்பரையினர் என்று கருதப்படுவர். அவர் தமிழ் மன்னராக இக்காலத்தில் இல்லாதிருப்பது உலக மறிந்ததே. சோழ மன்னர் குடியும், பாண்டிய மன்னர் குடியும் புகுந்து மறைந்த இடமே தெரியவில்லை. தமிழ் மன்னரது பண்டைப் புகழின் பகுதியில் ஒரு சிறிதேனும் நாம் அறியத் தக்கவாறு இந்நாளிலே அம்மரபினர் எவரும் இல்லாது போனது அறிஞர் அறிந்து விசனித்தற்குரியதே. இம்மன்னர்கள் நிலை இவ்வாறு ஆயதுபோல இவர்கள் ஆண்ட நாடு நகரங்களின் நிலையும் ஆயிருப்பது அறிந்து வருந்தத் தக்கது.

முன்னாளிலே பெரிய நகரங்களாய் மிக்க செல்வ நலம் படைத்திருந்த உறையூரும் புகார் நகரமும் இந்நாளிலே மிகச் சிறிய வூர்களாக மாறித் தம் பண்டைப் பெருமையை விளக்கும் விருப்பமும் வலிமையும் அற்றனவாய் இருக்கின்றன. அரசர்க்கு வரும் வாழ்வு தாழ்வுகள் அவர்தம் நகரங்களுக்கும் வரும் எனச் சோழ மன்னர் வரலாற்றிலிருந்தே நாம் அறியலாம். இவை இந்நாளில் இருக்கும் நிலைமையைக் காணும் தமிழன் ஒருவன் பண்டைத் தமிழ் நூல்களை நன்கு ஆராய்வானாயின், இவற்றின் பண்டைப் பெருமையை

யும் இந்நாளைச் சிறுமையையும் எண்ணி மனங் கசிந்து கண்ணீர் உதிராமலிரான். பண்டைப் பெருமையை ஒரு சிறிதேனும் இந்நாண் மக்கள் அறிய வேண்டி இம் மன்னர் மரபிலே தோன்றிய பெருமக்களுள் நின்ற புகழ்படைத்த சோழன் கரிகாற் பெருவளத்தான் வரலாறு இங்கு ஒருவாறு கூறப்படும் :

உறையூர்ப் பெருநகர் எண்ணிறந்த புலவரும் அறிஞரும் வீரரும் மன்னரும் பிறரும் மகிழ்ந்து வாழ்தற்குரியதாய் இடமகன்றதாயிருந்தது. அந்நகரிலிருந்து, அறிஞர் கூறும் அறவுரை கேட்டு, அதற்கிணங்கச் சேட்சென்னி யென்ற சோழ மன்னன் சோழ நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஆண்மையும் போர்த் திறமும் படைத்த அரசர் பெருமானாகையால், அயலரசரெல்லாரும் அவன் பெயர் கேட்பினும் அஞ்சுவாராயினர்.

மன்னன் சேட்சென்னி, வளம் படைத்த சோழ நாட்டிலே புலவர் பலரும் மகிழ்ந்து வாழ்தற்காவன செய்வித்தான். அவனுக்கு இளையோனாகிய இளஞ்சேட்சென்னி யென்பான், "ஏந்தெழில் மிக்கான்; இயற்றமிழ் வல்லான் ; நயனுடை யின் சொல்லான்; விற்போர் வல்லான் : வேற்போர் வீரன்; வாட்போர் வல்லவன்," என்று நாடு போற்ற வாழ்ந்திருந்தான். அவ்விளையோன், மூத்தோனாகிய அரசனுக்கு உதவியாகப் போர் புரிந்து, நாடு காத்தற்கு ஆவன புரிந்து வந்தான். அந்நாளிலே போர்ப்படையிற் றேர்ப்படையே பெரிதாக மதிக்கப்பட்டது. ஆகையால், அவ்விளஞ்சேட்சென்னி அழகிய பல தேர்களைச் செய்வித்து, அவற்றைப் போர்க் களங்களிலே நடத்திப் போர் புரிந்து, வெற்றி பெற்று



வந்தான். அதனால், அவன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி யென்று புலவராற் புகழப் பெற்றான்.

சேட்சென்னி அரசுரிமை யேற்றுப் பல வாண்டுகள் ஆயின. நாட்டிலும் நகரிலும் எல்லா வகை வளங்களும் நிரம்பியிருந்தன. ஆனால், அரண்மனை யகத்தே ஒரு சிறப்புக் குறைவுற்றிருந்தது. அரசனாய் இருப்போன் தன் மன மகிழ்ச்சிக்கென ஒன்றையும் கொள்ளவும் தள்ளவும் இயலாது: எல்லாம் நாட்டவர் நன்மைக்கென்றே கருதவேண்டியவனாயிருக்கிறான். நல்ல குலத்திலே குண நலமெல்லாம் படைத்த பெண்டிர் இருவரை மணந்து, நல்லோர் விதித்த அறச் செயல்களையெல்லாம் முறை தவறாது புரிந்து வந்தும், மன்னன் மக்கட்பேறு பெறவில்லை. மன்னன் மக்கட்பேறு பெறாதிருந்தது, தேவியர்க்கும் அரச வுறவினர்க்கும் அரண்மனையகத்தார்க்கும் விளைத்த மனக்குறை அதிகமேயாயினும், நாட்டு மக்கள் மனக் குறை அதினும் அதிகம் என்றே கூற வேண்டும். இப்பெருங்குறை யொன்றே மற்றெல்லாப் பேறுகளாலும் பெறும் இன்பத்தைக் கெடுத்தது.

நாட்டு மாந்தர் பலர் தம்முட் கலந்து ஆலோசனை செய்து, 'அரசனை மற்றொரு மணம் முடிப்பித்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்வோம்,' எனத் தீர்மானித்தனர். அதற்கிணங்க ஒரு நாள் அவருள் முன்னிற்போர் பலர் அரண்மனையடைந்தனர். நாட்டு மக்களுட் பெரியார் பலர் தன்னைக் காணவந்த செய்தி யறிந்த அரசன், பெரிய மண்டபம் ஒன்றினிலடைந்தான். அங்கு அமைச்சரும் பிறரும் கூடினர் ; இளைய வேந்தனும் வந்தடைந்தனன். பெரியார் பலரும் தத்தமக்குரிய

ஆதனங்களில் அமர்ந்தனர். அரசன் சிங்காதனத் தமர்ந்தான். இளைய வேந்தன் அருகிலே அமர்ந்திருந்தான். அமைச்சர் பலரும் புலவருட் சிலரும் அரசனைச் சூழவிருந்த இருக்கைகளில் அமர்ந்தனர்.

புலவர் ஒருவர் எழுந்து, அரச வாழ்த்துக் கூறினர். பின்னர் அமைச்சர் தலைவர் எழுந்து, "மன்னர் பிரானே, இளையவரசே, அறிஞர்காள், இன்று இறைவன் திருவருளால் நாம் எண்ணிய எண்ணம் நிறைவேறுக. சோழர் குடியின் பழமையும் பெருமையும் புகழும் உலகம் அறிந்த உண்மைகளே. அத்தகைய பழம்பெருங்குடியில் இப்பொழுது அரசு பூண்டிருக்கும் மன்னர் குண நலங்கள் நம் நாட்டு மக்கள் மனத்தையெல்லாம் கவர்கின்றன என்பது மெய்யே. இத்தகைய நல்லரசர் ஆட்சியின்கீழ் வாழ்ந்த மக்கள் மேலும் மேலும் இன்ப வாழ்வே பெற வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பே. தற்காலம் இறைவன் அருள் குடி மக்களது நோக்கத்துக்கு உதவியாய் இருப்பதாகக் கூறுவதற்கில்லை. எல்லாக் குணங்களும் எல்லா நலங்களும் எல்லாச் செல்வங்களும் நிரம்பிய நம் அரசர் பிரானுக்கு மக்கட்பேறில்லாதிருப்பது நம் மனத்திற்குப் பெருங்கவலையைத் தருகின்றது. தேவிமார் இருவரும் அரசர் பெருமானும் தெய்வத் திருவருள் பெறக் கருதிச் செய்த புண்ணியச் செயல்கள் இந்நாள்காறும் பயன் தந்தில. என்று பயன் தருமோ! என்று நம் மனக்குறை யகலுமோ! அறியோம். இறைவன் திருவருள் விரைவில் எய்துக என்று நாம் எல்லாம் வல்ல அவனையே பணிவோம்," என்று கூறி யமர்ந்தனர்.



முதியவர் ஒருவர், அமைச்சர் தம் ஆதனத்தில் அமர்ந்த பிறகு எழுந்து, தம் கருத்தை வெளியிட்டார். அவரும் பெரும்பாலும் அமைச்சர் கூறிய கருத்துக்களையே கூறினர். புலவர் ஒருவர் எழுந்தார். அவர், "அரசரே, அவையகத்தீர், கண்ணில்லாத வாழ்வும், மதியம் ஒளி செய்யாத வானகமும், அமைச்சரில்லாத அரசாட்சியும், அறிஞர் இல்லாத அவைக்களமும், மக்கள் இல்லாத மனை வாழ்வும் ஒப்பாம் என்பர் பெரியோர். பொது மக்களுக்கே மக்களில்லாக் குறை பெருந்துயரம் விளைக்கும். தம் நாட்டின் நலத்தின்பொருட்டே எல்லா வகை நலங்களையும் துய்க்கும் அரசர்க்கு மக்களில்லாக் குறை அவர் மாத்திரமேயன்றி அவரை யடுத்தார் எவரும் எண்ணிக் கவலத் தக்க பெருங்குறையாமன்றோ? அரசர் பிரானுக்குத் தேவியர் இருவர் இருக்கின்றனர். அத்தேவியர் கற்பின் கொழுந்தனையர்; பொற்பின் செல்வியர்; நாணின் பாவையர்; நீணில விளக்கனர். அத்தகைய நற்பெண்டிர் மகப்பேறு பெறாமை இறைவன் அருட் சிறப்பேபோலும்! இளைய வேந்தர், தமக்கொத்த குலத்திலே ஒரு கற்பரசியை மணம் புரிந்திருக்கின்றார். சென்ற பலவாண்டுகளாக அவர்க்கும் மகப்பேறு இல்லை. அவர்க்கேனும் மகப்பேறு உண்டாயிருப்பின், ஒருவாறு நாட்டார் மனக் குறை தணியலாம். ஆகையால், இனி, அரசர் பிரான் இறைவன் திருவருள் பெற்று எவ்வகையாலேனும் நம் நாட்டை ஆளத் தக்க ஓர் இளவரசனைத் தரல் வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாம்," என்றியம்பி இருந்தனர்.

வேறு பிறர் எழுந்து, "அதுவே எம் கருத்தும்," என்று கூறித் தம் இருக்கையில் அமர்ந்தனர். பின்னர்

அரசர் பிரான் தன் உள்ளத்தடக்கிய துயரம் வெளி வாரா வண்ணம் பின் வருமாறு பேசினன்:

"அமைச்சர்காள், அன்புடையீர்காள், நமக்குள்ள மனக் குறையைப் போக்க முயல்வதன்றே எம் கடமையாம்? யாம் என் செய்தும்? இறைவன் திருவருள் இன்னணம் இருந்தது! நாட்டின் நலங்கருதி எம்மால் இயன்றன வெல்லாம் புரிய யாம் ஒரு சிறிதும் பின்னிடையோம். நீவிர் இப்பொழுது தெரிவித்துக்கொண்டது இறைவன் அருளாலேயே அமைதற்குரியது. எவ்வெவர்க்கும் முன் வினைப்பயன் மாற்ற வியலாத தொன்றாம். எமக்கு இப்பிறவியில் புத்திரப் பேறு பெறற்குரிய திருவருள் இல்லாதிருக்குமாயின், யாம் என் செய்யலாம்? இளையோனேனும் புத்திரப் பேறு பெற்றிருப்பின், எம் மனம் அமைதி பெற்றிருக்கும். போர்த் தொழிலிலே பெருவிருப்புப் பூண்டிருக்கும் இளையோன், நாட்டின் நலத்திலேயே நாட்டம் உடையானாயினும், நாட்டிற்கு இளவரசைத் தரும் முயற்சிக்கு இறைவன் அருள் பெற வேண்டியவனே யாமன்றோ? நீவிர், 'நாட்டின் நலங் கருதி இளவரசொருவனைத் தரல் வேண்டும்,' என்கின்றீர். எம்மால் இயன்ற அறச் செயல் அனைத்தும் புரிந்தும் பயன் பெற்றிலேம். நம்முன்னோர் சிலர் கருதுவது போல, இனி யாம் மறுமணம் முடித்து மகப்பேறு பெற விரும்புகிலோம். நமக்கு விருப்பமிருக்குமாயின், நம் இளையோற்கு மற்றொரு மணஞ் செய்து வைக்க விரும்புகின்றோம். இங்கு வந்திருக்கும் பெரியோர்களில் எவரேனும் யாம் இன்ன குடியிலே எம் இளையோன் பொருட்டுப் பெண் கொள்ளலாகும் என்று கூறுவாராயின்,



அதனை அமைச்சரோடு கலந்து ஆலோசித்துத் தக்க முடிவு கூறுவோம்."

மன்னர் பிரான் வாய் மொழி கேட்டு அவைக் களத்திருந்த அறிஞரெல்லாம் சிறிது நேரம் தமக்குள் ஆலோசனை செய்தனர். பிறகு புலவர் ஒருவர் எழுந்து, அவ்வாலோசனையின் முடிவை வெளியிட்டனர்:

"அரசரே, உலகிலே இல் வாழ்க்கை யென்னும் தொடர்ச்சி அறு வண்ணம் இல்லறத்தான் ஒவ்வொருவனும் முயல வேண்டும் என்று வேதங்கள் விதிக்கின்றன. அரச மரபு முறை பிறழ்ச்சியின்றித் தொடர்ச்சியாய் வரவேண்டுமென்பது சான்றோர் கருத்தாம். நமது மரபின்கண் முன்னே பிறந்த பெருமன்னர் புகழெல்லாம் நீவிர் அறிவீர். எதிர் காலத்திலும் நமது மரபின் புகழ் வளர்ந்தோங்குகவெனக் குடி மக்கள் கருதுவது இயல்பே. இரு மகளிரை மணம் புரிந்தும் மகப் பேறு பெறாமையால், மூன்று முறையாக ஒரு பெண் கொள்ள விரும்புகிலீர்; இளையவரசர்க்கு மணம் முடிப்பிப்பதாகக் கூறுகின்றீர். நாட்டின் உரிமையிலே நாட்டம் உடையார் பலர் இப்பொழுதே எழுவதாக அறிகின்றோம். எவர் மணமுடித்துக் கொள்வதாயினும், விரைவிலே மணம் புரிந்துகொண்டு, எமக்கு ஓர் இளவரசனை நல்கல் வேண்டுகின்றோம். இவ்வரசுக்கு உரிமை யுடையார் இன்னார் என்று உறுதி கூற இயலாதொன்று உண்டாமாயின், அஃது எமக்கும், இந்நாட்டிற்கும், எம் குடியிலே பின் வருவார்க்கும் பெருந்துயர் விளைக்கக் கூடிய செயலாம். ஆகையால், அரசர் பிரானே, நம் மரபின் உரிமைக்கு உரியான் ஒரு செல்வனை எம்பொருட்டு விரைவிலே தர வேண்டுகின்றோம்."

அரசன்:—பெண்ணைக் கொள்வதில் அரசர் குடியினர் ஆலோசித்தற்குரிய நியாயங்கள் பல உள. நாம் முன்னே கூறியவாறே விரைவிலே இளையோனுக்கு மணம் முடிப்பிப்போம். குணமும் நலமும் அறிவும் உருவும் திருவும் உடைய ஒரு பெண் மணி எளிதிற் பெறலாம் பொருளன்றே? நீவிர் அறிந்த வளவில் எவரேனும் நம் குடியிற் பெண் கொடுத்தற்குரியார் இருப்பின், வெளியிடலாம்.

புலவர்:—அரசரே, தமிழ்ப் பழங்குடியினராகி, தமக்குத் தம் மரபின் பெருமையை வளர்க்கும் கருத்துடையார் எவரும் பெண் கொடுக்க ஒருப்படுவர். முன்னுளிலே நம் மரபினர் வேளிர் குடிகளிலே பெண் கொள்ளும் வழக்கமுடையராய் இருந்தனர். வேளிர் இனத்தினர் சிறந்த வீரர்; தமிழகத்து மும்மன்னர்க்கும் அவ்வக்காலங்களில் தத்தம்மால் இயன்ற உதவி புரிந்து வந்திருக்கின்றனர். அக்குடியினருள் இங்கும் சிலர் வந்திருக்கின்றனர். அவருள் அறிவினலத்தாலும் பொருளின் சிறப்பாலும் மேம்பட்டுத் தலைமை பூண்டிருக்கும் அழுந்தூர் வேளைப்பற்றி இந்நாடனைத்தும் அறியும். அவர் முன்னை நல்வினை வயத்தால் ஒரு பெண்ணருங்கலத்தைப் பெற்றிருக்கின்றார். அவர் மைந்தர் ஒருவர் சிறந்த புலமை படைத்தவராகவும் விளங்குகின்றார். நீவிர் விரும்புவீராயின், அழுந்தூர் வேளின் அருமைக் குமாரியை நம் இளைய மன்னர்க்கு மணம் புரிவிக்கலாம். இம்மண வினை நிகழ்வதில் எவரும் மன மாறுபாடு கொள்ள இடமில்லை.



முதியவர் ஒருவர்:—அரசரேறே, இத்தகைய உயர்ந்த பழங்குடி யொன்றிலே மன்னர் பெண் கொள்வது எமக்கெல்லாம் விருப்பமே. விரைவிலே மணம் முடிந்து இறைவன் திருவருளால் எம் நாடு ஓர் இளவரசைப் பெறவேண்டு மென்பதே எமது வேண்டுகோளாம்.

அரசன்:—இளையோற்கு விரைவிலே மணம்நிகழ்த்துவோம். அழுந்தூர் வேள் என்ன சொல்வாரோ!

அழுந்தூர் வேள்:—மன்னர் பிரானே, யானும் எமது குடியும் எம் கல்வியும் அறிவும் பொருளும் திறமையும் வீரமும் எல்லாம் எம் அரசினர்க்கே உரிமையாயிருக்க, எம் குடியிலே பெண் கொள்வது பற்றி எனது விருப்பம் அறியவேண்டுமோ! இளையவேந்தர் மனமுற விரும்பி எம் குடிச்செல்வமாகிய பெண்ணருங்கலத்தை யேற்றுக் கொள்வராயின், யான் கொடுக்க இசைகின்றேன்.

அரசன்:—இளையோய், நின் கருத்து என்ன?

இளையோன்:—அறிவிலும் அநுபவத்திலும் சிறந்த பெரியோர் பலரும் கூடி நாட்டின் நலம் கருதி முடிவு செய்த வொரு விஷயத்திலே நான் மாறான கொள்கையுடையனாயிருத்தல் இயலுமோ?

அரசன்:—அங்ஙனமாயின், விரைவிலே மண வினை நிகழ்த்துவோம். நம் விருப்பமெல்லாம் நிறைவேறுக. பெரியீர்காள், இனி விடை பெறலாம். யாம் மந்திர சாலைக்குச் செல்கின்றோம்.

## II

உறையூர்ப் பெருநகர் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மண வினையின்பொருட்டு மங்கலகரமாக அலங்காரம் செய்யப்பட்டது. அரச மாளிகையில் மங்கள வாத்தியங்க்ள் முழங்கிய வண்ணம் இருந்தன. சோழ பரம்பரையார் திருமண வினையை நிகழ்த்தும் சிறப்பினைத் தனக்கென்றமையப் பெற்ற திருமண மாளிகை தேவர் உறையுள் போல விளங்கியது. அருகிலேயுள்ள சிறியவும் பெரியவும் ஆகிய பல மாளிகைகளில் வேளிர் பலரும் வேறு பல சிற்றரசரும் வந்து நிரம்பினர். அழுந்தூர் வேளும் அவர்தம் உறவினரும் ஒரு பெரிய மாளிகையில் வந்து தங்கினர். மணவினைக்குரிய மங்கல நாள் குறுகியது. அந்தணரும் அறிஞரும் புலவரும் பிற பெரியார்களும் திருமண மாளிகையிற் கூடினர். சேட்சென்னியும் இளஞ்சேட்சென்னியும் இரண்டு அழகிய தேர்களி லமர்ந்து, அரண்மனையிலிருந்து மண மனை வந்தடைந்தனர். அரச பத்தினியரும் பிற பரிவாரத்தாரும் சிவிகைகளிலும் பிற ஊர்திகளிலும் வந்து அவரவர்க்கமைந்த இடங்களில் அமர்ந்தனர்.

திருமணவேளை நெருங்கியது. விண்ணவர் செவிகளும் செவிடு பட மங்கல வாத்தியங்கள் முழங்கின. தேவரும் மக்களுட் பெரியாரும் சான்றுய் நிற்க, மண



வினைக்குரிய சடங்குகள் நிகழ்ந்தன. புலவர் பலர் புகழ்ந்து போற்ற, அழுந்தூர் வேள் தம் மகளை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னிக்கு மனமுவந்து கொடுத்தார். அந்தணர் பலர் ஆசி கூறினர். பேரிளம் பெண்டிர் பல்லாண்டு பாடினர். அங்கு நிறைந்திருந்த புலவர்க்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்பப் 'பரிசில் வழங்கப்பட்டன.

மண வினை நிகழ்ந்த மண்டபத்தே பலர் முன்னிலையில் அழுந்தூர் வேள் புலமை சிறந்த தம் மைந்தராகிய இரும்பிடர்த்தலையாரைச் சோழ நாட்டின் நலத்தின் பொருட்டுப் பணி புரிகவென அரசரிடம் நண்பும் பணியும் பூணுமாறு விட்டார். சேட்சென்னியும் இளஞ்சேட்சென்னியும் இச்செய்தியை யறிந்து, மிகவும் சந்தோஷித்தனர். பிறகு வந்திருந்தார் எல்லாரும் விருந்துண்டனர். மங்கலத் திருவிழவிலே சில தினங்கள் சென்றன. பிறகு மண வினை காண்டற்பொருட்டு வந்திருந்தோ ரெல்லாம் அரசரிடம் விடை பெற்றுத் தத்தம் ஊர்களுக்குச் சென்றனர். அழுந்தூர் வேளும் தம் மகள் பொருட்டுத் தாம் செய்தற்குரிய சிறப்பை யெல்லாம் செய்து, அரசர் அனுமதி பெற்று, மைந்தரிடமும் மகளிடமும் அரிதின் விடை பெற்றுத் தம்மூர் நோக்கிச் சென்றார். உறையூர் நகரிலே, முன்போல அரசுரிமைச் சுற்றத்தா ரெல்லாம் தத்தம் பணியை மேற்கொண்டு அற நெறி வழாது நடந்து வந்தனர்.

நாடெங்கும் செல்வம் வளர்ந்தது. வியாபாரமும் விவசாயமும் கைத்தொழில்களும் விருத்தியாயின. தமிழகத்தே சோழ நாட்டுக்கிணையான நாடு இல்லை

யென்று கூறத் தக்க நிலை வந்தது. மன்னனும் இளையோனும் அரசின் நிலை உறுதிப்பட வேண்டுமென அயல் நாடுகளிலே அடிக்கடி போர் புரிந்து, நாட்டின் உருவைப் பெருக்க முயன்றனர். அரசுரிமை, சேட்சென்னி மகனில்லாது விண்ணகம் சேர்ந்தால், தமக்கு வரலாமேயென்று கருதுவோர் சிலர், தம் முயற்சிகளை மறைவாக நடத்தி வந்தனர். இளஞ்சேட்சென்னியின் வீரத்தையும் போர்த் திறத்தையுங் கண்டு அவரெல்லாம் வெளிப்படையாகத் தம் கருத்துக்களைத் தெரிவிக்கவும் வேண்டிய முயற்சிகளைச் செய்யவும் அஞ்சியிருந்தனர். புலவர் பலர் உறையூரை யடைந்து, அரசன் ஆதரவு பெற்று வாழ்ந்தனர்.

உருவப் பஃறே ரிளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேள் மகளை மணந்து இரண்டாண்டுகள் ஆயின. இறைவன் திருவருளால் அவள் வயிறு வாய்த்தனள்; உத்தம விலக்கணம் அமைந்ததொரு நன்னாளிலே நல் வேளையிலே ஓர் ஆண் மகவை யீன்றனள். இந்நற்செய்தி கணப் பொழுதில் நாடெங்கும் பரவியது. உறையூர் நகரெங்கும் அலங்காரங்கள் செய்யப்பெற்றன. நாட்டினர் அனைவரும் தத்தம் மனையகங்களிலே மங்கல விழாக்கொண்டாடினர். அரசுரிமையிலே உறவின்முறை பற்றி உரிமை கொண்டாடி மறைவான முயற்சிகள் செய்தோர் மனத்திலே பகை நெருப்பு எழுந்தது. ஒரு செய்தி சிலர்க்குத் தீதாகத் தோன்றுவது, அது பலர் நன்மைக்காக வந்ததேயாயினும், உலகத்தில் இயல்பேயன்றோ?



நாடெங்கும் உள்ள திருக்கோயில்களிலே சிறப்புக்கள் செய்யப்பெற்றன. தகுதியுடையார் பொருட்டுத் தான தருமங்கள் செய்யப்பெற்றன. சிறையகத்திருந்தாருட் பலர் விடுவிக்கப்பெற்றனர். நாட்டு மக்கள் இரண்டாண்டுகளுக்கு அரசிறை இறுக்க வேண்டாவென முரசறையப் பெற்றது. வறியார் பலர் அரண்மனையிலே வேண்டுமளவு பொன்னும் பொருளும் உடையும் உணவும் பெற்றனர். பாணரும் விறலியரும் பொற்பூவும் பொன்னும் பெற்றனர். புலவர் பலர் வந்து வாழ்த்திப் பரிசில் பெற்றுச் சென்றனர்.

நிமித்திகருட் சிறந்தார் பலர், அரண்மனை யடைந்தனர். அவர்கட்கென வமைத்ததொரு மண்டபத்திலிருந்து அரசிளங் குமரன் ஜாதகம் கணிக்கத் தொடங்கினர். அவர்கள் அனைவரும் நெடுநேரம் நன்கு ஆலோசித்துத் தம்முள் முதியார் ஒருவரை அரசர் திருமுன்பு அனுப்பினர். சேட்சென்னியும் இளஞ்சேட் சென்னியும் இரும்பிடர்த் தலையாரும் ஒரு தனியறையில் அமர்ந்திருந்தனர். நிமித்திக முதியார் அங்கு வந்தடைந்தார். அவர் அரசனால் முகமலர்ச்சியோடு வரவேற்கப் பெற்றுப் பிறகு அங்கு இருந்ததோர் ஆதனத் தமர்ந்தனர். பிறகு அங்குப் பின் வருமாறு சம்பாஷணை நிகழ்ந்தது :

அரசன்:—பெரியீர், நும் நூற்பயிற்சியினால் நீவிர் அறிந்தவளவு நம்செல்வன் எதிர் கால வாழ்வின் நிலையை ஒருவாறு கூறலாமே!

இரும்பிடர்த் தலையார்:—நிமித்திகப் பெரியீர், இந்நாட்டின் நலங் கருதி உதித்திருக்கும் இளஞாயிற்றின்

வருங்கால வரலாற்றிலே நீவிர் காண்பவற்றுள் ஒன்றும் ஒளியாது கூற வேண்டுகிறேன்.

நிமித்திகர் :—அரசர் பெருமானே, இளைய வேந்தரே, பிடர்த்தலைப் பெரியீர், என் நூற் பயிற்சியாலும் அநுபவத்தாலும் தெளிவாக அறியும் சில வுண்மைகளை இங்குக் கூறுகின்றேன் : நான் சொல்லும் செய்திகள் எல்லாம் நல்லனவாய் இருக்க வேண்டு மென்பதே என் நோக்கம். இப்பொழுது நம் நாட்டின் நலங் கருதி இறைவன் திருவருளாற் பிறந்த செல்வன் உயர்ந்த வாழ்வு பெறுவன் என்பதில் ஒரு சிறிதும் ஐயுறவில்லை. நீண்ட ஆயுளும் வெற்றித் திருவும் பெருமையும் செல்வமும் பெறுவான் என்பதும் உண்மையே. நம் அரசினர் குடியிலே இவனுக்கு முன்னும் பின்னும் இத்தகைய புகழ் படைத்தாரும் படைப்பாரும் இலர் என்று எவரும் கூறலாம். படி புகழ் பெற்று வாழ்வான் என்பது ஒளி நூலார் கருத்தாம். கல்வி அறிவு ஆண்மை அழகு வீரம் திறமை யெல்லாம் இவனை யடைந்து அழகு பெறும். இந்த அரச மரபே, இச்செல்வன் பிறந்ததால், மிக்க சிறப்படையும். உலக வாழ்வு முழுவதும் இன்ப மயமாகவே இருப்பதில்லை யென்பதை நீவிர் அறிவீர். இளம்பருவத்திலே இவ்வரசிளஞ் சிங்கம் சிறிதளவு துன்பம் அடைவான். சிறைக்களத்தே சில நாள் இவன் வாழவும் நேரிடும் என்று தோன்றுகிறது. பிறகு நெருங்கிய உறவினர் ஒருவர் உதவியாலே மறைந்து வாழ்ந்திருந்து, இறைவன் திருவருளால் அரசுரிமை பெற்றுப் பின்னர்ப் பகைவரை யெல்லாம் அடக்கி வாழ்வன் என்று கூற வேண்டும். உலகிற் பிறந்தார் எவரும் துன்



பம் துய்த்த பிறகு இன்பம் அடைவாராயிற் பெரிதும் மகிழ்ச்சி பெறுவரன்றோ? அரசர் பிரானே, இனி நான் இதைப்பற்றி அதிகம் கூறுவதற்கில்லை.

அரசன்:—பெரியீர், நானும் என் இளையோனும் இருக்கும்போது எம் குலத்தோன்றலாகிய இச்சிறுவன் சிறையகப்படுவான் என்று நீவிர் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

நிமித்திகர்:—அரசர் பெருமானே, நீவிர் இருவீரும் இருக்கும்போது இளவரசன் சிறையகப்படுவான் என்று நான் கூறவில்லையே! இளம்பருவத்தே சிறை வாழ்வும் பிறகு சில நாளைக்கு மறை வாழ்வும் பெறுவான் என்றன்றே கூறினேன்? இளவள ஞாயிறு தோன்றுங் காலத்தே திங்களும் உடுக்களும் மழுங்குவது காண்போமன்றோ?

இரும்பிடர்த் தலையார்:—இறைவன் திருவருளால் எவ்வாழ்வு வரினும் அறிவுடையார் அதைப்பற்றி மனத்திலே ஒருவகை மாறுபாடும் கொள்ளாது அமைதியோடு அநுபவித்தல் வேண்டும். அரசரே, இளைய வேந்தரே, இனி நிமித்திகர்க்கு உரிய சிறப்புச் செய்வோம். அவர் சொல்ல உரியவற்றை யெல்லாம் சொல்லிவிட்டார். சொல்ல மனமின்றி மறைக்கும் செய்திகள் உளவாயின், அவற்றை நாம் கேட்டறிய முயலுதல் முறையாகாது.

அரசன்:—அவ்வண்ணமே யாகுக. நிமித்திகப் பெரியீர், இனி நீர் நும் இனத்தவரோடு நம் அமைச்சர் தரும் சிறப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இந்த முத்து மாலையை நான் நுமக்குச் சிறப்பாகக் கொடுக்கின்றேன்; பெற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.

**இளையோன்:**—நிமித்திகப் பெரியீர், இந்தப் பொற்பூமாலையையும் பெற்றுக்கொண்டு எம் குலத் தோன்றலை வாழ்த்த வேண்டுகின்றேன்.

**நிமித்திகர்:**—அரசர்காள், இறைவன் திருவருளால் இச்சோழர் குலத்தோன்றல் வாழ்வதற்குரிய பல்லாண்டுகளும் நல் வாழ்வு பெற்று இன்பமும் அன்பின் செல்வமும் படைத்து வாழ்க. பிடர்த்தலைப் பெரியீர், ஒளிநூலுண்மை நீவிர் அறியாததன்று. இனி வருவனவெல்லாம் நீரும் அறிவீர். எல்லாம் நலமாகுக.

பின்னர் நிமித்திகர் விடை பெற்றுச் சென்றார். அதன் பிறகு பிடர்த்தலையாரும் அரசனும் சிறிது நேரம் பேசியிருந்தனர். இளைய வேந்தனும் தன் கருத்துக்களைத் தெரிவித்தான். பிடர்த்தலையார் நிமித்திகர் கூறிய வுண்மைகளை விளக்கிக் கூறினர். பின்னர் அரசன் சிறிது நேரம் எண்ணமிட்டனன்.

**இளையோன்:**—அரசரே, இனி என்றோ வரும் ஒரு தீமையைக் குறித்து இன்றே நாம் சிந்தித்து மனங் கலங்குவதேன்? நம் குலத் தோன்றல் மிகவும் இளம்பருவத்தே நம் ஆதரவை இழப்பான் என்று நாம் அறிந்தோம். அரசராய்ப் பிறந்தோர் போர்க் களங்களிலே விழுப்புண் பட்டுமாயும்பேற்றைப் பெறுதல் பெருமையேயன்றோ? அவனும் சிறுவனாயிருக்கையில் நாம் இருவரும் இறைவன் அடிநிழல் அடைய நேரிடுமாயின், நாட்டின் நிலை என்னாகும் என்று நாம் ஏன் யோசிக்க வேண்டும்? எத்தனையோ ஆயிர வாண்டுகளாக இந்நாட்டினையும் நம் மரபினையும் காத்து வந்து நமக்கு வேண்டும் நலங்களெல்லாம் உதவிய இறைவன், இன்று எங்குற்



றான்? நம் நாட்டிற் போர்க் களத்திலே உயிர் துறத்தற்குப் பின்னிடைவார் இலர். நம் சிறுவனைப் பற்றிய பொறுப்பெல்லாம் நிமித்திகர் குறிப்பித்த வண்ணம் ஒரு நெருங்கிய உறவினர் கையில் அமையவேண்டுவது முறையேயாம். நான் அறிந்த மட்டில் இங்கு நம்முடனிருந்து இவ்வுண்மையை யெல்லாம் அறிந்திருக்கும் இப்புலவரைக்காட்டிலும் இவ்வரும்பணிக்குத் தகுதியுடையார் வேறு எவரும் இல்லை. தீது வருக! நலம் வருக! யாவும் இறைவன் செயல்!

**அரசன்:**—நாம் அறிய வேண்டா என்று நிமித்திகர் மறைத்த செய்தியை அறிய விரும்பியதால், இத்துணை மனக் கவலையடைய நேரிட்டது. மக்கள் எதிர்கால விளைவை அறியவேண்டாவென மறைத்து வைத்த இறைவன் திருவுள்ளக்கருத்தை யாரே யறிவார்! பிடர்த்தலைப் பெரியீர், இனி நீர் நம் குடித் தோன்றலின் வாழ்விலும் உயர்ச்சியிலும் நாட்டமுடையீரா யிருந்து, இந்நாட்டுக்கு நும்மால் இயன்றது புரிவீராக.

**பிடர்த்தலையார்:**—அரசரே, இளங்குமரன் ஒருவன் தோன்றியிருக்கும் இந்நாளிலே நாடெங்கும் மகிழ்ச்சி பொங்க, அரசர் மனம் எதிர்கால வுண்மையையெண்ணிக் கவல்வதேன்? இந்நாட்டின் நலங்கருதி எது செய்ய வுரியதாயினும், என்னால் இயன்றவரை செய்தற்குத் தடையுளதோ? என் தந்தையார் என்னை நும் அரசிற்குதவியாம் பணி பூணுமாறு அமைத்த நாள் முதல், எனக்கென வொன்றுமின்றி, எல்லாம் இந்நாட்டின் பொருட்டும் நும் மரபின் நலத்தின் பொருட்டுமேயென யான் கருதி வாழ்ந்து வருகின்றேன். என் கடமையை

யான் நிறைவேற்றுவதற்கு நும் ஆணையும் பெற்ற பின்னர் யான் பின்னுறலாகுமோ? இனி நாம் இம்மங்களச் செய்தி கருதி நுங்களைக் காண வந்திருக்கும் புலவர் பலர்க்கும் பிறர்க்கும் உரிய சிறப்புக்கள் செய்தற்குரிய இடத்துக்குச் செல்வோம்.

பின்பு அம்மூவரும் புலவோரவைக்களம் சென்றனர்.

## III

சோழர் குடி விளக்கமாகப் பிறந்த இளவரசன் திருமாவளவன் என்ற பெயர்பூண்டு வளர் பிறை போல வளர்ந்து வந்தான்; ஐந்தாம் பருவம் அடைந்தான்; அறிவுடைப் பெரியார் பலர் முன்னிலையில் வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்றான். கல்விச் செல்வம் பொருட் செல்வத்தோடு பொருந்துவது பெருஞ்சிறப்பாமன்றோ? இளவரசன் கலை வளர்ச்சியை இரும்பிடர்த் தலையார் நன்கு கவனித்து வந்தார். நாடெங்கும் அமைதி குடி கொண்டிருந்தது.

சேட்சென்னிக்குப் பிறகு அரசுரிமையை நாடுவோம் என்று எண்ணி மறைவில் முயன்ற பலரும் ஒன்று சேர்ந்தனர். அவருள் மிக்க வுரிமை தனக்கிருப்பதாய்க் கருதிய வொருவன் தலைமை பூண்டான். அவன் மற்றெல்லோர்க்கும் தான் அரசுரிமை பெறும்போது தக்க பதவிகள் அளிப்பதாகக் கூறி அவர்களை வசப்படுத்திக்கொண்டான்; சோழ நாட்டுக்கு அருகிலுள்ள காடுகளிலே தன் முயற்சிகளைச் செய்து பெரும்படையைத் திரட்டிப் போர் தொடங்கி வந்தான்.

இச்செய்தியை ஒற்றாலும் பிற வாயில்களாலும் அறிந்த சேட்சென்னியும் இளஞ்சேட் சென்னியும் தம் படையைத் திரட்டி, உறையூர்க்குப் புறத்தேயுள்ள

பறந்தலை யடைந்தனர். சோழர் குடி விளக்கமாகிய திருமாவளவன், ஏழாண்டு நிரம்பப் பெறாதவனாயிருந்தானாகையால், அரண்மனை யகத்திருந்தான். அரசர் இருவரும் போர்க்களம் செல்ல நேரிட்டதால், இளவரசன் அதிக ஆடம்பரமின்றி முடி சூட்டப் பெற்றான். இரும்பிடர்த்தலையாரும் காவற் படைஞரும் அவனுக்குதவியாக நகரகத்தே யிருந்தனர்.

போர்க்களத்தே பகைப் படையும் நாட்டுப் படையும் எதிர்த்து நின்று போர் தொடங்கின. பகைவன், "இளஞ்சிறான் ஒருவன் கையில் இச்சோழர் குடிக்குரிய அரசுரிமை இருக்க விடேன்," என்ற உறுதி கொண்டு போர் புரிந்தான். அவனுக்குதவியாய் வந்தோர் பலர் இருந்தாராதலால், சோழர் இருவரும் மிக்க கடும்போர் செய்ய நேரிட்டது. சேட்சென்னி நின்ற பகுதியிலே பகைவரில் எண்ணிறந்தார் மடிந்தனர். மாலைக் காலம் குறுகியது. அவ்வமயத்திலே அறநெறிக்கு மாறாகப் பகைப்படையிலிருந்து வந்த நஞ்சூட்டிய அம்பொன்று அவன் மார்பிற் பாய்ந்தது. உடனே அவன் இறைவன் திருவருளை யெண்ணி நிலத்தே சாய்ந்தான். அருகிலிருந்தார் அவனைப் பாசறைக்கிட்டுச் செல்ல முயன்றனர். அவன் இடை வழியிலேயே விண்ணகம் புகுந்தனன். படைஞர் அவன் உடலைச் சுமந்து சென்றனர். இச்செய்தி யறியாமல், மற்றொரு புறத்தே போர் புரிந்து வெற்றி பெற்றுப் பாசறைக்குத் திரும்பிய இளஞ்சேட்சென்னி, அங்கு வந்ததும் இறைவன் அருட் செயல் இருந்தவாற்றை யறிந்து, மூத்தோனுக்கு அந்நிலையிற் செய்தற்குரிய கடனெல்லாம் செய்து முடித்தான்.



மறு நாளும் போர் நிகழ்ந்தது. இளஞ்சேட்சென்னியின் போர்த் திறத்தாற் பகைவரிற் பெரும்பாலோர் விண் புகுந்தனர். எஞ்சி நின்றோர் காட்டகத்தே புகுந்து மறைந்தனர். பெரும்படையோடு இளையோன் அவரைத் தொடர்ந்து சென்றான். காட்டகத்தே பலர் பல விடங்களிலும் மறைந்து நின்று போர் புரிந்தனர். அநேகர் அழிந்தனர். சிலர் பணிந்தனர். பகைவருட் டலைமை பூண்டோர் எவரும் வெளி வராது காட்டுள் மறைந்தனர். இத்துணை நாள் போர்க்களத்தே யிருந்தது போதும் என்று எண்ணிய இளையோன் நாடு நோக்கித் திரும்பினன்.

உடம்பெல்லாம் அம்பு பாய்ந்து புண் பட்டு வீரச் சிறப்போடு வெற்றித் திருவைப் பெற்ற இளஞ்சேட்சென்னி நாட்டகம் புகாமுன்னரே, விண்ணவர் அவனை எதிர்கொண்டழைக்கலாயினர். அதனால், மிகவும் இளம் பருவத்தே திருமாவளவன் அரசப் பொறையைத் தானே வகிக்க நேரிட்டது. தாயார் அனைவரும் தம் கணவன்மார் சென்றவழிச் செல்லக் கருதி உயிர்துறந்த துயரக் காட்சியையுங் கண்டான். அவன் உள்ளத்திலே எழுந்த உணர்ச்சி இன்னதென்று கூறக் கூடாத நிலைமையன் ஆயினன்.

இரும்பிடர்த் தலையார், முன்னே நிமித்திகரால் அறிந்த செய்திகள் உண்மையில் விளைந்தது கண்டு உள்ள முருகி, நாட்டுக்குக் கேடுண்டாகா வண்ணம் காவல் புரியத் தக்க படைஞரை யமைத்தனர். ஆயினும், காட்டுள் மறைந்த பகைவர்கள், அரசர் இருவரும் இறந்த செய்தி யறிந்து, பின்னும் பல உதவிப் படைக

ளைத் திரட்டிக்கொண்டு நாட்டினகத்தே வந்து, உறையூர் அரணை முற்றுகையிட்டனர். இரும்பிடர்த் தலையார் இளங்குமரனாகிய அரசனை முன்னிறுத்திப் படைஞரை யெல்லாம் அறநெறி பிழையாது போர் புரியத் தூண்டினர்.

படைஞர் தம்மால் இயன்றவளவு போர் புரிந்தனர். தக்க தலைவர் இல்லாமையால், அவர்தம் முயற்சியெல்லாம் வீணாயிற்று. ஐந்து நாட்கள் வரையிற் பெரும் போர் நிகழ்ந்தது. இறுதியிற் பகைஞர் வென்றனர். அரசுரிமையை நாடிய கொடியோன் விரைவிலே அரணுக்குட் புகுந்து அரண்மனை யடைந்து, பிடர்த்தலைப் பெரியாரையும் திருமாவளவனையும் சிறை செய்தான். நல்லோ ரெல்லாம் நாடு என்னாகுமோ என அஞ்சினர். எவரும் தாராமலே, யாதோர் உரிமையும் இல்லாமலே பெற்ற அரசுரிமையை அக்கொடியோன் ஏற்றுக்கொண்டான்; பிடர்த்தலையாரை அரசாங்கத்துப் பெருஞ்சிறைக் களத்தே அடைத்து வைத்தான்; இளவரசனை அரண்மனை யகத்தே ஒரு தனியிடத்தே தக்க காவலோடு வைத்திருந்தான்.

நாடெங்கும் அரசு நிலை மாறிய செய்தி பாவத் தொடங்கியது. நல்லோர் மனம் புழுங்கினர்; தம்மனத்தி லெழுந்த கருத்துக்களை அடக்கலாற்றாது சொல்லத் தொடங்கினர். தன்னரசின் நிலைமையைப்பற்றி மக்கள் பேசுவதை யறியப் புதிய மன்னன் பல ஒற்றரையமர்த்தி யிருந்தான்; அவர் தினந்தோறும் கொணரும் செய்திகளை யறிந்து மனம் புண்ணானான். போரின் பொருட்டு நேரிட்ட செலவை யெல்லாம் நாட்டு மக்களிடம் வரி



தண்டம் விதித்துத் திரட்டத் தொடங்கினான். இது பற்றியும் பலர் தம் உண்மைக் கருத்துக்களை வெளியிட்டுரைத்தனர்.

புதிய அதிகாரிகள் சிலரை அவன் அமர்த்தினான்; விசாரணையும் கேள்வி முறையும் இன்றியே தன் அரசிற்குப் புறமான கருத்தையுடையாரென ஒற்றின் மூலம் அறிந்த நல்லோர் பலரையும் சிறையிட்டான். அதனால், நாட்டகத்தே புறங்கூறிப் பொய்பேசி யுயிர்வாழும் புல்லியோர் பலர் திரிதலாயினர். நல்லோர் எல்லாரும் சிறைக் களம் புகுந்தனர். உண்மை யுரைப்போர்க்கும் அறநெறி புகல்வோர்க்கும் சோழ நாட்டகத்தே இருப்பதற் கிடமில்லையாயிற்று.

அரண்மனையகத்தே சிறைப்படுத்தி யிருந்த அரசிளங்கோவைப் புதிய மன்னன், நாட்டு மக்கள் எவரும் அறியா வண்ணம் ஒரு பெருஞ்சிறையிலே மறைவானதொரு இடத்திலே அடைத்து வைத்தான்; இரும்பிடர்த் தலையாரையும் சிறையகத்தடங்கிய பிற புலவரையும் சிறைவீடு செய்து சோழ நாட்டின் புறத்தே செல்லுமாறு ஆணை பிறப்பித்து, அனுப்பினான். இரும்பிடர்த் தலையார் பாண்டி நாடு நோக்கிச் சென்றார். அவர் எண்ணமெல்லாம், “அரசனை எவ்வாறு சிறையினின்று மீட்பது? எவ்வண்ணம் முன்போல அரசு புரியச் செய்வது?” என்பன பற்றியே யிருந்தது.

பாண்டிய மன்னர் சேர மன்னர் என்ற இருவருள் எவரேனும் சோழனுக்கு உதவியாய் நிற்க முன் வருவரோவென அறிய முயன்றனர் பிடர்த் தலையார். அவர் முயற்சி அத்திசைகளிற் பலிக்கவில்லை. அவர் பாண்டிய

நாட்டிலே சிறிது பரிசு பெற்றுச் சேர நாட்டிலே சென்று,
கருவூரிலே தங்கியிருந்தார்; கருவூரிலே ஏழைக் குடிகள்
வாழும் ஒரு சிறிய தெருவிலே பிறர் அறியா வண்ணம்
மறைவாக வாழ்ந்து தம் எண்ணம் நிறைவேற வேண்டிய
முயற்சிகளைச் செய்து வந்தார்.

அவர் அங்கு இவ்வாறிருக்கையில், திருமாவள
வன் சிறைக்களத்தே யடங்கியிருந்தான்; பெற்றோரை
யிழந்து, அரசுரிமையை யிழந்து, பெற்றோரினும் உற்றோ
ராயிருந்த பிடர்த்தலைப் பெரியாரைப் பிரிந்து, இன்னது
செய்வது என்று அறியாது மயங்கினான்; சிறைக்களத்தே
சில நல்லோர் அடைபட்டிருப்பதையும் அறிந்தான்.
இரண்டு மூன்றாண்டுகள் சென்றன.

அரசுரிமையை மறப் போரால் தன் கைக்கொண்ட
கொடுங்கோலன், நல்லோர் பலரைச் சிறைக் களத்திட்டும்,
சிலரை நாட்டினின்று அகலச் செய்தும், அரசிளஞ்
சிங்கத்தைச் சிறை செய்தும் திருப்தி யடையாது, தன்
தலைமை நிலை பெறுதற்காக ஒரு சூழ்ச்சி செய்தான்:
தான் செய்திருக்கும் அதிக்கிரமச் செயல்களைக் கண்டு
குடி மக்கள் எதிர்த்து நில்லாமையால், மேலும் மேலும்
தான் எண்ணிய வண்ணமெல்லாம் நிறைவேற்றலாம்
என்று உறுதி கொண்டான்.

குடி மக்களுள் நல்லோர் பலர் சிறைக் களத்தே
அடங்கியிருப்பினும், சிறைப் புறத்தே யிருந்தாருட் பல
ரும், "எப்பொழுது தகுதியான காலம் வரும்? இந்தக்
கொடியோனை எப்பொழுது எதிர்க்கலாம்?" என்றே
எண்ணமிட்டிருந்தனர். இரு திறத்தாரும் ஒருவர்க்



கொருவர் மாறுபாடாகச் செய்து வரும் சூழ்ச்சிகள்
மறைவிலே எவரும் அறியா வண்ணம் நடந்தன.

இளவரசன் ஒருவன் உயிரோடு இருப்பது தன்
அரசாட்சிக்குப் பெருத்த இடையூறாகும் என்று அக்
கொடியோன் எண்ணினான். 'இளவரசன் ஒருவன்
இருந்தாலன்றோ அரசுரிமையை அவனுக்குத் தரவேண்டி
நன்மக்கள் என்னை எதிர்ப்பர்?' என்று தீர்மானம் செய்
தான். "குடி மக்கள், தமது அன்புக்கு இடமாகிய இள
வரசன் ஒருவன் இல்லாது போவானாயின், நாட்டின்
அமைதியைக் குலைத்து வீணே நாட்டினை அரசின்றி
யழியச் செய்யார்," என்று அவன் மனப்பால் குடித்
தான்; அறத்திற்கும் உண்மைக்கும் நன்மைக்கும்
மாறாகிய இத்தன்மையான பல வகை யெண்ணங்களையும்
எண்ணி ஒரு முடிவு செய்தான்.

அவனை யெதிர்த்துத் தாக்கக் கருதிய குடி மக்கள்
செய்த சூழ்ச்சிகளும் ஒரு முடிவுக்கு வந்தன. "இவன்
கொடியோனாயினும், நம் இளவரசைச் சிறையகப்படுத்தி
யுளனாயினும், நமக்கு இப்பொழுது படைஞர் உதவி
யின்மையால், நாம் என்ன செய்ய இயலும்?" என்றார்
ஒரு சிலர். "நல்லோர் பலரைச் சிறையிட்டானாயினும்,
சிலர்க்குக் கடுந்தண்டம் விதித்தானாயினும், நம்மை முன்
னின்று நடத்த வுரியார் ஒருவரும் இல்லாத இந்நிலை
யில் நாம் என் செய்வோம்?" என்றார் வேறு சிலர்.
"சிறையகத்தே புகுந்தார் எவர்க்கும் இவன் பெருந்துன்
பம் விளைத்திருப்பதாக இதுவரை மறைச் செய்தி
ஒன்றும் வெளி வாராமையாலும், நம் அரசரை இவன்
மரியாதையாக நடத்துவதாகவே நாம் அறிந்த சிலர்

உண்மையை யுணர்ந்து கூறுகின்றமையாலும், நாம் இப்பொழுது இவனை யெதிர்க்கத் துணிவது குற்றமே. நம் முயற்சியின் பயன் தீங்காய் முடியினும் முடியலாம்,' என்றார் மற்றும் சிலர். "சிறையகத்தே யிருக்கும் அரசர்க்கும் சான்றோர்க்கும் இவன் எத்தகைய வாழ்வு கொடுத்துள்ளான் என்பதை நாம் அறியோம். என்றேனும் பெருந்தீங்கு இயற்ற இவன் எண்ணி முயல்வதாக அறிவோமாயின், அன்று நாம் அனைவரும் ஒருங்கு சேர்ந்து இவனை எதிர்ப்போம்," என்று கூறினர் பின்னும் சிலர்.

இவ்வாறு குடி மக்களுட் பலர் தன் அரசாட்சியில் வெறுப்புக்கொண்டிருப்பதை அறிந்தும், அக்கொடுங்கோலன் அதனைப் பொருட்படுத்தாது, தன் சூழ்ச்சியினை நடத்தி வந்தான். அரசிளஞ் சிங்கமான திருமாவளவன் அடைபட்ட சிறைக்களம், பொது மக்கள் அறியா வண்ணம் மறைவாயிருந்தது. சிறை புகுந்த நல்லோர் பலர் உரிமைகளும் உடைமைகளும் அரசினருடையவாயின. புதுமை புதுமையாகப் பல வகையான அரசிறைகள் ஏற்பட்டன. கொடுக்க வியலாதவர் எல்லாம் கடுந்தண்டம் விதிக்கப்பட்டனர்.

அவன் ஒரு நாள் தன் அரண்மனையின் தனியறையில் அமர்ந்து, "திருமாவளவன் சிறியோன்! இச்சிறிய விடலையோ என் உரிமைகளுக்கு எதிராக நிற்பவன்! இவன் வலிமை யென்னே! இவனைச் சார்ந்து நிற்கும் வீரர் வலிமை யென்னே! இவன் தந்தையும் அரசரும் என்னை யெதிர்த்து என்னாயினர்? இவன் சிறைக்களத்தே யடங்கியிருப்பினும், என் மனம் அமைதி



பெறவில்லையே! இதற்கு என் செய்யலாம்? கொலையாளிகளைக் கொண்டு கொல்விக்கலாம் என்றால், அச்செய்தி விரைவிலே நாடெங்கும் பரவி என் அரசாட்சிக்குத் தீங்காக முடியினும் முடியும். பலரைச் சிறைக்களப்படுத்தியதால், அவரை ஆதரிக்கும் பொறுப்பெல்லாம் அரசினர்க்காயிற்று. நான் அவரை யாதரிக்கும்பொருட்டு அவர்தம் உடைமையெல்லாம் கைக்கொள்ள நேரிட்டது. இந்நாட்டின் வருவாய் செலவுக்கு மேல் அதிகமாக இல்லையே! எத்தனை நாட்களுக்கு நூற்றுக் கணக்காக ஒற்றரையும் பெரும்படைத் தொகையினரையும் துணையென்று நம்பியிருப்பேன்? என் மனம் என்று நிம்மதியடையும்? இத்தனைப் புகழ் படைத்த அரசுரிமையைத் தேடியும் என் மனம் கலங்கலாகுமோ? கலக்கத்துக்குக் காரணராக இருப்பவரெல்லாம் அழிந்தால், கலக்கம் தானே அழியும். பெருஞ்சிறைக்களத்தே என்னைப் பகைத்தார் பலர் புகுந்திருக்கின்றனர். இளவரசனும் பிறர் அறியாவண்ணம் அங்கேயே மறைந்திருக்கின்றான். இவரனைவரும் ஏக காலத்திலே தென்றிசை நோக்கற்கு யான் என்ன செயலாம்? எதிர்பாராவண்ணம் ஒரு நாள் இரவிலே இச்சிறைக்களத்திலே நெருப்புப் புகுமாயின், என்ன பயன் விளையும்? என் எண்ணமெல்லாம் நிறைவேறும். ஆகையால், நினைத்த வண்ணமே நிறைவேற்ற முயல்வேன். என் கருத்துக்கொப்ப நடக்கும் ஏவலருள் ஒருவனை இப்பணியை முடிக்க அனுப்புகின்றேன்," என்றாலோசனை செய்து, ஒரு முடிவிற்கு வந்தான்.

இவ்வாறு முடிவு செய்து, பிறகு, அவன் தன் மனம் அமைதி பெற்றதாய் எண்ணி, அரண்மனைக்குட் சென்றான்; ஓர் ஒற்றனை யழைத்துத் தன் கருத்தைக் குறிப்பாற் கூறி, வேண்டுவன நிகழ்த்தச் செய்தான்.

# IV

பெருங்காற்று வீசியது. அருகில் நிற்பாரை அறியலாகா விருள் சூழ்ந்தது. மக்களும் மாக்களும் அஞ்சி அகத்தே யடங்கும் நள்ளிரவு வந்தது. காவலரும் கள்வருமன்றிப் பிறர் எவரும் நடமாட அஞ்சுகின்ற நடுநிசிப் பொழுதிற் காற்றின் வேகம் அளவிடற்கரிதாயிருந்தது. எவரும் எதிர் பாராத வண்ணம் அவ்வமயத்திலே அரசாங்கத்துப் பெருஞ்சிறைக்களம் தீப்பற்றியது. அகத்தும் புறத்தும் இருந்த மரங்களெல்லாம் பற்றி யெரிந்தன. கதவுகள் தூணங்கள் உத்திரங்கள் போதிகைகள் எல்லாம் தீப்பற்றிக்கொண்டன. பெருஞ்சிறைக்களம் ஓரே தீப்பிழம்பாக ஒரு காத தூரத்துக்கு விளக்கமாகத் தெரிந்தது. அந்நெருப்பின் வேகத்தால் உண்டான தாபம் எங்கும் பரவியது.

உறக்க மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த பலரும் பதற்றத்தோ டெழுந்தனர். செய்வதறியாது மருண்டனர் சிலர். ஒருவர்மே லொருவர் மோதி, விழித்ததும் விழியாததுமாக விழுந்தோடினர் சிலர். கச்சங்களை வரிந்து கட்டிக் குடங்களைத் தூக்கிக்கொண்டு தண்ணீர் இருக்குமிடங்களுக்கு ஓடித் தங்கள் தங்கள் வீட்டுக் கூரைகளில் நீர் இறைத்தனர் பலர். வெகு பரபரப்பாக அயல் வீட்டுக் கூரைகளைப் பிரித்தெறிந்தார் சிலர். வேறொன்றும் செய்ய வியலாமையால், பெருங்குரலாற் பிறரை யேவிக்



கொண்டிருந்தார் சிலர். இவ்வாறு மக்கள் மயங்கும் அமயத்தே சிறைக் களத்தகத்தே பல நூற்றுக் கணக்கான நல்லோர் அடங்கி யிருந்ததைச் சிலர் அறிந்தனர். அவர் தம் மயக்கத்தை யொழித்து விரைவிலே சமயோசிதமான முயற்சி செய்யத் தொடங்கினர்.

நெருப்பினுக் கஞ்சாத நெஞ்சுடையோர் சிலர் புறப்பட்டனர்; சிறைக் களத்தைக் குறுகினர். எங்கு நோக்கினும் நெருப்பும் நெருங்க வியலாத புகையும் நிரம்பின. இக்காட்சியைக் கண்டும் அச்சங் கொள்ளாது சிறையகத்தே புகுந்தனர்; விரைவிலே பலரை விடுவித்தனர்; மறைவாக அமைந்த இடங்குகளை அறியாமல் தேடிக் கொண்டிருந்தனர். இவர் உதவியின்றித் தாமாகவே பலர் வெளி வந்தனர். சுவர்களின்மேற் பாய்ந்தும், தீயிடை வீழ்ந்தும், இடிந்த கட்டடங்களில் இடறி மறிந்தும், கால்கள் ஒடிந்தும், உடம்பு எங்கும் புண்பட்டு ஓடி வந்தனர் சிலர். சிறையிருப்பாரை விடுவிக்கச் சென்ற பலரும் நெருப்பின் கொடுமையைக் கண்டு விரைவிலே எங்கெங்கும் தேடித் தாம் எதிர் பார்த்த பொருளைக் காணாது ஏமாறியவர் போல வெளியேறினர்.

இதற்குள் சிறைக்கள வாயிலிலே எண்ணிறந்தார் கூடினர். சிறையிருந்து வருவாரும் விடுவிப்பாரும் இன்னார் இன்னார் என்று அறியக் கூடாதவாறு எல்லாரும் நெருப்புப் பற்றிய ஆடைகளோடு வெளிவந்தனர். உடம்பெல்லாம் தீப்பட்டு வெளி வாயில் வரை ஓடி வந்து விழுந்து இறந்தார் பலர். இக்காட்சியைக் கண்டு பொறாத நல்லோர் பலரும், "இத்தீயெழுந்த காரணம் என்னவாயிருக்கும்?" என்று யோசிக்கலாயினர். "அரசு பூண்டு

இருக்குங் கொடியோன், நல்லோர் பலரையும் சிறை செய்ததனோ டமையாது, அவர்களை நெருப்பினால் அழிக்கவும் துணிந்தான் போலும்!'' என்று கருதினர்; "அவ்வாறு அவன் கருதியிருப்பின், அவனுக்கு நேர் பகையாய் இருப்போர் நம் இளவரசரல்லரோ? அவர் இப்பொழுது என்னவாயினரோ! அறியோம்!'' என்று எண்ணமிட்டனர். "நம் இளவரசரும் இச்சிறைக்களத்திலேயே எங்கேனும் மறைவாக அடைக்கப்பட்டிருப்பார்,'' என்று சிலர் கூறினர். இச்சொல் செவிப்படு முன்பே, அங்கிருந்த சிலர், நெருங்கி வரும் நெருப்பை யஞ்சாது, மறு முறையும் சிறைக்களம் புகுந்தனர்; தம் உயிர் போவதாயிருக்கினும், தம் இளவரசைத் தேடிப் பெறவேண்டும் என்று முயல்வாராயினர். அவருட் பலர், திரும்ப வெளியேறவழியறியாது, இருந்த விடங்களிலே புகை சூழ்ந்துகொண்டதால், இளவரசர் பொருட்டுத் தம்முயிரைக் கொடுத்தனர். உட்புகுந்தாரில் மிகச் சிலரே வெளி வந்தனர்.

இத்துணைப் பெருங்கலக்கத்தினிடையில் திருமாவளவன் எங்கிருந்தனன்? என்னாயினன்? சிறைக்களத்தே பகைவர்களை யடைக்கப்படும் ஒரு பாதாளக் கிடங்கில் இருந்தான்; எங்கும் இருளே சூழ்ந்து கிடந்த இடத்தில் திடீரென்று வெப்பமும் வெளிச்சமும் தோன்றக் கண்டான்; காரணம் அறிய வழி தேடி மேலும் கீழும் பார்த்தான்; தீப்பற்றி யெரியுங் காட்சியைக் கண்டான்; தலைக்கு மேலே பெருங்கூக்குரல் உண்டாவதைக் கேட்டான்; கட்டடங்கள் இடிந்து விழும் சத்தமும், திடுதிடு என்று பலர் ஓடும் சத்தமும் கேட்டான்; கையில்



இருந்த விலங்குகளைக் கல்லிலறைந்து தகர்த்தான். "எதுவரினும் வருக,'' என்று மேல் நோக்கிச் சிங்கக் குருளை போல நின்றான்: தலைமேலிருந்த கட்டடம் இடிந்து விழக் கண்டான்; ஒரு புறமாக ஒதுங்கினான்; கல்லும் மண்ணும் மரங்களும் அவன் ஏறி மேற்செல்லத் தக்க படிபோல அமைந்தது உணர்ந்தான்; முன்னே என்ன இருக்கும் என்று அறியாமல் விரைந்து பாய்ந்தான்; ஓர் அடுக்கு மேலே சென்றான்; எங்கும் புகையும் நெருப்பும் சூழ்ந்து, இடை முற்றம் பாழாய்க் கிடக்கக் கண்டான். எவ்வாற்றாலேனும் வெளியேற வேண்டும் என்ற எண்ணமே முன்னின்றதால், நெருப்பையும் புகையையும் பொருட்படுத்தாது, வாயிலிருந்த திசையை நோக்கினான்; வழியோ, தடைபட்டு நெருப்பு மயமாகக் கிடக்கக் கண்டான்; முற்றத்திலே பாதி யெறிந்து கிடந்த பெருங்கட்டை யொன்றை மேன்மாடத்தை நோக்கி நிறுத்தினான்; அதன் உதவியால் மேலே ஏறினான். அவன் கால் வைத்த இடம் மேற் சென்றதும் கீழே சரிந்து விழுந்தது. மாடத்தின்மேல் எங்கும் நெருப்புக் கண்டான்: தாவித் தாவி இடை வெளிகளிற் கால் வைத்துக்கொண்டே வந்தான்: சுவரோரம் அடைந்தான். ஒரு பலகணி பற்றியெரிந்து கீழே விழும் நிலையில் இருப்பது கண்டான். அதைத் தள்ளிவிட வேண்டுமென்றால், நெருங்கிச் செல்ல வேண்டும். நெருங்கிச் செல்வதாயின், நெருப்பை மிதித்தல்வேண்டும். தள்ளினால், கீழே நிற்பார்க்குத் தீங்கு நேரினும் நேரிடலாம். ஒரு கணப் பொழுது யோசித்தான்: பிறகு சிறிது பின் வாங்கி, எரிந்துகொண்டிருந்த அப்பலகணியினூடே

அம்புபோலப் பாய்ந்து, புறத்தே வீழ்ந்தான். விழுந்த இடத்திலும் நெருப்பு மிகுந்திருந்தது. வெகு விரைவிலே இவ்வாறு விழுந்தவனைக் காப்பாற்ற வேண்டுமென்று சிலர் ஓடி வந்தனர். நெருங்கினோர் எவரும் அவனை இன்னான் என்று அறிந்திலர். அவன் பாய்ந்து வந்த வேகத்தில் கால்கள் கரிந்து கிடந்ததைக் கண்டனர்; மனமுருகினர். உடனே சிலர் சேர்ந்து அவனைத் தூக்கிச்சென்று அருகிலிருந்த மருத்துவரில்லம் அடைந்தனர். அவர் சுத்தமான தேங்காய் நெய்யையும் சுண்ணாம்பு நீரின் தெளிவையும் கலந்து, அப்புண்ணில் தடவினர். பிறகு உடன்வந்தார் அனைவரும் பிரிந்து சென்றனர். அறநெறியில் தலைநின்ற அம்மருத்துவர், அச்சிறுவன் இன்னான் என அறியாராயினும், நன்கு மருத்துவம் செய்தனர். பிறகு எவரும் அங்கு வந்து அவனைப்பற்றி விசாரிக்கவில்லை. முழுவதும் குணமாதற்கு முன்பு இரா வேளையிலேயே, மருத்துவரிடம் விடை பெறாமலே, அவன் வெளியேறினன்.

அவன், “சிறைக் களத்தே தீயிட்ட பகைஞர் இன்னும் என்னென்ன செய்வாரோ! இந்த இரண்டாண்டுகளாக நான் சிறையகம் இருந்தது போதும். இனி யெங்கேனும் சென்று மறையகத்து வாழ முயல்வேன். என் அருமை அம்மானார் இரும்பிடர்த் தலையார் எங்குற்றனரோ! அறியேன்!” என்று எண்ணமிட்டுக்கொண்டே விரைந்து நடந்தான். உடம்பிலே தீப்பட்டதால் உண்டான வருத்தத்தை மறந்து, எவரேனும் பின் தொடர்வரோ என்று பார்த்துக்கொண்டே விரைந்து நடந்தான்.

இதற்கிடையில் சிறைக் களத்தே நடந்த செய்தியைச் சிறிது கவனிப்போம்: அறிஞர் பலரும் நல்லோர்



பலரும் அங்கு வந்து கூடினர். அரசகுமாரன் சிறைக் களத்தினுள் அகப்பட்டிருப்பான் என்ற உறுதியோடு தேடச் சென்றோர் பலர் அடைந்த அல்லலையறிந்தனர்; மிகவும் மனங் கவன்றனர். சூரியனும் உதித்தான். பல பக்கங்களிலும் தேடுமாறு ஆட்கள் போயினர். ‘கால்கள் கரிந்த ஒரு சிறுவனை மருத்துவர் வீட்டில் விட்டோம்,’ என்று சிலர் கூறினர். அது கேட்டு, அங்கு ஓடிச் சிலர் தேடினர். அங்கிருந்து அவன் இரவிலேயே வெளியேறிப் போய்விட்டான் என்ற செய்தி வெளியாயது.

‘இளவரசனாகிய திருமாவளவன் அவன்றானோ, வேறு யாரோ!’ என்ற ஐயம் எழுந்தது. ஒவ்வொருவரும் தத்தம் மனத்தில் எழுந்த எண்ணங்களைக் கூறலாயினர். சிலர் கொடுங்கோலன் செய்த கொடுமைகளைக் கூறத் தொடங்கினர். சிறைக் காவலரும் பிற அரசாங்க ஏவலரும் இருந்த விடம் தெரியாமல் மறைந்தனர். சிறைக்களத்துக்கு முன்னே எண்ணிறந்த ஆடவர் கூடினர். அவரனைவரும், “இவ்வாறு நாட்டில் வாழ்ந்த நல்லோர் பலரைச் சிறைசெய்து அரசிளங் கொழுந்தைத் தீக்கிரையாக்கிய இக்கொடியோனை இன்றே, இப்பொழுதே, சென்று எதிர்த்து அழிப்போம்!” என்று பேசித் தீர்மானித்தனர்.

உடனே, எவரும் எதிர் பாரா வண்ணமாக அரண்மனையை நோக்கிப் பல்லாயிர ஆண் மக்கள் நிரம்பிய பெருங்கூட்டம் ஒன்று புறப்பட்டது. அவருள் வாய் வன்மைபடைத்தோரெல்லாம், “எங்கே அக்கொடியோன்? எம் அரசைக் கைக்கொண்டு நல்லோரையெல்லாம் சிறை செய்த அந்நரகன் எங்கு ஒளித்தான்? இளவரசைச்

சிறையிட்ட திருவிலி எங்குற்றான்? திருமாவளவனை எரிவாய் மடுப்பித்த தீயோன் எங்குளன்?" என்று கூக்குரலிட்டுக்கொண்டு சென்றனர்.

அரண்மனைக் காவலர் எல்லாம், இக்கூட்டத்தின் வருகையைக் கண்டு, இருந்தவிடம் தெரியாமல் ஒளித்தனர். படைஞரை முறையே நிறுத்தி எதிர்த்து வரத்தக்க ஆண்மை படைத்தார் எவரும் முன் வந்திலர். அரண்மனையகத்தும் புறத்தும் ஆத்திரம் மிக்க ஆடவர் சூழ்ந்தனர். சீறினர் சிலர்; பாய்ந்தனர் சிலர்; அரசிளஞ்சிங்கத்தின் கதியை நினைந்து கலங்கிக் கண்ணீர் வெள்ளம் பெருக்கினர் சிலர். "எம் நாட்டின் அரசினையழித்த இப்புல்லியோனை இன்று விண்ணுலகேற்றாது மீளோம்!" என்று வஞ்சினங் கூறினர் சிலர்.

இக்காட்சியைக் கண்டு உள்ளிருந்த கொடுங்கோலன், சேவகன்போல மாறு வேடம் பூண்டு, வெளியேறிப் பின் புற மதில்மேற் பாய்ந்து, காட்டகமடைந்தனன். அரண்மனையெங்கும் தேடிப் பார்த்தும் அக்கொடியோனைக் காணாத நாட்டு மாந்தர், மிகவும் மனம் புண் பட்டு, "இனி என் செய்வது!" என்று யோசிக்கத் தொடங்கினர்.

அறிவிலும் ஆண்டிலும் முதியோர் ஒருவர், அவர்களையெல்லாம் ஒருவாறமைதி பெறச் செய்து, "அன்புடைய நன் மக்களே, இந்நாள் வரையில் நம் நாட்டுச் சரித்திரத்திலே கேளாத செய்தி இன்று இங்கே நடந்திருக்கிறது. நாம் இதைச் சிறிது பொறுமையோடு கவனிக்க வேண்டும். இதுவரையில் நம் மனத்தில் எழுந்த ஆத்திரத்தால் நாம் செய்த காரியங்களின் குண குற்றங்



களைப்பற்றி ஆராயவேண்டா. இப்பொழுது நாம் இருக்கும் நிலையென்ன? இனி நமக்கு வரும் நிலையென்ன? இவற்றை ஆராய்வோம். நண்பர்களே, நான் சொல்வதை நம்புவீர்களாயின், இப்பொழுது நம் நாட்டில் உண்மையில் அரசன் ஒருவன் இல்லையென்று கூறுவேன். நம் அரசர், சோழர் குடித்தோன்றல், திருமாவளவர் எங்கிருக்கின்றார்? என்னவாயினர்? அவர் நிலையினை நாம் அறியோம். கொடுங்கோலனேயாயினும், சென்ற இரண்டு வருஷ காலமாக இங்கு இருந்து அரசு செலுத்தியிருந்த கொடுங்கோலன், இன்று நம் கிளர்ச்சியைக் கண்டு அஞ்சியொளித்தான். குடிகள் மனம்கோணுவண்ணம் அரசு புரிய அறியாதவர் கதி இதுவேயாகும் என்பதைப் பிரத்தியக்ஷமாக அறிந்தோம். நாம் இனிச் செய்தற்குரியதென்ன? நம் இளவரசர் உயிரோடு இவ்வமயத்தே இன்ன இடத்தே இருக்கின்றார் என்பது நம்மால் அறியக் கூடுமாயின், நாம் என்ன செய்வோம் என்பதில் எவர்க்கும் அபிப்பிராய பேதமில்லை. நாம் ஒரு கணப் பொழுதேனும் அரசின்றியிருந்தோம் என்ற பழி பூணலாகாது. இப்பொழுது நம் நாட்டுக்கு ஒரு தலைவன் ஏற்படல் வேண்டும். மனித முயற்சி நாம் என்னென்ன செய்யலாமோ, அவையெல்லாம் செய்து பார்த்தோம். எனினும், நம் இளவரசரைக் காண்டற்கியலவில்லை. சிறைக்களத்திருந்து எடுத்த பிணக் குவியல்களினிடையே நம் அரசர்பிரான் உடல் போன்ற குறிகளையுடைய தொன்றும் அகப்படவில்லை. அவர் எங்கேனும் அயல் நாடுகளிற் சென்று மறைந்திருப்பினும், இருக்கலாம். நாம் இனி

வேறு எவரையும் இவ்வரசுரிமைக்கு முயற்சி செய்ய விடலாகாது. தெய்வத் திருவருளால் நம்மை யாள்வதற்கு எவர் வருவாரோ, அவரையே அரசராகக் கொள்வோம். தெய்வத் திருவருளை உணர்தற்கு ஒரு வழியுளது: அது நம் முன்னோர் இத்தன்மையான காலங்களிற் கைக்கொண்ட நெறியேயாகும். நம் அரசினர்க்குரிய களிற்றரசை அலங்கரித்து அதன் கையிலே ஒரு பொற்குடத்திற் காவிரி நீரும் பூமாலை யொன்றும் தந்து அனுப்புவோம். அது யாரைத் தன் பிடர்மீது சுமந்து இங்குக் கொணர்கிறதோ, அவரையே நம் அரசராகக் கொள்வோம். இதுதான் இந்நிலைமையில் நாம் செய்தற்குரியதாகும்,'' என்றனர்.

இதனை அமைதியோடு கேட்டிருந்தோர் எல்லோரும் இறுதியில் ஒரே மனமாய், “அவ்வண்ணமே செய்வோம்,'' என்றனர். பெரியோர் கூறிய வண்ணம் நிறைவேற்ற நல்லோர் பலர் நுதல் விழி காட்டத் திறையோன் வாழும் கழுமல முதுபதி யடைந்தனர்; அரசுவாவை அலங்கரித்தனர். இறைவனுக்குச் சிறப்புக்கள் செய்வித்து, அவன் அருள் பெற்று, அக்களிற்றரசின் கையில் ஒரு பொற்குடம் நிறையக் காவிரி நீரும் மணமலர் மாலையொன்றும் தந்து, மங்களகரமான வாத்திய முழக்கங்களுக்கிடையே அனுப்பினர்.

அது விரைந்து நடந்து, சோழ நாட்டி லெங்கும் சஞ்சரித்து, இடர்ப்படாமல் குறிப்பிட்டவொரு பொருளைப் பெறக் கருதி அஃது இருக்குமிடம் நன்கறிந்து செல்லும் அறிவுடை யொருவன் போல, வேகமாக நடந்து சென்றது; சோழநாட் டெல்லையை விரைவிலே



கடந்து, சேர நாட்டை அடைந்தது; சேர நாட்டகத்ததாகிய கருவூரை நெருங்கி வந்துகொண்டிருந்தது. இறைவன் திருவருட் செயலை எவரே யறிவார்! சிறிது தூரம் அதனைப் பின்பற்றி வந்த மாந்தரனைவரும், அது வரும் வேகத்தைக் கண்டு உடன் றொடர்ந்து வர வியலாது, பின்னிடைந்தனர். மிருகமே யாயினும், இறைவன் அருள் வசத்தால் எண்ணிறந்த மக்களுடைய நல்னோக்கம் ஒன்றை நிறைவேற்ற உற்ற துணையாய் அமைந்த அவ்வேழம், கருவூர்ப் புற மதிலை யடைந்தது.

## V

" உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா :
குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்."

—நறுந்தொகை

இளமைப் பருவத்தே முடி சூட்டப் பெற்ற திருமாவளவன், இறைவன் அருள் வசத்தாலும் முன்னை வினைப் பயனாலும் அரசுரிமையை யிழந்தது மாத்திரமன்றிச் சிறைக் களத்திலும் புகுந்து இரண்டாண்டுகள் வாழ்ந்து, பின்னர்ச் சிறைக்களம் நெருப்பினுள் மூழ்கிய காலையில் எவரும் அறியாமற் கரிகாலனாகி, வெளியேறினன். அவன் கருவூர் நோக்கி நடந்து வந்தான். இறைவனருள் அவனை அங்கு அழைத்து வந்தது. அவன் அப்பொழுது அரண் வாயிற்கருகிலே மனத் தளர்ச்சியோடு மெல்ல நடந்து வந்த இரும்பிடர்த் தலையாரைக் கண்டான். அவரும் இழந்த பொருளைப் பெறுவார் பெற்ற ஆனந்த மெய்தியவரானார்.

பிடர்த் தலையார், தாம் இருக்குமிடம் புறநாட்டகத்ததென அறிவராகையால், தம்முடைய மனவெழுச்சியாற் பேசும் சொற்கள் மூலம் பிறர் அவ்விளவல் இன்னான் என்று அறிதல் தீதாக முடியும் என்று எண்ணித் தம்மை யடக்கி, அவனை மார்புறத் தழுவி, விரைவாக அழைத்துக்கொண்டு, தாம் வாழ்ந்திருந்த சிறியதொரு மனையகம் சேர்ந்தார். அங்கு அடைந்ததும், வாயிற் கதவங்களைத் தாழ் கோத்து, அகத்தே புகுந்து, வளவர் குலத்தோன்றலை ஒரு சிறிய மனையில் அமர்த்தித் தாம் அருகில் இருந்து, அவனை நன்கு கவனித்து, ஆபாதசூடம் நோக்கினார் : பின்னர் மனமுருகி, " தூங்கெயில் எறிந்த தொடித்தோட்செம்பியன் குலவிளக்காகிய கொற்றக் குமர, சென்னியர் தோன்றால், திருமாவளவ, என் உயிரினும் இனிய இளஞ்சேட் சென்னியின் இளமைந்த, நின்னை யான் இவ்வழியில் இந்நிலையிற் காண்பதற்கோ பிறந்தேன்! நின் தந்தையாரிடம் யான் கொடுத்திருந்த உறுதியுரைகள் வெற்றுரைகளாயினவே! நினக்கு முடி சூட்டி மகிழ்ந்த என் கண்கள் இக்காட்சியைக் காணவும் வலிபடைத்துளவே! என் வாய் மொழியை நிறைவேற்ற யான் என் செய்வேன்! எவரை யடைவேன்! பாண்டியரும் சேரரும் நின் தாழ் நிலை கண்டு மகிழ்கின்றார் என்றே எண்ணுகிறேன். நின் பொருட்டு உதவியாக நின்று அறப் போர் புரிய அவர்க்கு மனமில்லை. இதுவும் இறைவன் செயல்! நாம் இருவரும் ஓர் இடத்திற் சேர்ந்திருப்பதை நம் பகைஞர் காண்பராயின், நமக்கு இன்னும் என்னென்ன தீங்கு இழைப்பரோ? என்னே இக்கோலம்! இஃது யார் செயல்? நின் கால்கள் கரிந்திருக்கின்றனவே! இதற்குக் காரணம் என்னை? சிறைக்கள வாழ்வின் சிறுமை பற்றாதென அக்கொடியோன் நின்னைத் தீவாய்ப் படுக்கவும் துணிந்தனனோ? என்னே அவன் துணிவு! என்னே அவன் மனவுறுதி! என்னே அவன் வயிரம்! அந்தோ! என் மனம் பதைக்கின்றதே! நினக்கு இத்தீங்கு செய்த கொடியோன் எவனேயாயி

னும், அவன் நிலத்தில் உயிரோடு வாழும் அளவும் என் மனம் அமைதி பெறாது," என வருந்திக் கூறினர்.

இது கேட்ட திருமாவளவன், "என் அருமை அம்மானாரே, நீர் இருக்க எனக்கு இனி என்ன குறையுளது? எனக்கு இதுவரையில் நேர்ந்த தீங்குகள் ஒரு புறம் இருக்க இனி நாம் செய்ய வேண்டுவதைப்பற்றியே இப்பொழுது ஆலோசித்தல் வேண்டும். ஏனெனில், நாம் இருப்பதோ, அயலவர் நாடு. நாமோ, ஏதிலராய் ஆதுலராய் இங்கு மறைவில் வாழ வந்துளோம். எந்த வேளையில் எவன் என்ன செய்வனோ! ஆகையால், நாம் இங்கு மறை வாழ்விலும் வெகு ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்," என்று கூறிச் சிறிது யோசனையிலிருந்தான்.

அமைச்சப் புலவர், அவன் கரிகாலனாகிய காரணத்தை விசாரித்தறிந்தார்; பிறகு எல்லாம் இறைவன் செயல் என்று அமைந்தார். இனி விரைவிலே வளவன் நல்வாழ்வு பெறுவான் என்று அறிவராகையால், எதிர்கால நிலைமையைப்பற்றி அவனிடம் ஒன்றும் கூறாமலே, அக்காலம் உள்ள நிலைமையைப்பற்றிப் பேசியிருந்தார். பிறகு இருவரும் அருகிலிருந்த நீர் நிலையொன்றிலே நீராடி இறைவனைத் தொழுது போற்றி, உண்டியயின்றனர். வளவன் நடந்து வந்த சிரமம் பரிகாரமாகும்படி அம்மனையகத்தே ஒரு புறமாகப் படுத்திருந்தான். பிடர்த்தலையார், 'இனியென் செய்வது?' என்று எண்ணமிட்டிருந்தார்.

அங்ஙனமிருக்கையில், வாயிலிலே பெருத்த முழக்கம் ஒன்று கேட்டார்; அம்முழக்கத்தின் காரணத்தை



யறிய வாயிற்புறம் நோக்கினார்; சோழ நாட்டுக்களிற்றரசு பொற்குடமும் பூமாலையுங் கொண்டு நிற்கக் கண்டார்; உண்மையை ஒருவாறு ஊகித்துணர்ந்து, மனையகம் நோக்கினார். இதற்குள்ளே முழக்கத்தின் காரணத்தை அறிந்துகொண்ட வளவன் வாயிற் புறம் வந்தான். வாயிலிலே பெருங்கூட்டமாக நின்ற மாந்தர் பலர் கண்டு அதிசயிக்க, அங்கு அவ்வேழம் வளவன் முடியிலே பொற்குட நீரை அபிஷேகம் செய்து, அவன் கழுத்திலே தான் கொணர்ந்த மாலையைச் சூட்டியது. விண்ணவரும் மண்ணவரும் வியப்பெய்த நிகழ்ந்த இத்தெய்விகச் செயலைக் கண்ட பிடர்த்தலையார், ஆனந்த மேலீட்டால், தம்மை மறந்தவரானார்.

ஒரு கணப் பொழுதிலே வளவர் பிரான் ஆடை மாற்றி நின்றனன். உடனே அவனை அவ்வரசுவா தன் கையால் தூக்கிப் பிடரகத்து வைத்துக்கொண்டு விரைந்து சென்றது. அஃது இன்னது செய்யும் என்பதை எதிர்பார்த்திருந்த பிடர்த் தலையார் உடனே புறப்பட்டார்; உறையூர் நோக்கி விரைந்து சென்றார். வேழ வேந்து வளவர் வேந்தைக் கழுமலத் திருக்கோயிலுக்குச் சுமந்து சென்று, அங்கே ஆவலோடு எதிர் பார்த்திருந்த பலர் முன்னிலையில் இறக்கியது. மங்கள வாத்திய முழக்கம் மிருந்தது. அங்கு நின்ற சான்றோரெல்லாம் தம் அரசர் குடியின் தவப்பேறாகப் பிறந்த செல்வனே தெய்வத் திருவருளால் தமக்கு அரசனாக வாய்த்தது கண்டு, பேரின்பம் எய்தினர்; அக்களிற்றை முன்னே நடத்தி அரசனை மனமார வாழ்த்திக்கொண்டு, உறையூர் நோக்கி நடந்தனர். இரண்டு தினங்களில் அனைவரும் உறையூர்

வந்து சேர்ந்தனர். பிடர்த்தலைப் பெரியாரும் இதற்கு முன்பாக அங்கு வந்து சேர்ந்து, அரசனை யெதிர்கொள்வாரில் முதல்வராய் முன் வந்து நின்றார்.

நகரெங்கும் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மாந்தரனைவரும் புதிய ஆடைகள் புனைந்து, தம் மன்னர் பெருமானைக் காண விரைந்து வந்தனர். இளைஞனே யாயினும், பிறந்தகுடிப் பெருமையை வளர்த்தற்குரிய குணங்களெல்லாம் பொருந்தியிருந்த திருமாவளவன், தெய்வச் செயலால் தன்னைத் தேடிக் கொணர்ந்த அரசுவாவின்மீது பொன் மணையிட் டமர்ந்து, நகர் வலஞ் செய்து, அரண்மனைக்குட் புகுந்தான். அன்றே நன்னாளெனக்கொண்டு, பெரியோர் பலர் குழுமியிருந்து, அவனுக்கு மறு முறையும் முடி சூட்டி, நாட்டு மக்களுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி விளைவித்தனர்.

முடி சூட்டு மங்கலம் நிகழ்ந்த பின்னர், ஆத்தான மண்டபம் அடைந்து, தெய்வங்களைத் தொழுது, பெரியோர் ஆசி பெற்ற வளவர் பிரான், அங்குக் கூடியிருந்தோரைப் பார்த்துப் பின் வருமாறு பேசினன்:

“அன்புடைய நல்லோர்களே, வாழ்வும் தாழ்வும் உலகில் எவர்க்கும் உள்ளனவே. இந்த இரண்டாண்டுகளாக நும் போன்ற நல்லோர் பலர் சிறைக் களத்தே அகப்பட்டு அடைந்த இன்னல்களை யான் சிறிதளவு அறிவேன். இந்த அரசவுரிமையிலே ஆசை கொண்ட சிலர் எனக்கிழைத்த தீங்குகள் மிகச் சிலவே; நுமக்கு இழைத்த கொடுமைகள் மிகப் பல. கடுமையான அரசிறைகள் விதித்ததும், கொடுக்க வியலாதவரைத் தண்டித்ததும், யான் அறிந்தேன். உண்மை பேசுவார்க்குப்



புற நாட்டு வாழ்வும் அக நாட்டுச் சிறை வாழ்வும் கிடைத்ததை யான் அறிவேன். இறைவன் அருள் நமக்கு இன்பமும் துன்பமும் தருவதாம். அறிஞர்களாகிய நுமக்கு நான் அதிகம் கூற வேண்டுவதில்லை. இனிச் செய்தற்குரியவற்றைப் பற்றியே எண்ண வேண்டும். எக்காரணத்தாலேனும் இந்த இரண்டாண்டுகளாக நம் குடி மக்கள் பொருள்களிலும் உடைமைகளிலும் எவையேனும் அரசாங்கத்துக்குப் பறிமுதல் செய்யப்பட்டிருப்பின், இனி அவை முன்னே எவர்க்கு உரிமையோ, அவரிடம் கிரமமாகப் போய்ச் சேருமாறு வேண்டுவன செய்கின்றேன். நுமக்கு மனக் குறைகள் எவையேனும் இருப்பின், அவற்றை நம் நாட்டு அமைச்சர் மூலமும் நேராகவும் எப்பொழுது வேண்டுமென்றாலும் என்னிடம் தெரிவித்துக்கொள்ளலாம். நீவிர் அனைவிரும் நும் மனையகங்களை யகன்று சென்ற சில நாட்களாக மிக்க சிரமப்பட்டிருக்கிறீர்கள். ஆகையால், இனி விரைவில் நும் உரிமைகளைப் பெற்று இன்புற்று வாழுமாறு வேண்டும் முயற்சிகளைச் செய்ய முற்படவேண்டும். நம் நாடு இவ்வளவு துன்பங்களையும் அடையக் காரணனாயிருந்தவன் இன்னும் காட்டகத்தே யொளித்திருக்கின்றான். அவனும் அவனுக்கு உதவியாய் இருப்போரும் எத்தனையரோ, நாம் அறியோம். நம் நாட்டிலும் அரசிலும் உண்மையான அன்புடையார் பலர் இனி நாட்டின் வாழ்வு சீர்திருத்தம் பெறும் பொருட்டாக முயற்சி செய்ய முன்வர வேண்டியிருக்கிறது. படைஞர் பலரைச் சேர்க்க வேண்டும். படைப் பயிற்சி நன்கு செய்விக்கப் பெறுதலும் வேண்

டும். பகைஞர் எவர் வரினும், நாட்டவர் எவரும் தம் மனை வாழ்வைப் போற்றும் பொருட்டும் நாட்டின் பெருமை அழியாது நிலை நாட்டும் பொருட்டும் முன்னின்று போர் புரிதல் வேண்டும். வலிய வந்த பகையை நாம் அடக்கவும் அழிக்கவும் வகை யறியாது அமைதியாய் இருப்போமாயின், இன்னும் பெருங்கேடு வரினும் வரும். ஆகையால், இந்த அரசுரிமையைப் பெறுதற்கு எனக்கு உதவியாய் இருந்த தெய்வத் திருவருள் இதனை நான் உறுதியாய்க் காப்பாற்றிக்கொள்ளவும் உதவியாய் நிற்குமென்றே நம்பி, நல்லோராகிய நும் துணையால் பகைவரை அழிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறேன். என் அருமை அம்மானாகிய இரும்பிடர்த் தலையார் இனி எனக்கு அமைச்சராய் இருந்து வேண்டுவன செய்வார். நும்மால் இயன்ற நலங்களையும் எப்பொழுதும் எதிர் பார்த்தே யிருக்கிறேன்."

பின்பு இரும்பிடர்த் தலையார் எழுந்து, சிறிது நேரம் பேசினர். இறுதியில் அரசனை எல்லாரும் மனமார வாழ்த்தி, விடை பெற்றுச் சென்றனர்.

சோழ நாடு அமைதி பெற்றது. அரச முறையும், இளைஞன் தோளிற் சார்ந்திருப்பினும், நன்கு நடந்து வந்தது. அரசன் ஆண்டில் இளையானாயினும், அறிவினில் முதியவன் என்ற புகழ் நாடெங்கும் பரவியது. முன்பு சோழ நாட்டை வலிந்து கைக்கொண்டு அரசு புரிந்து குடிகள் எழுச்சியாற் காட்டுள் மறைந்த குலப் பகைஞன், மறுமுறையும் அரசுரிமை பெறச் சூழ்ச்சிகள் செய்தனன். அவன் சூழ்ச்சிக்கு உதவியாய் நாட்டகத் திருந்த பலர் அரசவொற்றரால் அறியப்பட்டுத் தகுந்த



வாறு அடக்கப்பட்டனர். ஆயினும், அரசாங்க அதிகாரிகள் ஆராய்ச்சிக்குப் புலப்படாமற் சிலர் மறைந்திருந்து, தம் சூழ்ச்சிகளைச் செய்து வந்தனர்.

திருமாவளவன் காட்டிலே சென்று அப்பகைவனைப் போர் புரிந்து அழிக்கத் துணிந்திலன்; "அவன் தானே வெளியே வரும்போது பார்ப்போம்," என்றிருந்தான். அதுவே பொருத்தம் என்று அமைச்சருங் கூறினர். சிறிது சிறிதாகப் படைகள் திரட்டி இரண்டு மூன்றாண்டுகளிற் பகைவன் எதிர்க்கத் துணிந்தனன். இதற்குள் சோழ நாட்டுப் படை முன்னிருந்ததைப் போலப் பன்மடங்கு பெருகி மிக்க பயிற்சியும் பெற்றிருந்தது என்பதை அவன் அறிந்திருந்தும், அதனைப் பொருட்படுத்தாது போர்க்குத் துணிந்து வந்தான். சேரமன்னரும் பாண்டிய வேந்தரும் அவனுக்குத் துணை புரிய விரும்பித் தத்தம் படைஞருட் பெரும்பகுதியாளரை அனுப்பினர்.

தன் வலிமை மிகுந்ததாய் எண்ணிய அப்புல்லியோன், உறையூரை முற்றுகை யிட்டான். இதனை எதிர்பார்த்திருந்த அகநாட்டவர், தம் உரிமைகளையும் உடைமைகளையும் காத்துக்கொள்ளும்பொருட்டுப் போர் புரிய முன் வந்தனர். கரிகாலனாகிய திருமாவளவனே முன்னின்று படைஞரை நடத்தினான். எளிதிலே நாட்டைக் கைக்கொள்ளலாம் என்று பெரும்படையோடு வந்த பகைவன், முன்னே என்றும் புரிந்திராத பெரும்போர் செய்ய நேரிட்டது. ஏழு நாட்கள் போர்நிகழ்ந்தது. இறுதியிற் பகைவர் படை பின் வாங்கலாயிற்று. உதவியாய் வந்த படைஞர் தத்தம் நாடு நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

இவ்வளவு கொடுமைக்குங்காரணனுயிருந்த சோழர்குலப் பகைஞன், மண் வாழ்வு இழந்து விண் வாழ்வுபெற்றான். அவனுக்கு உதவியாய் நின்றோரிற் பலர் மடிந்தனர். எஞ்சி நின்ற சிலர் சிறைப்பட்டனர்.போர்நிறைவேறியது.

நாட்டு மாந்தர், மகிழ்ச்சி மீதூரப் பெற்று, மனமார வாழ்த்தித் தம் அரசர் பிரானை வரவேற்று, அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். பாணர் கூத்தர் விறலியர் முதலிய பலரும் வந்து, தத்தமக்கேற்ற சிறப்புக்கள் பெற்றுச் சென்றனர். புலவர் பலர் மனமகிழ்ச்சியோடு வந்து வேந்திளஞ் சிங்கத்தைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றனர். இரும்பிடர்த் தலையார் தாம் எண்ணியஎண்ணம் இன்றே நிறைவேறியது என்று எண்ணி, நகரகத்துள்ள திருக்கோயில்களிலெல்லாம் சிறப்பாகப் பூசனைகள் நிகழ்த்தி, விழாக் கொண்டாடினர்; ஏழை மாந்தர்க்கெல்லாம் உண்டியும் உடையும் நல்குவித்தனர். முடி சூட்டுத் திருவிழாவன்று நிகழ்ந்த சிறப்புக்களைக் காட்டிலும் நாடெங்கும் இன்று விசேஷமாகவே உற்சவங்கள் நடந்தன. துன்பமுற்றவர்க்கலால் இன்பமில்லையன்றோ?

## VI

"உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்: குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்." —பழமொழி

இவ்வாறு கரிகாலன் இரண்டாம் முறையாக அரசு தாங்கி ஆட்சி புரிந்து வருகையில், ஒரு நாள் அரண்மனையிலே தனியறையொன்றிலே அறநூல்களை ஆராய்ந்துகொண்டிருந்தான். இரும்பிடர்த் தலையாரை அமைச்சராகவும் ஆசிரியராகவும் அம்மானாராகவும் பெற்ற வளவர் குலத் தோன்றல், நூலாராய்ச்சியின்றி கணப் பொழுதேனும் வறிது போக்குவனே? இன்னும் அரசப் பொறை தாங்கத்தக்க வயதேனும் உலக அனுபவமேனும் பெறாதவனா யிருப்பினும், 'மகனறிவு தந்தை யறிவு' என்ற முதுமொழி பொய்படா வண்ணம், நல்லோர் பலர் சேர்க்கையும் அமைச்சர் ஆலோசனைப் பயனும் சூழ்ச்சித் திறனும் உதவியாகப் பெற்று, நாட்டிற்கு நலம் புரியும் முயற்சியில் முன்னின்றான்.

புத்தக சாலையை யடுத்ததோர் அறையில் அவன் அமர்ந்திருந்து, அறிஞர் உதவி கொண்டு அறிந்த பொருள்களை ஆராய்ந்து தெளிய முயன்றான். அவ்வமயத்தில் முதியவர் இருவர் ஒரு வழக்கின்பொருட்டு அரசனைக்

V211CL
N31.1



காண எண்ணி அங்கடைந்தனர். அரசாட்சியிற் சமீப காலத்தில் ஏற்பட்ட மாறுபாடுகளை அவர்கள் அறிந்திலாமையால், பண்டு ஒரு கால் தாம் கண்டிருந்த அரசனே அன்றும் இருப்பன் என எண்ணியிருந்தனர். அவ்விருவரும் வாயில் காவலரால் அரசனருகில் அழைத்துச் செல்லப்பட்டனர். காவலர் வெளி வந்தனர். முதியவர் இருவரும் ஏடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த இளைஞனாகிய அரசனைக் கண்டனர். கண்டதும் அவனை நெருங்கி ஒன்றும் கூறாது திரும்பப் புறப்பட்டனர்.

கரிகாலன் அவர்களை நோக்கிச் சட்டென்று திரும்பிக் கையமைத்து, "ஐயன்மீர், நீவிர் இங்குவரக் காரணம் என்ன? வந்து ஒன்றும் கூறாது திரும்பத் துணிந்ததேன்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! உங்கள் உள்ளத்தில் உள்ள உண்மையை ஒளியாது கூற வேண்டுகிறேன்," என்று இன் முகத்தோடு கூறினன்.

முதன் முதியவர்:—ஐயா, யாம் ஒரு பெரிய வழக்கின்பொருட்டு அரசரைக் காண வந்தோம். அவ்வழக்கின் நுட்பங்களை நன்கு ஆராய்ந்து முடிவு கூறுதல் அறநூல்களைத் தீரத் தெளிந்த சான்றோர்க்கே இயல்வதாம். இளைஞர் அதன் உண்மையை அறிந்துகொள்ளுதல் எளிதன்று. நம் நாட்டகத்தில் அறநிலைக் களத்தார் ஆங்காங்கு நன்கு ஆராய்ந்து வழக்குத் தீர்ப்பாராயினும் அரிய நுட்பமான வழக்குகளின்பொருட்டு அரசரிடம் வருவது எமது வழக்கமாம். இன்று யாம் அரசரைக் காணவேண்டும் என்ற போது, வாயில் காவலர் எம்மை இங்கு நும்மிடம் அழைத்து வந்தனர். இந்நாட்டை



இப்பொழுது ஆண்டு வரும் அரசர் ஓர் இளைஞர் என்பதை யாம் அறியோம். அறிந்திருந்தால், இவ்வழக்கின் பொருட்டு இங்கே வந்திரோம். வந்த பின்பே உண்மை நிலை யுணர்ந்ததாற் பேசிப் பயனில்லை யென்று பின்னிடைந்தோம்.

இரண்டாம் முதியவர்:—இனி யாம் விடை பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

கரிகாலன்:—ஐயன்மீர், நீவிர் வந்த காரியம் நிறைவேறுமலே விடை பெற்றுக்கொள்ள எண்ணுவது பொருத்தமாமோ? வாயில் காவலர் நும்மை என்னிடம் நேரில் அழைத்து வந்தது ஒரு வகையிற் குற்றமே. தற்காலம் இந்நாட்டின் அரசரிமை வகிப்பவர் மிகவும் முதியவர்; நும் கருத்துக்கிணங்க நூற் பயிற்சியும் அனுபவமும் படைத்தவர். அவர் தாமே நேரிற் பார்த்தற்குரிய பொறுப்பான காரியங்களைத் தவிர மற்றவற்றை யெல்லாம் கவனித்துக்கொள்ளுமாறு என்னை நியமித்திருக்கிறார். வாயில் காவலர் நீவிர் வந்த காரணத்தை அறியாமையால், நும்மை என்னிடம் அழைத்து வந்தனர். சோழநாட்டிலே அரண்மனை வாயில் வரை வந்து நியாயம் பெறாது சென்றவரைப்பற்றி இதற்கு முன்பு என்றாவது நீவிர் கேட்டதுண்டா? பசுவின் கன்றின்பொருட்டுத் தன் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்த மு[illegible] தோன்றிய குலத்திலே அக்குறை உண்[illegible]யால், பெரியீர்காள், சற்றுப் பொறு[illegible]ள். [illegible]னே நேரிற் சென்று அரசரை நியாய சபைக்கு அழைத்து வருகின்றேன். இங்கிருந்து வலப் பு[illegible]ாக [illegible] சென்றால், நியாய சபை இருப்பது [illegible]தோன்றும். நும்மை

77280

அங்கு அழைத்து வரக் காவலரை அனுப்புகின்றேன். சிறிது நேரம் இங்கேதானே இருங்கள்.

இவ்வாறு கூறிவிட்டுக் கரிகாலன் வெளியே சென்று, நரைத்த தலையும் தாடியும் உடைய ஒரு முதிய அரசன் போல வேடம் பூண்டு, நியாய சபையில் உன்னதமான பீடத்தின்மீது அமர்ந்து, வாயில் காவலரை அனுப்பி, முதியவர் இருவரையும் அங்கு வருவித்தான். அவர்கள் நியாய சபைக்கு வந்தார்கள்; தாங்கள் எதிர்பார்த்த வண்ணம் நரைத்துப் பழுத்த முதியவனாகிய அரசனைக் கண்டார்கள்; அருகில் நின்றிருந்த காவலராலும் குண்ட கொடி முதலிய சின்னங்களாலும் அவனே அரசன் என்று துணிந்து முக மலர்ச்சி பெற்றார்கள்.

**கரிகாலன்:**—ஐயன்மீர், நமது பிரதிநிதியாகிய இளவரசர் நீவிர் அரியதொரு வழக்குக் கொணர்ந்திருப்பதாய்க் கூறினர். அவ்வழக்கு இன்னதெனக் கூறின், எம்மால் இயன்ற வளவு முடிவு கூறுகிறோம். அறநூல்கள் உயர்ந்தோர் தாழ்ந்தோர், உறவினர் அயலவர், கற்றவர் கல்லார், வறியவர் எளியவர், முதியவர் இளையவர் முதலிய வேறுபாடுகள் கருதாமலே முடிவுகூறுமாறு அறுதியிட்டிருக்கின்றன. இவ்வுண்மை நீவிர் அறியாததன்று. இனி நீவிர் நும் வழக்கை மனவமைதியோடு கூறலாம்.

முதன் முதியவர்:—ஐயன்மீர், அரசர்பெருமானே, நான் கொணர்ந்திருக்கும் வழக்கிலே எதிர்வாதம் செய்ய வந்திருப்பவர் என் உடன் பிறந்த இளைய சகோதரர் ஆவார். எங்கள் இருவர்க்கும் முன்னோர் வைத்த பொருள் மிகக் குறைவே. அவை நிலம்புலங்களாகவும் சிறிதளவு பிற பொருளாகவும் உள்ளன. எம் முன்னோர்



எமக்கென வைத்த 'இரத்தின முடிச்சு' என்ற பூர்விக முதல் ஒன்று உண்டு. அஃது இப்பொழுது இவரிடமே உள்ளது. அதனை வைத்துக்கொண்டு இவர் இங்கு அமைதியாய் வாழ்ந்து வருகின்றார். நான் கடார நாட்டிலும் சாவக நாட்டிலும் பிற நாடுகளிலும் நெடுநாளாகக் கடற்றுறை வியாபாரம் செய்து பெரும்பொருள் ஈட்டி வந்துளேன். எனக்கு மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார் எவரும் இலர். இவர்க்கு இரண்டு ஆண் மக்களும் ஒரு பெண் மகளும் உளர். ஆண் மக்களுள் ஒருவரேனும் பெரிய முயற்சிகள் செய்து பெரும்பொருளீட்டும் ஆற்றல் படைத்தவராயில்லை. பெண் மகளோ, ஒரு வறிய உழவனை மணந்துகொண்டாள். அவன் மிகவும் இளம் பருவத்திலே அவளை யகன்று அயல் நாடுகளிற் சென்று மறைந்தான். நான் தேடி வந்த பொருளை யெல்லாம் இவருக்குக் கொடுக்கத் துணிந்தேன். இவர் அதனைப் பெற மறுப்பதோடு தம்மிடம் உள்ள பொருள்களில் ஒரு பாதி யெடுத்துக்கொள்ளச் சொல்லி வற்புறுத்துகிறார். நான் ஐம்பது வருஷ காலம் நாட்டை யகன்று, அயல் நாடுகளிலே வாழ்ந்து, சொந்த நாட்டுக்கு இப்பொழுதேனும் வந்து சிறிது மனவமைதி பெறுவோம் என்று எதிர்பார்த்திருந்தேன். என் எண்ணம் நிறைவேற வொட்டாமற் செய்பவர் என் சகோதரரே. நான் கூற வேண்டுவது இன்னொரு விஷயம் உண்டு: சென்ற பலவாண்டுகளில் யான் தமிழ் நாட்டிலிருந்து வருவார் எவரையும் காணப் பெறாமலே காலம் கழித்து வந்தேன். ஒரு பதினைந்து ஆண்டுகளின் முன்பு தமிழ் நாட்டு இளைஞன் ஒருவன் கடார நாட்டிலே வந்து, உண்ண உணவும்

உடுக்க வுடையும் இன்றி நோய் வாய்ப்பட்டு உயிர் துறக்கும் நிலையிலிருந்தான். அவன் தமிழன் என்பதை அறிந்ததும், எனக்கு அவன்பால் இரக்கம் உண்டாகி, மிக்க பொருட் செலவு செய்து தக்க மருத்துவரைக் கொண்டு அவன் பிணிகளைக் குணப்படுத்தினேன். அவன் என் மகன் போலப் பயின்று வந்தான். அவனிடம் யாதொரு குறையும் கண்டேனிலேன். பதினைந்து வருஷங்களின் முன்பு அவன் தேடுவாரின்றி எமனொடு போராடிய காலத்திலே என்னிடம் சில செய்திகள் கூறினன். அவற்றால் அவன் என் இளையோர் மருமகன் ஆவன் என்பதறிந்தேன். அவன் அறியாமையால் இளம்பருவத்தே செய்த ஒரு குற்றத்தை என்னிடம் வெளியிட்டான். அக்குற்றத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன்: அவன் பொருள் தேட வேண்டுமென்ற ஆசையால், மிகவும் இளம்பருவத்தினளாகிய மனைவியைத் துறந்து, எங்கள் பூர்விகப் பொருள்களில் ஒன்றாகிய இரத்தின முடிச்சிலிருந்து இரண்டு மாணிக்கங்களை யெடுத்துக்கொண்டு ஒருவரும் அறியா வண்ணம் கடற் பிரயாணம் செய்து, கடார நாட்டில் வந்தடைந்தான். பொருளைக் கவர்ந்ததும் மனைவியைப் பிரிந்ததும் ஆகிய இரண்டு குற்றங்களும் பெருந்தண்டம் விதித்தற்குரியனவே. இந்நாள் வரை அவன் அம்மாணிக்கங்களை விலைப்படுத்தாமல் என்னிடமே கொடுத்திருக்கிறான். அந்நாட்டிலே தன் உரிய மனைவியைப் பிரிந்து வாழ்ந்தனனாயினும், வேறு எப்பெண்களையும் கண்ணெடுத்தும் பாராமலே நல்லொழுக்க முடையவனாகவே வாழ்ந்து வந்தான். அவன் வரலாற்றை உள்ளவாறு அறிந்திருப்பவன் யானே-



அவன் செய்த குற்றம் பெரிதேயாயினும், அக்குற்றத்துக்கு வேண்டிய அளவுக்கு மேலாக அவன் தண்டனை அனுபவித்திருக்கிறான் என்றே கூறுகிறேன். என் இளையோர் யான் கூறியவெல்லாம் கேட்டும், அவனைத் தம் மருமகனாக ஏற்றுக்கொள்ள இசையாமல் இருக்கின்றார்; தம் அருமை மகளை அன்று மணம்புரிந்த கணவன் உயிரோடிருந்தும், அவளைக் கைம்பெண் போலவே வாழவைக்க விரும்புகின்றார். பூர்விகச் சொத்தில் எனக்கு ஒரு சிறிதும் வேண்டா. யான் தேடி வந்த பொருளை அவர் ஏற்றுக்கொள்ளாது மறுப்பாராயின், அஃது உரிமையற்ற பொருளாய் அரசினரும் பிறரும் கைக்கொள்ளப்படுவதாய் அழியும். நான் அயல் நாட்டிலே தேடிய பொருளை இவ்வரசினர் தக்க வுரிமையின்றியே கவர்ந்து கொள்வது முறையாகாது என்பதே என் எண்ணம். ஆகையால், என் வழக்கைத் தீர விசாரித்து, முடிவு கூற வேண்டுகிறேன்.

இரண்டாம் முதியவர்:— அரசர் பெருந்தகையே, என் முன்னவர் கூறிய வழக்கை நன்கு செவி சாய்த்தருளினீர். என் வழக்கையும் கேட்க வேண்டுகிறேன். என் மூத்தோராகிய இவர், எம் பெற்றோர் உயிரோடிருந்த காலத்திலேயே மிகவும் இளம்பருவத்திலே அயல் நாடுகட்குப் போயினர். அங்குத் தம் முயற்சியாற் பெரும் பொருளாளராய்த் திரும்பி வந்திருக்கின்றார். எம் தந்தையார் இறக்குந் தருணத்தில் எம் முன்னோர் பொருளாகிய எல்லாவற்றையும் என்னிடம் அளித்து, மூத்தவரை நான் திரும்பவும் காணப் பெறுவேனாயின், அவர்க்குரிய பாகத்தை முறையே கொடுத்துவிட வேண்டும்

என்று கூறி யுயிர் துறந்தனர். நான் சில தினங்களின் முன்பே இவரைக் கண்டேன். கண்டதும், தந்தையார் ஆணையிட்ட வண்ணம் நடக்கத் துணிந்து, பொருளனைத்தையும் இரு பகுதியாகப் பகுத்து, இவர் பகுதியை இவர்க்குக் கொடுக்க வந்தேன். இவர் அதனைப் பெற மறுக்கின்றார்; அதனோடு அமையாமல், எம்முடைய பூர்விகச் சொத்தின் உதவியின்றித் தாமாகவே தேடிய பொருளையும் என் தலையிலேயே கட்டிப் பாவச் சுமையை நானே அதிகம் சுமக்க வழி தேடுகிறார். என் மக்களுள் ஒருவன் சிறந்த புலவரை யடுத்துக் கலை பயின்று கல்வி வல்லனாயிருக்கிறான். மற்றொருவன் எம் குலத் தொழிலாகிய உழவை மேற்கொண்டிருக்கிறான். அவ்விருவர்க்கும் 'செல்வம்என்பது சிந்தையின் நிறைவே' என்ற எண்ணம் அமைந்தது. என் மகள் வரலாற்றைச் சொல்லத் தொடங்கும்போது என் நெஞ்சு புகைகின்றது. முதியோராயிருக்கும் தன்பெற்றோர்க்குஆற்றற்குரிய கடமைகளை முயன்று செய்யாமலும் தான் கொண்ட மனைவியை ஒரு காரணமின்றிப் பிரிந்து அவள் பொருட்டுத் தான் செய்தற்குரிய அறநெறிக் கடமையை இயற்றாமலும் அயல் நாடு சென்ற ஒரு புல்லியோனைப் பற்றி யான் ஒன்றும் சொல்ல விரும்புகிலேன். அவன் மாணிக்கங் கொண்டு சென்ற செய்தியைப்பற்றி என் மூத்தோர் வரும் வரையில் நான் ஒன்றும் அறியேன். எங்கள் மரபிலே அக்கிழியை அவிழ்த்துப் பார்த்துப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் இதுவரையில் எவர்க்கும் வந்ததில்லை. இத்தனை யாண்டுகளாகத் தன் இளம்பருவத்தையெல்லாம் வறிதே கழித்த என்மகள் இனி இவன்



உறவை நாடி வாழவிரும்பாள் என்றே நான் உறுதியாய்க் கூறுவேன். ஆகையால், அரசரே, எம் முன்னோர் பொருளிலே செம்பாதியை என் தமையனார் பெற்றுக்கொள்ளுமாறு செய்து, நான் என் தந்தையாருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற உதவி புரிய வேண்டுகிறேன். இவர் பொருளிற் சிறிதளவேனும் எமக்கு வேண்டா. மருமகனாக வருவோனை என் மனம் புண்படுமாறும் என் மகள் பழந்துயரம் பெரிதாய் விளையுமாறும் நான் காணவே விரும்புகிலேன். அரசர்பிரானே தீர விசாரித்து இருவரும் ஏற்றுக்கொள்ளத் தக்க முடிவு கூற வேண்டுகிறேன்.

இருவர் வழக்கையும் கேட்டு அறத் தவிசின்மீது அமர்ந்திருந்த முதிய வேட முடைய கரிகாலன் சிறிது நேரம் சிந்தனையிலிருந்து பிறகு பேசத் தொடங்கினான்:

**கரிகாலன்:**—ஐயன்மீர், நும் வழக்கு அரிய சிறப்புடையதே. இவ்வழக்கினை நும் ஊரகத்துள்ள அறநிலைக்களத்தே கூறினீர்களோ? அங்குளார் என்ன கூறினர்?

**முதன் முதியவர்:**—ஐய, இவ்வழக்கிலே அரசருக்குத் தம் கருத்தை விளக்கவுரிய அவசியம் இருப்பதால், அங்கே நேரிற் சென்று தீர்ப்புப் பெறலாம் என்று கூறினர். யாமும் அவ்வாறே கருதினோம்.

**கரிகாலன்:**—அரசினர் அறநெறி விளக்கலன்றி வேறு எவ்வழியில் இவ்வழக்கிலே பிரவேசிக்க இடம் உளது?

**இரண்டாம் முதியவர்:**—ஐய, யான் என் மூத்தோர் பொருளைப் பெற மறுத்துவிட்டேனாகையாலும், அவர்க்கு என்னை யொழிய வேறு நெருங்கிய வுறவினர்

இல்லாமையாலும், உரிமையாளர் இன்னர் என அறியலாகாது நிற்கும் அவரது பெரும்பொருளுக்கு உரிமை அவர்க்குப் பின் அரசினரதே யாமன்றே! இவ்வாறு பெரும் பொருளும் வரும் நிலையில் அரசினர் தம் கருத்தைத் தெரிவிக்க வேண்டுவது அவசியமாமென நாங்கள் கருதுவது நியாயந்தானே?

கரிகாலன்:-அரசினர் இப்பொருளைப் பெற உரிமையுடையர் என்று கூறுவது பொதுவான நியாயமே. ஒரு பொருளைப் பெற வுரிமை யுடையவர் வேண்டாவென மறுத்தற்கும் உரிமையுடையவராவர் என்பது உலகறிந்த உண்மை யன்றோ? அந்த நியாயத்தைப் பின்பற்றி அரசினர் இப்பொருள் தமக்கு வேண்டாவென மறுக்கலாம்.

முதன் முதியவர்:—ஆம்! ஆம்!! அதுவே பொருத்தம். யான் கூறிய காரணங்களைக் கருதிப் பார்த்து அரசினர் இப்பொருளைத் தமதென உரிமைகொண்டு ஏற்றுக் கொள்ள வராதிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

கரிகாலன்:—ஒருவர் விருப்பத்தையும் வெறுப்பையும் எதிர் பார்த்து நியாயாதிபதிகள் தீர்ப்புக் கூறுவது என்று இருந்தால், உலகில் நியாயம் கிடைப்பதே துர்லபமாய்விடும். அற நூல்களினுட்பமான கருத்துக்கும் போக்குக்கும் அறிஞர் கொள்கைக்கும் உலகத்தார் அனுபவத்துக்கும் எது பொருத்தமாய்த் தோன்றுமோ, அதையே யாம் முடிவாகக் கூறுவோம். அரசினர் இப்பொருளில் உரிமை கொண்டாடல் பொருத்தமன்று என்பதே எம் எண்ணமா மாயினும், உமது வழக்கின்பொருட்டு நீர்



பேசிய பேச்சிலே ஒரு குறையிருப்பதை யாம் காட்ட வேண்டுவது அவசியமாம். நீர் இப்பொருளை யெல்லாம் அயல் நாட்டிலேயே தேடினீராயினும், நம் நாட்டுக் குடிமக்களாயிருக்கும் உரிமை யுடையாரில் நீரும் ஒருவராகையால், நீர் தேடிய செல்வத்தால் உமக்கு வரும் பெருமை அரசினர்க்கும் உரியதாம். அவ்வாறு இல்லையாயின், கடல் வியாபாரத்தாற் பெரும்பொருளீட்டிய மாநாய்கர் பொன்னாற் செய்விக்கப் பெற்ற எட்டிப் பூவை அரசிடம் சிறப்பாகப் பெற்று எட்டி என்று பட்டம் பெறுதல் பொருளற்ற செய்கையாம். அன்றியும், உமது பெற்றோர், பிறந்தோர், பெருநாட்டோர், உற்றோர், உகந்தோர் முதலிய எல்லோரும் இந்நாட்டகத்தே யிருத்தலால், அயல் நாட்டிலே தேடிய பொருளேயாயினும், அங்கேயே அதனை எவர்க்கும் கொடுத்துதவ மனம் வாராமையும் இங்கே வாழும் உற்றோர்க்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் வருதலும் பொருத்தம் என்பது உமக்கே தோன்றுகிறது. எங்கெங்கு அலைந்தாலும், எத்தனை நாடுகள் கண்டாலும், எவர்க்கும், 'நந்நாடு நன்னாடு,' என்ற உணர்ச்சி மனத்தினுள் ஊறி யெழுதலை நீவிர் அறிவீர். உமக்கு உம் நாட்டிலே உண்மை யன்பு இல்லாதிருப்பின், இத்தனை யாண்டுகள் கழிந்த பிறகு இங்கு வந்திருக்கமாட்டீர். நீர் தேடிய பொருளால் வரும் சிறப்பு உமக்கு மாத்திரம் அன்றி, நும் நாட்டவர்க்கும் உண்டென்பதை நீரும் அறிவீர். ஒரு நாடு செல்வம் உடையது என்று சொல்லப் பெறுவது இவ்வாறு பல வழிகளாலும் தேடி நாட்டின் நலத்தை வளர்க்கும் மக்கள் முயற்சியாலன்றோ? இவ்வாறு இருக்க, நீவிர்

கருதுவது போல நீவிர் தேடிய பொருள் நமக்கும் நம் சுற்றத்தவர்க்குமே பயன்பட வேண்டும் என்று கருதுவது எவ்வகையில் நியாயமாம்? உமது பொருளால் வரும் பெருமை உம் நாட்டினர்க்கு உண்டாயின், அதனால் வரும பயனும் அவர்கட்குச் சிறிதளவேனும் இருத்தல் முறைதானே? சுற்றி வாழ்பவர் சுற்றத்தார் என்பது மெய்யாயின், உம்மைச் சுற்றி வாழும் எளிய மக்களும் கீழ்க் குலத்தவரும் தாமே பொருள் தேட ஆற்றல் இல்லாதிருக்கும் பிறரும் உம் சுற்றத்தாரே யாவர் என்று கூறுவது குற்றமாமோ? பிறந்த நாடு தாய் நாடு எனப்படுவது, அந்நாட்டிற் பிறந்த அனைவரையும் ஒருவர் தம் உடன் பிறந்தார் என மதிப்பதற்காக வன்றோ? ஆகையால், உம் பொருள் சிறிதாயினும், பெரிதாயினும், அஃது உம் நாட்டவர் அனைவர்க்கும் உரியது என்று கருதுவது சிறப்பாகும். அரசினர் நாட்டினர்க்கு நலம் புரிய அமைந்த காவலரே யாகையால், அரசினர் கையில் அளிக்கப்படும் பொருள் நாட்டினர் பொது நலத்துக்கே விநியோகிக்கப்படும். இது நிற்க. இனி வழக்குத் தீர்ப்புக் கூறத் தொடங்குவோம்.

இரண்டாம் முதியவர்:—அரசர் பெருமானே, இப்பொழுது கூறியதே தீர்ப்பாயிற்று. இன்னும் என்ன கூற இருக்கிறது? என் மூத்தோர் பொருளை யெல்லாம் இந்நாட்டவாக்குப் பொதுவிற் பயன்படுந் துறையில் அவரே செலவழிக்க உத்தரவிட வேண்டுகிறேன்.

**கரிகாலன்**:—ஐய, யாம் உம் முன்னோரது வாதத்திலே உள்ள ஒரு சிறு குறையை எடுத்துக் காட்டினோமேயன்றி, இன்னும் ஒன்றும் முடிவு கூறவில்லை. உமது



வாதத்திலும் ஒரு குறையுளது.: உமக்குப் பொருளிலே ஆசையில்லா திருக்கலாம். உம் மக்களுக்கும் அவ்வண்ணமே நிராசை யிருக்க வேண்டும் என்பது என்ன நியதி? பொருள் மிகுதி வருதலால், நன்மை விளையாது என்று நீர் கருதுகிறீர். புலமை படைத்திருக்கும் உமது மூத்த மைந்தர் இனிச் செய்ய விருப்ப தென்ன? தாம் கற்ற கல்வியைப் பிறர்க்குக் கற்பித்தலன்றோ கற்றதனாலாய பயனும்? புலமை படைத்த ஒருவர் நூற்றுக் கணக்கான மாணக்கர்கட்கு உண்டியும் உடையும் பிற அவசியப் பொருள்களும் உதவிக் கல்வி கற்பிக்கும் நிலைமை பெறுதல் சிறப்பன்றோ? முன்னோர் இயற்றியருளிய இயலிசை நாடக நூல்களையும் பிற சாஸ்திரங்களையும் பலர்க்கும் பயன்படுமாறு பிரதிகள் பல செய்து, ஏடுகளை முறைப்படுத்தி, நூற்களஞ்சியம் ஒன்று அமைப்பது கல்வி வல்லார் செய்யத்தக்க செயலே யன்றோ? புது நூல்கள் இயற்றினும், பல பிரதிகள் செய்து பலர்க்கு உதவ வேண்டுமே? இவ்வகை அரும்பணிகளை யெல்லாம் இயற்றக் கல்வி வல்லார்க்கும் செல்வப் பொருளின் உதவி அவசியம் வேண்டுவதே என்பது வெளியாகும். வேளாண்மையும் அமைந்த வுள்ளமும் பொருத்தமே யாயினும், விருந்திருக்க உண்ணலாகாத வேளாளன் உண்மையான வேளாண்மை யாற்ற விரும்புவானாயின், பெரும்பொரு ளுடையானா யிருத்தல் வேண்டு மன்றோ? பிறர்க்குப் பயன்படும் பொருட்டன்றே வேளாளன் பொருள் பெறுவது? எவ்வளவு பொருளிருந்தால் என்ன? குறைவாய் இருந்தாற் சிலர்க்குப் பயன்படுகிறது: நிறைய இருந்தாற் பலர்க்குப் பயன்படுகிறது.

இவ்வுண்மையை ஊகித்துணராமல்,நீர் கூறியது பொருந்துமா? உம் மருமகனைப் பற்றி நீர் கூறுவதில் உள்ள குறை யொன்றே. அவர் இளமையில் அறியாமையாற் செய்த இரண்டு குற்றங்களுக்காக வேண்டுமளவு தண்டனை யனுபவித்துவிட்டார். நம் மகளைப் பிரிய வேண்டுமென்றே அவர் எண்ணமுடையரா யிருந்திருப்பின், அயல் நாட்டகத்தே புது மணம் நிகழ்த்திக்கொண்டிருக்கலாம். நம் மாணிக்கங்களையுந் திரும்பக்கொண்டுவந்திருக்கிறார். அவர் நடத்தையைப் பற்றிய ஆராய்ச்சி ஒருபுறமிருக்க. நம் மகள் இத்தனை யாண்டுகளாக அடைந்திருந்த மனத் துயரை நீர் அறிந்திருந்தால், இவ்வாறு கூறியிருக்க மாட்டீர். நம் நாட்டிலே பெண்டிர்க்குக் கொழுநனே தெய்வம் என்ற அறிஞருரை பரவியுளது. அவன் குரூபியாயினும், குணக் கேடனாயினும், பல வாண்டுகள் பிரிந்து சென்றவனே யாயினும், அவனே அவர்க்கு உவப்பிற்குரியான். எத்தனை யாண்டுகள் கழிந்து வந்தாலும், உடைமை உடையானதாகுமே யன்றிப் பிறரதாய்விடுமோ? நம் மகள் இத்தனை நாளும் அனுபவித்த துயரத்தை யெல்லாம் தன் கணவன் வரலாற்றை யெல்லாம் உள்ளவாறு கேட்டு உணர்வாளாயின், மறந்துவிடுவாள். முன்னே யிருந்த துக்கமெல்லாம் மாறி இப்பொழுது, "அவரை என்று காண்போம்? எப்பொழுது திரும்பவும் நாம் மனை வாழ்க்கை மற்றவர்களைப்போல நடத்தப் பெறுவோம்?" என்றஎண்ணமே முற்பட்டு நிற்கும். பெண்டிர்க்கு இயல்பாகவுள்ள மன நிலை இதுவாம். இஃது ஒன்றையும் அறியாதவர் போல நீர் நம் மகளை மருமகனிடமிருந்து இனியுப்



பிரித்து வைக்கக் கருதிப் பிடிவாதம் செய்வது பொருத்தமாகாது. நம் வாதங்களிலே குறை கண்டது இவ்வளவில் நிற்க. இனி வழக்கின் தீர்ப்பைக் கூறுகின்றோம்.

இருவரும்:—அரசர் பெருமானே, இனித் தீர்ப்பு எவ்வண்ணம் வரும் என்பதை யாங்களே ஒருவாறு ஊகிக்கலாம்.

கரிகாலன்:— முதியவர்களே, கேளுங்கள்: இளையோர் தம் பெற்றோர்க்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுவது அவசியமே. அதற்கிணங்க அவர் தம்மிடமுள்ள எல்லாப் பொருள்களிலும் செம்பாதியை மூத்தவர்க்குக் கொடுத்துவிட வேண்டும். மூத்தவர் தம் உரிமையை மறுக்காது ஏற்றுக்கொள்ளவே வேண்டும். மூத்தவர் தாமாகத் தேடிய பொருள் அனைத்தையும் இப்பொழுது பெறும் முன்னோர் பொருளையும் சேர்த்து ஆண்டு அனுபவிக்க வேண்டும். அவர் மருமகப் பிள்ளையையே இந்நாள்காறும் புத்திரன்போலப் பாவித்திருந்தாராயினும், தம் பொருளனைத்தையும் மூவர்க்கும் சமபாகமாகக்கொடுக்கலாம்; தம்உயிருள்ளவரையில் தம்இஷ்டப்படி தர்மங்கள் செய்ததன் பிறகு பாகித்துக் கொடுத்தலே சிறப்பாம். கல்வி வல்ல மகனுக்கு நாம் முன்னே கூறியவாறு கல்விவளர்ச்சிக்கான உதவியைஇன்றிருந்தே அவர் செய்யத் தொடங்கலாம். மற்ற இருவர்க்கும் நிலங்களை வாங்கிக் கொடுத்து, அறம் வளர்க்கலாம். முன்னோரது பெயரை நிலை நிறுத்த வேண்டுவது மக்கள் கடமையாமாகையால், உங்கள் முன்னோர் பெயரால் உங்கள் ஊரிற் பெரியதொரு வைத்திய சாலையும் தமிழ்க் கலா சாலையும் அன்ன சத்திரமும் ஸ்தாபனம் செய்ய

லாம். அவற்றை நீவிர் இருவீரும் நம் மக்களும் முறையே மேற்பார்த்து வரவேண்டும். அரசினரது ஆதரவோ, மேற் பார்வையோ, அவற்றுக்கு வேண்டும் என நீவிர் எப்பொழுதேனும் எண்ணுவீராயின், அப்பொழுது உரிய முறையால் விண்ணப்பம் செய்து கொண்டால், எம்மால் வேண்டுமளவுக்கு உதவி செய்யப்படும். நம் மருமகன் முன்னே செய்திருந்த இரு குறைகளும் பொறுக்கப்பட்டன. அவர் இனி நம்மோடு ஒரே குடும்பமாகவேனும் தனித்தேனும் வாழ்ந்துவர வேண்டிய உதவிகள் செய்ய வேண்டும். அவர் மனைவியை அவரிடம் கையளித்து, இனி அவ்விருவரும் நன்கு மனமொத்து இன்புற்று வாழ்ந்து வர ஆவன செய்ய வேண்டும். உயிரோடு கணவன் இருக்கையில் எக்காரணத்தைக் கொண்டும் மனைவி அவனை யகன்று பிறந்த வீட்டில் வாழ்த லாகாது என்பது பொதுவற நெறியாம். அதற்கிணங்கவும், இந்நாள்வரைக்கும் தனிமையின் சுவையை யறிந்த இருவரும் இனியேனும் உலக வாழ்வில் ஆடவரும் பெண்டிரும் பிரிந்து வாழ்தலைக்காட்டிலும் சேர்ந்து வாழ்தலே இறைவன் அருளுக்கு இயைந்ததாம் என அறிய வுதவுமாறும், அவர்களை அவர்கட்குரிய பொருளைக் கொடுத்து வாழச் செய்தல் வேண்டும். பெற்றோர்க்கு ஆற்றற்குரிய கடமைகளை இனி முறைதவறாது அவ்விருவரும் மன மொருமித்து ஆற்றி வரக் கடவர். இதுவே நமக்கு யாம் கூறும் முடிவாம்.

இருவரும்:—இதுவே எம்மிருவர்க்கும் திருப்தியான முடிபு. இத்தகைய தீர்ப்புப் பெறலாம் என்று எதிர் பார்த்துத்தானே இங்கு வந்தோம்?



கரிகாலன்:—இறுதியில் நாம் கூற வேண்டுவதொன்றுண்டு: முதற்கண் நீவிர் வரும்போது நம் வழக்கை முதியவர் ஒருவரே தீர்த்து முடிவு கூறற்குரியரென எண்ணினீர். இதுவரையில் நம் விருப்பத்திற் கிணங்க யாம் முதிய அரசராய் இருந்தோம். இனி முன்போல இளமை தாங்கலாம் என்று எண்ணுகிறோம். (முதிய வேடம் களைந்தனன்.)

இருவரும்:—என்ன! நாங்கள் அங்கே கண்ட இளைஞரேயோ இவ்வழக்குத் தீர்த்த அரசர் பிரான்? எம் அரசர் பெருந்தகையை யாம் அறியா திருந்தது பெருங்குறையே.

கரிகாலன்:—இளமையும் முதுமையும் என்ன செய்யும்? அறிவு ஒன்று இருந்தால், எல்லாப் பருவமும் நன்றே. எமக்கு மேன்மேலும் உம்மைப் போன்ற பெரியோர்கள் வாழ்த்துரைகளால் அவ்வறிவு வளர வேண்டுமென்பதே விருப்பமாம்.

இருவரும்:—அரசரே, யாங்கள் அறியாது கூறியவற்றைப் பொறுத்தருள வேண்டுகிறோம். இனி நாங்கள் விடை பெறுகிறோம்.

கரிகாலன்:—அங்ஙனமே யாகுக.

# VII

சோழ நாட்டுப் படைஞர் மேன்மேலும் போர் புரிய வேண்டும் என்ற விருப்பமுடைய ராயினர். இளவள ஞாயிறுபோன்று சோழர் குடியிலே உதித்த கரிகாலனும் பிற மன்னரை வென்று புகழ்பெற வேண்டும் என்ற அவா வுடையனாயினன். இவற்றை யறிந்த இரும்பிடர்த் தலையாரும் பிற அமைச்சரும், உள் நாட்டு மறவர் தொகையை வளர்த்தற்கு உரிய முயற்சிகள் எல்லாம் செய்தனர். முதலிலே முன்னைப் போரில் இந்நாட்டு அரசுரிமை நாடிய கொடியோனுக்கு உதவியாய் நின்ற சேர பாண்டியரைப் போரில் வெல்ல வேண்டும் என்ற எண்ணம் சோழன் உள்ளத்தே குடி கொண்டது. அதற்கிணங்க, அவ்விரு நாடுகட்கும் தூது போக்கிப் பெரும் படையோடு போரியற்ற வருவதாய்த் தெரிவித்தனன்.

தூதர் கூறிய செய்தி கேட்ட சேரனும் பாண்டியனும், தத்தம் நாட்டகத்தே இளைஞனாகிய சோழன் போர் புரியத் துணிந்தது கண்டு மனம் பொறாது, அவன் நாட்டிலேயே அவனை யெதிர்க்கத் துணிந்து, பெரும் படையோடு சோழ நாட்டுள் இருக்கின்ற வெண்ணி யென்ற சிற்றூர் வரை வந்தனர்; தூதர் மூலம் தாம் வந்த செய்தியைச் சோழனுக்கு அறிவித்தனர். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்த அவனும், தன் படை



ஞரை ஒன்று சேர்த்து, வெண்ணியை அடைந்தனன். அவ்வூர்ப் புறத்தே குடி மக்கட்குப் பயன்படாதிருந்த பெரியதொரு பறந்தலையில் இரு திறத்தினரும் நெருங்கி நின்று போர் புரியத் தொடங்கினர்.

சேரர் படைஞரும் பாண்டியன் மறவரும், தமது புகழ் அழியாதிருக்க முயல்வாராய், இயன்றளவு போர் புரிந்தனர். தெய்வச் செயல் அவர்க்கு உதவியாய் முன் னிற்கவில்லை. அதனாற் கரிகாலன் படைஞர்முன் நிற்கலாற்றாது உயிர் துறந்து மடிந்த பல்லாயிரவர் களத்திலே கிடக்க, எஞ்சியிருந்தாருள் ஒரு சிலர் புறங்கொடுக்கவும் துணிந்தனர். பாண்டியன் இருந்த இடம் தெரியாது மறைந்தான். உதவியாக வந்த வேளிர் பதினொருவரும் அவர்தம் படையும் சென்ற இடம் தெரியவில்லை. இந்நிலையில் வீரருள் வீரனாகிய பெருஞ்சேரலாதன் என்ற சேர மன்னன், தன்னால் இயன்ற வளவு படைஞரை ஊக்கி முன் செலுத்தி நின்று, போர் புரிந்தான்: படைஞர் பிறர் கதியைக் கண்டு புறங்கொடுக்க எண்ணுவதை அறிந்து, அவர்க்கு ஊக்கம் வருவிக்கும் பொருட்டுப் பல பக்கங்களிலும் சென்று திரிந்து, ஆங்காங்குச் சிதறிக் கிடந்த பல் வகையாரையும் ஒருங்கு சேர்த்தான்; சோழர் படைஞரைக் கண்ட இடங்களி லெல்லாம் கொன்று குவித்தான். அக்காட்சியைக் கண்ட கரிகாலன், பெருந்திரளான படைஞரோடு எதிர் சென்று, அவனைத் தாக்கினன். சோழன் என்ற பெயர் கேட்ட வளவிலே அங்கிருந்த பகைவர் திறத்து மறவரெல்லாம், தம் தலைவர் எவ்வளவோ உற்சாகப்படுத்தியும் எதிர்த்து நிற்கலாற்றாது, புறங்கொடுத்தனர்.

அக்காட்சியைக் கண்டு பொறாத பெருஞ்சேரலாதன், தன் படைஞரைக் கறுத்து விழித்து, "வீரர்களே, 'தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று,' என்ற அறவுரையை நீவிர் மறந்தீர்; வெற்றி பெற்றாற் பெரும்புகழ் பெறுவீர்; போர்க்களத்திலே இறந்தால், வீரசொர்க்கம் புகுவீர். இவ்விரு வகையான உயர் வாழ்வையும் இழக்குமாறு நீவிர் புறங்கொடுக்கத் துணிந்தது புதுமையே! இன்று புறங்கொடுத்து நும் மனையகம் செல்வீராயின், அங்கு நும் அன்பின் செல்வங்கள் நும்மை அன்போடு வரவேற்கும் என்று எண்ணுகின்றீரோ? நும் மனைவிமார் புறப் புண்பட்டு நீவிர் ஓடி வந்த செயலை அறிந்ததும், நும் முகத்தில் விழியாது, தம் மனைக் கதவங்களை அடைப்பர். மறப்பெண்டிர்க்குத் தம் கணவன்மாரை இவ்வாறு காண்பதினும் இழிவு என்னை? அவர் நும்மை நாட்டுள் நுழைய விடார். அவரும் நும் கண் முன்னே தீப்பாய்வர். நும் மக்களுள் மிக விளஞ்சிறார் நும் செயல் கேட்டு நும்மை வெறுப்பர். ஆதலால், இறத்தலே அறத்தின் ஆறு. இறந்து பெறும் பெருமை, இறவாப் புகழேயாம். இறவாது அடையும் இழிவு வெற்றியில்லாத தோல்வியினால் வளர்ந்து உயிரோடிருந்தும் நடைப் பிணங்களாகச் செய்யும். இன்று மானம் இழந்தால், இனி என்றும் திரும்பப் பெற இயலாது. போரில் முனைந்து முன்னே செல்லுங்கள்," என்று தூண்டினன்.

பெருஞ்சேரலாதன் சிறந்த போர் வீரனேயாயினும், பலவாண்டுகளாகப் பெரும்போர்களிலே பயின்ற பயிற்சியுடையனே யாயினும், கரிகாலன் திருமாவளவனது



போர்த்திறங் கண்டு அதிசயித்தான்: அவனது வில்லிலிருந்து புறப்படும் அம்புகள் பாயும் வேகத்தைப் பார்த்தான்; அவனது வாள் எண்ணற்ற மறவரை இமைப் பொழுதிலே கொன்று குவிக்கும் அதிசயக் காட்சியைக் கண்டான்; விற்போரும் வாட்போரும் மாறி மாறி நடைபெறும் தன்மையை உணர்ந்தான்: தானும் வில்லுங் கையுமாய்ச் சோழனைத் தாக்க முன்னே பாய்ந்தான்; பாயும்பொழுது பின்னுள்ளோர் தொடர்ந்து வருகின்றனரா என்று அறியும்பொருட்டு ஒரு கணப் பொழுது திரும்பிப் பார்த்துப் பிறகு முன்னேறினான். வீரர் இருவரும் கடும்போர் புரிந்தனர். மாலைக் காலம் குறுகியது. இரவும் நெருங்கியது. வெற்றி சோழனதே என்று கூறும் நிலைமை வந்தது. மன்னர் இருவரும் தத்தம் பாசறை யடைந்தனர்.

சேரன் உடம்பெல்லாம் புண்ணாய் மயங்கினன். புறத்திலும் அம்பு பாய்ந்த புண் ஒன்று இருப்பதை உணர்ந்தான். புறங்கொடுக்காமலே போர் புரிந்த தனக்கு இப்புறப்புண் நேரிட்ட காரணத்தையும் சந்தர்ப்பத்தையும் நினைத்துப் பார்க்கலாயினன். மறவர்களைத் தூண்டித் தான் முன்னே பாய்ந்த பொழுது கரிகாலன் அம்பு சொரிந்துகொண்டு முன்னின்ற காட்சி நினைவுக்கு வந்தது. அவ்வமயத்தே மறவர் தொடர்ந்து வருகின்றனரா என்று ஒரு கணப் பொழுது தான் திரும்பிய காலத்தே இந்த அம்பு புறத்தே பாய்ந்திருக்க வேண்டும் என்று அறிந்தான். போரிற் புறங் கொடுத்துப் புறப் புண் படுதலும் புறங் கொடுத்தார்மீது அம்பெய்தலும் போரற நெறிக்கு விலக்கு என்பதை அவன் அறிவான்;

மறவர் பலர் உடம்பெல்லாம் புண்ணாகி மயங்கிக் கிடக்கும் காட்சியைக் கண்டான்; மனம் புண்ணானான்; பாசறைப் புறத்தே உலவிக்கொண்டிருந்தான்; அப்பொழுது பாண்டிய மன்னரும் பதினொரு வேளிரும் அன்று நிகழ்ந்த பெரும்போரிலே புறங்கொடாது போர் புரிந்து வீர சொர்க்கம் புகுந்த செய்தி கேட்டான்; அவர்க்குக் கிடைத்த பெருமை தனக்கு இல்லாது போயிற்றே என எண்ணமிட்டுப் பெரிதும் வருந்தினான்; புறப்புண்பட்டுப் பழிபூண்டு வாழ்வதைக்காட்டிலும் இறப்பதே சிறப்பாம் என எண்ணினான்.

சான்றோர் பலரால் எப்பொழுதும் சூழப்பட்டிருக்கும் பெருஞ்சேரலாதன் தன் உள்ளக் கிடக்கையை அவர்கட்குக் கூறத் தொடங்கி, "ஐயன்மீர், ஒருவன் தான் பிறந்த குடிக்குப் பெரும்பழி விளைக்குமாறு உயிரோடு வாழ்வதைக்காட்டிலும், இறந்து உயர்ந்த உலகம் புகுவது சிறப்புடையதாமன்றோ? ஆண்டில் இளைஞனும், நன்கு போர்ப் பயிற்சி பெறாதவனும், பிறருடைய உதவி பெறாதவனுமாகிய கரிகாற் சோழன் இன்று இயற்றிய போரிலே யான் அடைந்த பரிபவம் எளிதில் என்னால் மறக்கத் தக்கதன்றாம். மனந்தளர்ந்த படைஞரை ஊக்கும்பொருட்டு நான் திரும்பியபோது ஓர் அம்பு என் முதுகின்மீது பாய்ந்தது. 'புறப் புண்படும் போர் வீரன் தான் பிறந்த நாட்டுக்கும் தனக்கும் தன் குடிக்கும் இழிவு வருவிப்பவனே யாவன்,' என்பது நீவிர் அறியாததன்று. ஆகையால், இனி யான் உணவும் நீரும் துறந்து, வடக்கு நோக்கி யிருந்து, உயிர் விடத் துணிந்தேன்," என்றனன்.



அது கேட்ட சான்றோர், "புரவலரேறே, புறப்புண் படுதல் என்பதன் பொருளை நீ நன்கறிவை. யாங்களும் அறிவோம். ஒருவன் தன்னொடொரு நிகராகிய பகை வீரனொடு போர் செய்கையிற் போருக்காற்றாது போர்க்களத்துப் புறங் கொடுத்து ஓடுதல் பழியேயாம். அவ்வாறு ஓடும் ஒருவன் புறத்தே பகைவன் அம்பு பாய்ந்து புண் நேரிடுமாயின், அது புறப்புண்ணாகும். புறங்கொடுத்தார்மீது அம்பெய்தலாகாது என்ற அறநெறி நீ அறியாத தொன்றன்று. திருமாவளவன் சிறுவனே யெனினும், இவ்வற நெறியை அறியானல்லன். அவன் புறங்கொடுத்தார்மீது அம்பெய்யும் கீழ் மக்கள் குலத்திற் பிறந்தானல்லன். நீயும் போர்க்குப் புறங் கொடுப்போர் குலத்திற் பிறந்தாயல்லை. எதிர் பாராமல் நேர்ந்த இச்செயலில் இருவரும் மனம் வருந்தற் கேதுவில்லை. நீவிர் இருவிரும் ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்து அம்பினை எய்யும்போது நீ சற்றே பின் புறம் திரும்பினாய். அது பகைவனது போர்த் திறத்தைக் கண்டு அஞ்சியதாலன்று; நினக்கு அவனை யெதிர்த்து நின்று போர் புரிய ஆற்றல் இல்லாமையாலன்று; விற்போரும் வாட்போரும் முறையே புரிய அறியாமையாலன்று; தளர்ந்த உள்ளத்தோடு நின் பின் வந்த படைஞர் அணி வகுப்புக் குலையாது முறையே வருகின்றனரா வென்று பார்த்து அறிந்துகொள்வதன் பொருட்டேயாம். ஆகையால், நீ திரும்பியது புறக்கொடையாகாது. நின் முதுகின்கண் கரிகாலன் அம்பு பாய்ந்தது அவன் மனமுற எண்ணிச் செய்த செய்கையுமாகாது. ஆகையாற் குற்றமாகாத வொன்றைக் குற்றமாகக் கருதி மனம் புண்ணாகி நீ வடக்

கிருக்கத் துணிவது பொருத்தமாக எமக்குத் தோன்றவில்லை,'' என்று அன்பினாற் கூறினர்.

அந்நல்லுரையைக் கேட்ட சேர வேந்தன், "சான்றோர்களே, நீவிர் என்னிடம் கொண்ட அன்பு காரணமாக இவ்வாறு பரிந்து கூறுகின்றீராயினும், நும் உள்ளக்கிடக்கை என் மனப்போக்குக்கு மாறுபடாது என்பதை அறிவேன். என் குடிப் புகழ்க்கு மாசு தரும் ஒரு செய்கையை யான் செய்ய வேண்டும் என நீவிர் விரும்புகிலீர். வீரர்க்குரிய போர் முறையை விதித்த அற நூல்களிலே, வீரராயிருப்பார் போர்க் களத்திற் புறப்புண் படுதல் இழிவு என்று கூறும் இடங்களில் எங்கேனும், 'இன்ன விதம் பெற்ற புறப்புண்ணே புறப்புண்ணாம்; மற்றவை ஆகா,' என்று விதித்திருக்கின்றதா? அஃது எவ்வாறு அமையினும், புறப்புண் புறப்புண்தானே? அயர்ப்பிலே பட்டதாயின், விழுப்புண் ஆய்விடுமோ? வீரர் எனப்படுவோர் விழுப்புண்பட்டுப் போரில் இறத்தல்வேண்டும். அவ்வாறு இறக்கும் பேறு பெறாராயின், வடக்கிருத்தல் வேண்டும். இவ்விரண்டும் ஒருவர்க்கு அமையாவாயின், அவர் ஆண்மை பீடிழந்ததே; தேகப்பயிற்சி வீண்முயற்சியேயாம். ஆகையால், என் மனத்தில் தோன்றிய எண்ணத்தை மாற்ற முயன்று யான் பெறக் கருதும் நல்வாழ்வைப் பெறற்கு இடையூறு செய்யாது நுங்களால் இயன்ற உதவி புரிய வேண்டுகிறேன்,'' என்றான்.

இம்மொழியைக் கேட்ட அந்நல்லோர்கள், "நீ நினக்கு நேர்ந்ததாக எண்ணும் பழிப்பைப்பற்றி அறநூல்களின் கருத்தை எம் உள்ளத்தில் தோன்றியவாறு கூறினோமேயன்றி, நினக்கு வரும் நல்வாழ்வைத் தடுக்கும்



எண்ணத்தாலன்று. அன்பும், அரிய அறமும், அருளும், பொருளும், புகழும் எல்லாம் ஓருருவாய் வந்தது போன்றிருக்கும் அரசே, நீ வடக்கிருக்கவே துணிவையாயின், நீ செல்லும் நல்லுலகத்திற்கு உன்னைத் தனித்துச் செல்லவிடோம்; யாங்களும் உடன் வருவோம். இந்நாள்வரை நின்னுடன் பயின்று இவ்வுலகிலேயே இமையவருலக வாழ்வைத் துய்த்திருந்த யாங்கள், நீ இமையவருலக வாழ்வை நாடிச் செல்கையில் நின்னை யிழந்து பாழாகும் இவ்வுலகில் வாழ்ந்திருக்க இசையோம்,'' என்று எல்லோரும் ஒரு மனமாய்க் கூறினார்கள்.

சேரன் அது கேட்டு மனம் வருந்தி, அவர்களை யெல்லாம் தன்னைத் தொடரும் எண்ணத்தை மாற்றுமாறு வேண்டினன். "இப்பொழுது, இக்களத்தே வடக்கிருத்தல் நினக்கு இயைவதாயின், எமக்கும் இயைவதே,'' என்று அவர்கள் உறுதியாய்க் கூற, இறுதியில் வேறு வழியின்றி அவனும் அதற்கிசைந்தான்.

பின்பு அவரனைவரும் நன்னீராடி, நல்லுடையுடுத்து, உலகனைத்தும் படைத்துக் காத்து அழித்து மயக்கி அருளும் அமலனை நெஞ்சில் நிறுத்திப் பாசறைப் புறத்தே வடக்கிருந்தனர். "பெருஞ்சேரலாதன் சிறந்த குணங்கள் பல உடையன்; பழி தாங்கப் பொறாத பழங்குடியிற் பிறந்தவன்; சான்றோர் பலரது உடனுறை வாழ்வை அடையும் பேறு பெற்றவன், "என்ற புகழ் போர்க்களமெங்கும் பரவியது. அவன் அப்பிறப்பிலேயே உடம்பு பெற்ற பயன் பெறக் கருதினான் என்பது அறிஞரால் உணர்ந்து பாராட்டப்பட்டது. வெண்ணிப் பறந்தலையில் நிகழ்ந்த இவ்வருஞ்செய்தி உடனே அங்

கிருந்த வீரர் அனைவர்க்கும் தெரிதரலாயிற்று. அவ்வூரிலே குயவர் குடியிலே பிறந்த ஒரு பெண்பாற் புலவர் இவ்வருஞ்செயலைக் கண்ணாரக் கண்டு மன முருகிக் கரிகாலனிடம் வந்தார்.

கரிகாலன் பாசறைப் புறத்தே உலவிக்கொண்டிருந்தான். வெண்ணிக் குயத்தியார் அவனருகில் வந்து நின்றார். கரிகாலன் உடனே அவரது புலமைக்கேற்ற மரியாதைதந்து, வரவேற்றான். அவனது இளம்பருவத்தையும் இரு பெரு மன்னரும் பதினொரு வேளிரும் பொருதழிய வென்ற செயலையும் நினைத்து வெண்ணிக் குயத்தியார் அதிசயித்தார்; ஆயினும், தாம் கண்டு வந்த காட்சியைக் கூற விரும்பிப் பின் வரும் கருத்தமைந்த ஒரு செய்யு ளிசைத்தனர்.

“வளவர் குலத் தோன்றால், நீர் இத்துணை இளம்பருவத்தில் இத்தன்மையான பெரும்போரில் வென்றது அருஞ்செயலாகாது. ஏனெனில், நும் முன்னோர், நிலத்தகத்தும் போர் முயற்சியாலே சிறந்தவராயிருந்ததோடமையாமல், கடற்போரிலும் வல்லவராயிருந்தனர். அவர் கடற்போர்க்கு மரக்கலங்களிலே செல்லுங் காலங்களில் தமக்கு வேண்டிய வண்ணம் காற்று வீசாமலிருக்குமாயின், காற்றிற்குரிய தேவனையேவித் தமக்கு ஆகவேண்டும் முயற்சித் துறையை முடிப்பாராயிருந்தனர். மதக் களிற்றின் பிடரகத்தமர்ந்து போர் புரியும் மன்னர் மன்னரே, இருபேரரசரை எதிர்த்து நின்று வெற்றி கொண்ட நுமது புகழ் சிறப்புடையதே யாயினும், உலகத்திலே மிக்க புகழ் எய்துமாறு இவ்வெண்ணிப் பறந்தலையில் புறப்புண் பட்டதற்கு நாணி வடக்கிருந்த சேரலாதர் நும்மினும் நல்லவராவர் என்றே யான் கூறவேன்” *

* புறநானூறு—செய், 66.



இவ்வாறு அப்புலமைச் செல்வியார் பேசியதைக் கேட்ட கரிகாலன், மிகவும் அதிசயித்து, “அம்மையீர், பெருஞ்சேரலாதரது பெருமையை யான் இன்று நன்கு அறிந்தேன். புறப்புண் பட்டது அவர் புறங்கொடுத்ததாலன்று. ஆகையால், அஃது அவர்க்குப் பழி தரும் என்று யான் எண்ணுகிலேன். ஆயினும், அதனை அவர் பழியென எண்ணி வடக்கிருந்தது, தம் குலத்திலே தம்மால் அணுவளவேனும் குறை நேர்ந்தது எனப் பிறர் எண்ணாதிருக்கும்பொருட்டே என்று எண்ணுகிறேன். எங்ஙனமாயினும், சான்றோர் பலரும் தம்முடன் விண்புகுமாறு செய்யத் தக்க அரசரைப் படைத்ததால், நம் தமிழ் நாட்டுக்குப் பொதுவிலே விளையும் சிறப்பு அதிகமே. இன்றோடு போர் நிறைவேறியது. பாண்டிய மன்னரும் அவர் படைஞரும் பதினொரு வேளிரும் அவர் துணைப்படைகளும் அவரவர் தத்தம் நிலைக்கும் பயிற்சிக்கும் தக்கவாறு அறநெறிக்கு மாறுபடாது போர் புரிந்து தம் வீரத்திற்குரிய பரிசிலாகிய வீர சுவர்க்கம் எய்தினர். சோழ நாட்டு அரசன் இளைஞன் என்று இவர் அனைவரும் கருதி ஒருங்கு திரண்டு போர் புரிய வந்து எதிர்த்து நின்று இவ்வெண்ணிப் போர்க்களத்தில் இவ்வாறு உயிரிழக்க நேரிட்டது எனக்கும் வருத்தம் விளைக்கின்றது. அமைதியாய் முன்போல அனைவரும் வாழ்ந்திருப்பின், இவ்வின்னல் நேர்ந்திராது. இதுவே தமிழ் நாட்டகத்தே பிறரை அடக்கிப் பிரதாப சீலனாய் விளங்கவெண்ணி யான் இயற்றிய பெரும்போராம். இப்போர் யானாக விளைத்துக்கொண்டதன்று என்பதை யான் நுமக்குக் கூற விரும்புகிறேன். என்னைச்

சிறையகத்திட்டு நாட்டை யகல்வித்துத் துன்புறுத்திய தீயோனுக்கு இவரனைவரும் உதவியாய் இருந்தனராகை யால், யான் என் குலப் பெருமையை நிலை நாட்டற் பொருட்டு இம்முயற்சியில் இறக்க வேண்டுவது அவசிய மாயிற்று. என் நாட்டவர் உதவியால் இப்போர் நன்கு நிறைவேறியது. விளைந்த பயன் சிலர்க்குத் துன்பம்தருவ தாயினும், தமிழ் நாடு முழுமைக்கும் அரசுரிமை யுடை யான் ஒருவன் என உறுதிப்படுத்த உதவுவதனையால், ஒரு வகையில் நலம் தருவதேயாம். புலமைச் செல்வி யீர், நும் மனக் கருத்தை யான் உணர்ந்தேன். மனிதர் புகழ் பெறுதற்கு வழி இரண்டேயுள: ஒன்று தம்மை மறந்து அறஞ் செய்தல்; மற்றொன்று அவ்வண்ணமே அறப்போர் புரிதல். அறப்போர் புரிந்தார் இறந்தாலும், இருந்தாலும், புகழே பெறுவர் என்று நும்போன்ற பெரியார் கூறக் கேட்டிருக்கின்றேன்," என்று கூறினன்.

இச்செய்தி கேட்ட வெண்ணிக் குயத்தியார், மன வமைதி பெற்றுக் கரிகாலனிடத்தும் இரும்பிடர்த் தலை யாரிடமும் விடை பெற்றுச் சென்றார். அப்போர்க் களத்தே இறந்தார் ஒழிய, எஞ்சி யிருந்த பகை வீரர் அனைவரும் கரிகாலனைப் பணிந்து வணங்கினர். வெற்றி முரசு எங்கும் முழங்கியது. சோழர் குலச் சுடர் மணியா கிய திருமாவளவன், புலவரும் பாணரும் கூத்தரும் பொருநரும் விறலியரும் புகழ்ந்து பாடிப் பின்வர, மங்கல வாத்திய கோஷங்களுக்கிடையில் உறையூர் நோக்கித் திரும்பினன்.

அன்புடைய குடி மக்கள் பலர் எதிர்கொண்டழைக் கக் கரிகாலன் உறையூர் வந்து புகுந்தான்; அரண்மனை



புகுந்து, அத்தாணி மண்டபம் அடைந்தான். அங்கு அரசனைக் காணவெண்ணி முன்னரே வந்து குழுமி யிருந்த பெரியார் பலரும் எழுந்து நின்று, அவனை மன மார வாழ்த்தினர். புலவர் ஒருவர் எழுந்து நின்று, இரு கைகளையும் உயர்த்தி,

" தமிழகத் தலைமை தாங்கிய வளவ!
பழியொடு படா வழுதியர் தமையும்
விறலும் வீரம் சேரலர் வேந்தையும்
பதினொரு வேளிர் படைஞர் தம்மையும்
வென்று களங்கொளும் வேந்தே! வாழிய
நிலமெலாம் புரந்து நீவா ழியவே."

என்று மனமார வாழ்த்திப் புகழ்ந்து பாடினர்.

கரிகாலன் அவ்வாழ்த்துரை கேட்டு மிக மகிழ்ந்து, அவையத்தாரைப் பார்த்து, "பெரியீர்காள், நுங்கள் ஆசி வசனத்தாலும் இறைவன் திருவருளாலும் சில நாட்களின் முன்பு தொடங்கிய தமிழகத்துப் பெரும் போரிலே யாம் வெற்றி பெற்றோம். நம்நாட்டின் வளத்தை வளர்க்கவும் வீரர் வீரத்தை விருத்தி செய்யவும் விரும்புவோமாயின், மேலும் மேலும் போர் புரிந்து பல நாடுகளை வெல்ல வேண்டும். அவ்வாறு வென்று இப் பாரத பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆட்சி யாண்ட மன்னர்கள் பிறந்த குடியிலே பிறந்து, அவரது புகழை வளர்க்க விரும்பும் மனத்தையே யுடைய யாமும் எம்மால் இயன்ற முயற்சியைச் செய்வோம். இறைவன் திருவருள் இருப்பின், நன்னாள் ஒன்று நிர்ணயித்து, வடநாடு நோக்கிச் சென்று, போர் புரிந்து வென்று, பிற நாடுகளை நம் ஆட்சிக்குள் அடக்கி, விரைவிலே மீளலாம்

என்று கருதுகிறோம். எம் படைஞரும் அடிக்கடி எழும் பெரும்போர்களிலே தம் ஆற்றலை வெளியிட்டாலன்றிப் பெரும்புகழ் பெறுதற்கில்லையே யென்று எண்ணுகின்றனர். ஆகையால், நமது ஆசிர் வசனத்தையும் ஆமோதிப்பையும் எதிர் பார்த்து இன்னும் சில தினங்களிலே வட நாடு நோக்கிச் சென்று, அயலரசரை அடிப்படுத்தக் கருதியுள்ளோம். தனக்கு இருக்கும் நாட்டின் அளவையும் பொருளின் அளவையும் கொண்டு ஓர் அரசன் திருப்தி யடைதலாகாது என்பது நீவிர் அறிந்ததேயன்றோ?" என்று கூறினன்.

அவைக்களத்தார் அனைவரும் அதற்கு இணங்கியதைத் தெரிவிக்க, அங்கிருந்தார்களில் ஆண்டிலும் அறிவிலும் மூத்தாராகிய பெரியார் ஒருவர் எழுந்து, பின்வருமாறு கூறினர்:

"அரசரே, அவ்வாறே செய்க. அதுவே சோழ நாட்டுக் குடிகளாகிய எமக்கு விருப்பமாம். எம் அரசர் எம் நாடு ஒன்றையே ஆளும் அரசராய் இருப்பதைக் காட்டிலும பாரத பூமி முழுவதையும் ஆளும் பேரரசராய் இருப்பதே எமக்குப் பெருஞ்சிறப்பாம். ஆகையால், நீர் எண்ணிய எண்ணத்தை இனிது நிறைவேற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பெறுக. போர் வேந்தரே, தமிழகத்தாரை யெல்லாம் ஒரு குடைக்கீழ் அடங்குமாறு இவ்விளம்பருவத்திலே செய்த நமது ஆண்மையையும் ஆற்றலையும் வடநாட்டவர் அறியுங் காலம் விரைவிலே வருவதாக. சோழ நாட்டின் அரசியற் பொறுப்பைத் தக்கார் ஒருவர் கையில் அளித்து, இங்கு நாடு காவற்கு வேண்டிய படைஞரை நிறுத்தி, இப்போரிலே



வெற்றி பெற வுதவியாய் நின்ற பல வீரரோடும் சென்று, வட நாட்டிலே போர் புரிந்து, வாகை சூடி வருக. இவ்வளவும் நீர் செய்து வருவதில் எமக்குப் பூரணச் சம்மதமே. ஆனால், நான் இங்கு ஒன்று கூற விரும்புகின்றேன்: இங்குள்ளார் பலரும் என் எண்ணமே யுடையார் என்பதை யான் அறிவேன். நம் மறவர் மிக்க பயிற்சியுடையரே யாயினும், அயல் நாடுகளிற் சென்று போர் புரிந்து வென்று மீளுவதற்குப் போதிய பயிற்சியுடையரா வென்பதை ஆராய வேண்டும். நீவிர் நாடு காவல் ஏற்றுக்கொண்டு இந்தப் பத்து ஆண்டுகளில் மூன்று பெரும்போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவையெல்லாம் நம் நாட்டகத்து நிகழ்ந்தவையே. இவற்றால் நமக்கு உண்டாகிய பொருட் செலவு அதிக மென்றே கூற வேண்டும். இப்பொழுது நாட்டை யகன்று அயல் நாடுகளிலே செய்யும் ஒரு பெரும்போரைத் தொடங்குதற்கு வேண்டிய பொருளும் பிறவுதவிகளும் நம்மிடம் உள்ளனவா என்பதை யோசிக்க வேண்டும். மேலும், எம் அரசர் போரில் வல்லவர் என்ற புகழ் அயல் நாடுகளிலே பரவா முன்னரே அவர் அங்குப் போர்க்குச் செல்வாராயின், அங்குளார் எங்ஙனம் வரவேற்பரோ! முக்கியமாக நான் ஒன்று கூற வேண்டுவதுண்டு: நம் அரசர் பெருமக்கள் முறையே மணம் புரிந்துகொள்ளும் பருவத்தை நீர் அடைந்திருந்தும், மணம் புரிந்து கொள்ளாதிருப்பது நாட்டு மக்கள் மனத்துக்கு ஒரு குறையாகவே தோன்றுகிறது. போரினால் வென்ற இத்தமிழக முழுமையும் சில ஆண்டுகள் அமைதியோடு நன்கு ஆண்டு அறம் நிலை நிறுத்திப் பகைத்தாரை

யெல்லாம் ஒரு மனப்பட்டு வாழுமாறு செய்ததன் பிறகு வடநாடு செல்வது நலமாம். ஏனெனில், அங்குச் சென்றிருக்கையில் இங்குளார் அகப் பகைகளும புறப் பகைகளும் நன்கு அடக்கப் பெறுவிடில், நாட்டுக்கே தீங்கு விளையும் என்பதை நான் கூற வேண்டா. ஆகை யால், அரசரே, விரைவிலே நல்ல குலத்தில் மணம் புரிந்துகொண்டு, சில ஆண்டுகள் இங்கு இருந்து, அமை தியை நிலை நிறுத்திப் பிறகு வடநாட்டுப் போர்க்குச் செல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்."

கரிகாலன்:—நாட்டவர் விருப்பம் அதுவாயின், அங்ஙனமே யாகுக.

# VIII

உறையூர் நகரத்து அரச மாளிகைகளுக்குப் பின் புறத்தே ஒரு பெரிய பூஞ்சோலை உண்டு. அச்சோலை யில் அரசரும் அரசர்க்கு நெருங்கிய சுற்றத்தாருமே உலவி வரும் உரிமை யுடையார். தகுந்த காவலுடைய அச்சோலையிலே ஒரு நாள் மாலைப் பொழுதில் திருமா வளவன் தான் அங்குக் கண்டு பேச எண்ணிய ஒரு வரை எதிர் பார்த்துச் சிறிது மனக் கவலையோடு உலவிக் கொண்டிருந்தான். சிறிய பூஞ்செடிகளும் பெரிய பூ மரங்களும் தடாகங்களிலுள்ள பூங்கொடிகளும் அழகு செய்யும் காட்சி அன்று அவன் மனத்தைக் கவரவில்லை. அவன் இப்படி இருக்கையில், அங்கு இரும்பிடர்த்தலை யார் வந்தார். பின்னர் அவ்விருவரும் அங்கு அரசாங்க சம்பந்தமான பல விஷயங்களைக் குறித்துச் சிறிது நேரம் பேசிய பிற்பாடு, வேறு விஷயங்களைப் பேசத் தொடங்கினர்.

வளவன்:—ஐய, அமைச்சர் தலைவரே, இவ்வாறு நாட்டு மக்கள் எனது ஊக்கத்தைக் குறைக்க முயன்றது நன்று என்று நீவிர் எண்ணுகின்றீரா?

அமைச்சர்:—இறைவன் அருளால் எடுத்த முயற்சி நன்கு நிறைவேறுமென்ற உறுதியான நம்பிக்கை தோன் றினாலன்றி, ஒன்றைத் தொடங்கலாமா? வடநாட்டுக் குச் சென்று பிற மன்னரை அடக்க வேண்டா என்று

நாட்டு மக்கள் கருதவில்லை; சென்றால், வெற்றி பெற்றே திரும்ப வேண்டும் என்று கருதியே இவ்வாறு கூறினார்கள்.

வளவன்:—அது நிற்க. ஐய, என்னை இவ்விளம் பருவத்திலே மணம் புரிந்து மக்களைப் பெற்று வாழுமாறு கேட்பது நியாயமெனத் தோன்றுகின்றதா? போர்க் களத்திலும் போர்ப் பயிற்சியிலும் ஆசையுடைய ஓர் ஆண் மகனுக்கு மண வாழ்வு இன்ப வாழ்வாகத் தோன்றுமா?

அமைச்சர்:—மக்கள் இனம் நிலவுலகத்திலே இடையறாது பெருகி வருதற்பொருட்டு இறைவன் அமைத்த வாழ்வின் நிலைக்கு மாறாக நாம் செல்லுதல் இயலுமோ? அரசர்க்குப் போர்த் திறம் சிறப்புடையதே யாயினும், அவர்தம் மரபு அழியாது காத்தலும் அவர்க்குரிய கடமைதானே? ஆகையால், உரிய கடமையை உரிய காலத்திலே செய்யுமாறு நாட்டு மக்கள் வேண்டியது குற்றமாகுமோ?

வளவன்:—நாட்டு மக்கள் விருப்பத்திற்காகவே மணம் புரிவதாக வைத்துக்கொள்வோம். பெண் கொடுக்க வுரியார்களாகிய சேரரும் பாண்டியரும் இப்பொழுது நம் நாட்டில் தம் பெண்ணை வாழ்விக்கும் நிலைமையில் இல்லையே! இதற்கு என் செய்வது?

அமைச்சர்:—சேரர் குடியிலே இப்பொழுது மணப் பருவம் உடைய பெண்கள் இல்லை; பாண்டியர் குடியில் உளர். விருப்பம் இருப்பின், அவர்கள் நம்பால் மனத்தகத்தே வைத்திருக்கும் பகை நீங்குமாறு பேசி, மணவினை நிறைவேற்றலாம். அதன் பிறகு அவர்கள் நம்மோடு மனமொத்து வாழ்வார்கள். இதற்கு அங்குப் போய்ப் பேசி எண்ணியதை நிறைவேற்றத் தக்க அறிவுடையாரை அனுப்பல் வேண்டும்.



வளவன்:—வேளிர் குடிகளிலே நம் மரபிலே பெண் கொள்ளும் வழக்கம் உண்டே! இப்பொழுது அப்படிக் கொடுத்தற்குரியார் ஒருவரும் இல்லையா? கொடுத்தற்குரிமையுடைய குடிகளிலே பெண்கள் இல்லையா?

அமைச்சர்:—சோழர் குடிக்குப் பெண் கொடுத்தற்குரிமையுடைய வேளிர் பலர் இருக்கின்றனர். அவருள் இப்பொழுது நாங்கூர்த் தலைவராகிய வேளிர் குடிப் பெரியார்க்கு அருங்குணங்கள் பலவும் அமைந்த ஒரு பெண் உண்டு. அப்பெண் மணப் பருவம் உடையளாயிருப்பாள் என்றே எண்ணுகிறேன்.

வளவன்:—ஐய, பாண்டியர் குலத்துக் குமரியை மணந்துகொள்ளல் நலம் என்று நீவிர் எண்ணுகின்றீரா? அல்லது வேளிர் குலக் குமரியை மணத்தலே சிறப்பென்று எண்ணுகிறீரா?

அமைச்சர்:—இருவரும் மணத்தற்குத் தகுதியுடையரே. இருமகளிரையும் ஒருநிகராக மதிக்கும் முறை ஏற்படுமாயின், இருவரையுமே மணந்துகொள்ளலாம். மரபின் வளர்ச்சியைக் கருதும் அரசர் பொதுவாக இரு பெண்டிர்களுக்குக் குறையாமல் மணம் புரிந்துகொள்ளுதல் தொன்று தொட்ட வழக்கமாம்.

வளவன்:—இருவரையும் மணந்தாற் பாண்டியர் குமரி உயர்ந்த மதிப்புக்கும் வேளிர் மகள் அவளிற் சிறிது தாழ்ந்த மதிப்புக்குமே உரியர் என்று உலகினர்

எண்ணுவரே! ஆகையால், யாரேனும் ஒரு பெண்ணை மணந்துகொள்ளலே சாலும் என்று எண்ணுகிறேன்.

அமைச்சர்:—இரு பெண்டிரையும் மணத்தல் நலம். நம் முன்னோர் பலர் அங்ஙனமே செய்திருக்கின்றனர். நம் தந்தையார்க்கும் இருவர் தேவியர் இருந்தனர்.

வளவன்:—அது நமது விருப்பமாயின், அவ்வண்ணம் ஆகுக. இவ்விரு குடியினரிடமும் வேண்டுவன பேசி முடிவு செய்தல் நம் பொறுப்பேயாகும். இருள் வந்து சூழும் முன்னே நாம் அரண்மனைக்குச் செல்வோம்.

அமைச்சர்:—அவ்வண்ணமே செய்வோம்.

பின்னர் அவ்விருவரும் அரண்மனைக்குட் சென்றனர். பிறகு சில தினங்களில் இரும்பிடர்த் தலையார் பாண்டிய நாட்டுக்குப் போய் அந்நாட்டு மன்னர் மகளைச் சோழ மன்னனுக்கு மணம் புரிந்து கொடுக்குமாறு உரிய முறைகளாற் கேட்டனர்; அதனால், எதிர்காலத்தில் அந்நாட்டுக்கு விளையும் நன்மைகளை எடுத்து விளக்கிக் கூறினர். வெண்ணிப் போர்க்களத்திலே இறந்த பாண்டியன் மைந்தன், கரிகாலன் ஆட்சிக்கடங்கி இப்பொழுது அரசாண்டுகொண்டிருந்தான். அவன் இச்செய்தியைக் கேட்டுச் சந்தோஷித்தான். சோழர்க்குக் கீழ் அடங்கியிருக்கும் நிலையைக்காட்டிலும், அவர் குடியிலே பெண் கொடுத்து ஒரு நிகராக வாழ்தல் நலமேயாம் என்று எண்ணினான். ஆகையால், அவன் இரும்பிடர்த் தலையார் வேண்டுகோளுக்கு இசைந்தான்; அவர்க்கு உரிய சிறப்புக்கள் செய்தான்.



பிறகு அப்பெரியார் பாண்டிய நாடு அகன்று, சோழ நாடு அடைந்து, நாங்கூர் சென்று, நாங்கூர் வேளைக் கண்டு, அவரிடம் தாம் வந்த காரணத்தைத் தெரிவித்தார். அவரும் மிக்க மகிழ்ச்சியடைந்து, "தமிழகத்தை ஆளும் மன்னர் பிரானுக்கு மகட்கொடை நேரும் பேறு எனக்கு வாய்த்ததே!" என்று கூறி, அதற்கு இசைந்தார். பின்னர் அப்புலவர் பெருமான் நாங்கூரினின்று புறப்பட்டு, உறையூர் வந்து சேர்ந்து, தம் முயற்சியின் பயனை அரசனிடம் தெரிவித்தார்.

அவனும் புலவர்க்கு உரிய சிறப்புக்களைச் செய்தான். பின்பு அப்புலவர் அவன் அனுமதி பெற்று, மணவினைக்குரிய நாளை விரைவிலேயே நிச்சயித்தனர்.

மண வினைக்குரிய நாள் குறுகியது. பாண்டியரும், சேரரும், தத்தம் பரிவாரங்களோடு வந்தடைந்தனர். வேளிர் பலரும் வந்தனர். பண்ணிறந்த பாணரும் வயிரியரும் வந்து கூடினர். புலவர் பலர் வந்து அடைந்தனர்; அவரவர்க்கென அமைந்த இடங்களிலே தங்கினர். இரும்பிடர்த் தலையார் பல இடங்களிலும் நேரிற்சென்று, அவரவர்க்குரிய சிறப்புக்களைச் செய்து, உபசரித்து வந்தனர்.

திருமண மாளிகையிலே, குறித்த தினத்திலே நன் முகூர்த்தத்திலே சான்றோர் பலர் முன்னிலையில் திருமாவளவன் பாண்டியர் குலப் பெண்ணையும் நாங்கூர் வேள் மகளையும் திருமணம் புரிந்தனன். பாணரும் புலவரும் பாடி வாழ்த்தினர். அந்தணர் ஆசி கூறினர். அங்கு அடைந்திருந்தார்க்கெல்லாம் மணப் பொருள்கள் வழங்கப் பெற்றன. புலவர் பலரும் சிறப்பான பரிசில் பெற்ற

னர். பத்துத் தினங்கள், நாடெங்கும் பல வகையான தேவாலயங்களிலும் விசேஷமான உற்சவங்கள் கொண்டாடப் பெற்றன. இரும்பிடர்த் தலையார் அங்கு அடைந்திருந்த மன்னர்களுக்கும் பிற தலைவர்களுக்கும் அவரவர் நிலைமைக்கேற்ற சிறப்புக்கள் செய்தனர்.

பிறகு சில தினங்கள் சென்றன. பாண்டிய மன்னரும் சேர மன்னரும் விடைபெற்றுச் சென்றனர். வேளிர் பலரும் விடைபெற்றகன்றனர். திருமாவளவன் முன்போல அரசுரிமையை மேற்கொண்டு, நாடெங்கும் சஞ்சரித்து, ஆங்காங்குக் குடிகட்குள்ள குறைகளை நேரில் விசாரித்தறிந்து, அவற்றுக்கு வேண்டிய பரிகாரங்களை அவ்வப்போது செய்து வந்தான்.

தேவியர் இருவரும் ஒருமனமுடையாராய்த் திருமாவளவன் அன்பின் செல்வத்தில் திளைத்து வந்தனர். ஐந்து ஆண்டுகள் ஆயின. பாண்டியன் குமரி முதற்கண் ஒரு பெண் மகவு ஈன்று பின்பு ஓர் ஆண் மகவும் ஈன்றனள். வேளிர் குலக் குமரி முதலிலே ஓர் ஆண் மகவும் பின்பு ஒரு பெண் மகவும் ஈன்றனள். நான்கு குழவிகளும் அரசன் மனமகிழ மழலை மொழிந்து மடநடையாடி விளையாடி வந்தனர்.

திருமாவளவனுக்கு இக்காட்சிகளைக் கண்டு மனத்துக்கு மகிழ்ச்சி யுண்டாயிற்றாயினும், வட நாட்டுக்குப் போகும் போர் முயற்சி தடைபட்டதே யென்ற கவலை மனத்தில் இருந்துகொண்டே யிருந்தது. அதனால், அவன் அமைச்சரோடு ஆராய்ந்து, நாடாட்சிக்கு வேண்டும் முறைகள் செய்து வைத்து, வடநாடு நோக்கிச் செல்லக் கருதினான்.



பாரத பூமியோ, பெரியதொரு கண்டம். அதன்கண் உள்ள நாடுகளும் அரசுகளும் நூற்றுக் கணக்கானவை. அவையனைத்தையும் தென்னாட்டிலே தமிழகத்திலே அரசுபுரிந்த ஓர் அரசன் வெல்லவும் அடக்கியாளவும் கருதுவது எவ்வகையாற் பொருந்தும் என்னலாம்? பாரத கண்டம் உருவத்தாற் பெரிது; பழமையான சரித்திர முடைமையாற் சிறந்தது; இயல்பாகவே அமைந்த மலையரண் கடலரண்களால், பிற நாட்டவர் எவரும் தன்னை யணுகல் எளிதிலியலாத மாண்பு உடையது; எவர் வரினும் இடம் தரும் அறச் செல்வமும் உடையது; தன் உடலைப் பல கூறாகப் பிளந்து ஒரு தாய் தன் மக்களுக்குக் கொடுப்பது போலப் பல வகை மொழிகளும் கொள்கைகளும் ஒழுக்கங்களும் வரன்முறைகளும் ஆட்சி முறைகளும் ஆகிய பிரிவுகள் பலவும் தன்னைத் துண்டு துண்டுகளாய்ப் பிளந்ததால், சிறுமையும் படைத்திருக்கிறது. கதிரவன் குலத்தார் ஒரு குடைக்கீழ் ஆண்ட இப்பெரு நாட்டின் பெருமையும் சிறுமையும் அக்குலத் தோன்றலாகிய திருமாவளவன் உள்ளக் கண்ணில் உதித்தன. அவன் அதன் பெருமையை நினைந்து, மனமுருகிச் சிறுமையைத் தவிர்க்க வழி யுளதோ வெனப் பல முறை ஆராய்ந்தான். பிடர்த்தலைப் பெரியாரை அமைச்சராய்ப் பெற்றவன் சூழ்ச்சித் திறத்தைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ?

அரசர் பிரானாகிய கரிகாலன், தன் அம்மானாகிய அமைச்சப் புலவரை யடுத்து, "நமது புண்ணிய பூமிக்குள்ள பெருங்குறை யொன்றை அகற்ற விரும்புகிறேன்," என்றான். அவர், "குறை யென்னை?" என்றார். அதற்கு

அவன், "இயற்கைச் செல்வமும் செயற்கை நலங்களும் சிறந்த இப்பெரிய நாடு ஒரு பேரரசன் ஆட்சியில் இருப்பின், எவ்வளவு சிறப்பு எய்தும்! பல சிற்றரசர் வலியற்றவராய் ஆண்டு வருதலாலன்றே அடிக்கடி போர்கள் பல நிகழ்ந்து குடிகள் பெருங்கவலைக்காளாகின்றார்கள்? ஓர் அரசும் ஒரு மொழியும் ஒரு கொடியும் இந்நாடெங்கும் ஒரு மனமாய் ஏற்றுக்கொள்ளப்படுமாறு செய்தல் இயலாத காரியமா?" என்றான்.

அவர் முக மலர்ச்சியோடு அவனை நோக்கி, "ஐய, உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மைந்தராகிய நும் சிந்தையிலே இவ்வெண்ணம் எழுந்தது சிறப்பேயாம். குமரியொடு வடவிமயத்தொரு மொழி வைத்துலகாளும் மன்னராக எம் அரசர் ஓங்குயர வேண்டும் என்பதே இந்நாட்டவர் விருப்பமாம்," என்றனர்.

வளவன் அப்பெரியாரை நோக்கி, "இறைவன் அருளும் தம்மைப் போன்ற பெரியோர் ஆசீர் வசனமும் இருப்பின், யான் அத்தகைய வேந்தனாக முயலலாம் என்றே எண்ணுகிறேன். முயற்சியால் முற்றுறு வினையுண்டோ?" என்றான். பிடர்த்தலையார், "சென்னியர் குலமணியே, முயற்சியால் முற்றாத வினையில்லையென்பது மெய்யே. நுமது முயற்சியும் இறைவனருள் துணையும் உள. அன்றியும், நுமது பிறப்புக் காலத்தே கோள்கள் நின்ற நிலையை ஆராய்ந்த காலக்கணக்கர் விரைவிலே பாரத பூமி முழுவதும் ஆளும் பேரரசு ஆதற்குரிய யோகம் நுமக்கு வரும் என உரைத்தனர். அறிஞர் உரை பொய்படுமோ?" என்றனர்.



கரிகாலன், "அங்ஙனமாயின், இன்னும் சில தினங்களில் யான் வட நாடு நோக்கிப் போர்க்குப் புறப்படக் கருதியிருப்பது தமக்கும் சம்மதமென்றே நினைக்கிறேன். சென்று வினை முற்றித் திரும்பி வருங்காறும் இவ்வரசின் பொறுப்பனைத்தும் தம்மிடமே வைத்துச் செல்லவும் கருதியுளேன்," என்று முகமலர்ச்சியொடு கூறினன்.

இரும்பிடர்த்தலையார் அது கேட்டு, "மன்னர் மன்னரே, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மைந்தர் போர் புரிவதிலே விருப்பமுடையராயிருத்தல் வியப்பன்று. "**மகனுரைக்கும் தந்தை நலத்தை**" எனவும், '**குலவித்தை கல்லாமற் பாகம் படும்**" எனவும் அறிஞர் கூறும் உரைகள் பொய்யாமோ? வட நாட்டுப் போர் தொடங்க வேண்டும் என ஐந்தாண்டுகளின் முன்னே எண்ணியது சில காரணங்களாற் றடைபட்டது. அஃது இறைவன் திருவருளால் இப்பொழுது நன்கு நிறைவேறும் என்று எண்ணுகிறேன். அரசின் பொறுப்பைப் பற்றி யான் கூற விரும்புவது ஒன்று உண்டு: இந்நாட்டு அரசின் பொறுப்பு யான் எளிதிற் பொறுத்து நடத்தத் தக்க நிலையில் இப்பொழுது இல்லை. ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தாரும் ஆகிய பலருள்ளும் அறிவிற் சிறந்தார் சிலரைத் தெரிந்தெடுத்து, அவரது பொறுப்பில் அரசினை நிறுத்தி வட நாடு செல்லலாம். யான் பிறந்த நாட்டுக்கு என்னால் இயன்ற பணி புரிய ஒருபொழுதும் பின் வாங்கேன். வடநாட்டவரைத் தமிழகத்தாராக்குதற்கு நினைந்து செய்யும் போரிலே வெற்றியே விளைக. நாடு செழிக்க நலம் பெருகுக," என்று கூறினர்.

வளவர் கோன் அதன் பின்னர் அவர்க்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, வேறு சில அமைச்சரையும் நாடு காவலரையும் படைத் தலைவரையும் அழைப்பித்துத் தமிழகத்தின் காவலுக்கு வேண்டுவன ஆலோசித்து முடிவு செய்தான்: பிடர்த் தலையார் சொல்லிய வண்ணம் அரசப் பொறுப்பினரை அமைத்தான்; காலக் கணக்கரால் நன்னாள் ஒன்று தீர்மானித்துக்கொண்டான்; அந்நாளிலே தேவாலயங்களிலெல்லாம் விசேஷ பூஜைகள் செய்வித்துப் பிரசாதம் பெற்று, நன் முகூர்த்தத்திலே குடையும் கொடியும் முன்செல்லப் படைஞர் பல்லாயிரர் திரண்டு அணியணியாய்த் தொடர்ந்து செல்ல, முன்னனுப்பிப் பிறகு தானும் புறப்பட்டான்.

தமிழ் நாட்டுள் வாழும் மக்களனைவரும், அன்று தம் அரசன் பாரத பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து, அந்நாட்டில் எங்கும் புலிக் கொடியே பறக்கச் செய்வதற்காகப் புண்ணிய திசையாகிய வடதிசை நோக்கிப் புறப்பட்டதை யறிந்து, தாமும் அவனுக்குத் துணை வருவதாய்க் கூறி, அவன் பின்றொடர்ந்தனர். சேர நாட்டுப் படைகளிற் பெரும்பகுதியும் பாண்டியர் படைஞரிற் பெரும்பாலோரும் பின் சென்றனர். நகரனைத்தும் பல வகை மங்கலக் குறிகள் தோன்றின. வலி படைத்த ஆடவர் பலரும் படைஞராய்ச் சென்றதால், நகரம் மக்கள் இல்லாதது போன்று தோன்றியது. சான்றோர் பலர் அரசனைப் பின் பற்றி வந்தனர். புலவர் புகழப் புறப்பட்ட அப்புரவலன், நல்லோர் பலரையும் நாட்டகத்தே அமைதியாய் வாழ்ந்து வருமாறு வேண்டிக்கொண்டு விடை கொடுத்து, வட திசை சென்றான்.



வேளிர் பலர் படைகளும் சேர்ந்துகொண்டன. அந்நாளில் அம்மன்னனோடு சென்ற கரி பரி தேர் காலாட்களின் தொகை பாரதப் போரிலே கௌரவர் பக்கம் திரண்ட படைக்கு நிகராம் என அங்கிருந்தார் கூறினர்.

களிற்றரசின்மீது முரசம் முழங்கப் புறப்பட்ட அப்பெரும்படையைத் தமிழகத்தின் அயலில் உள்ள தென்னாட்டு மன்னர் கண்டனர்: தாம் தனித்தனியே நின்று எதிர்த்தல் அறிவுடைமை யாகாது என்று எண்ணினர். ஒன்பது குடை மன்னர் ஒருங்கு சேர்ந்தனர்; தம் படைகளை ஒன்றாய்த் திரட்டித் தமிழகத்தின் வட வெல்லையில் உள்ள வாகைப் பறந்தலை யென்ற பெரும் போர்க்களத்தில் வந்துற்றனர். அன்னவர் வருகையை அறிந்த கரிகாலன் அங்கு விரைந்து சென்றான். பெரும் படைகள் இரண்டும் கை கலந்தன. இரண்டு நாட்கள் போர் நிகழ்ந்தது. இறுதியில் அம்மன்னர் ஒன்பதின்மரும் தம் குடையும் கொடியும் இழந்து புறங்கொடுத்துக் காட்டுள் ஒளித்தனர். அவர்தம் படைஞருள் எஞ்சியிருந்தோர் சோழனை வணங்கி அவனிடம் பணி செய்வதாகக் கூறி உய்ந்தனர். இவ்வுண்மையை அறிந்த பிற மன்னர் ஒவ்வொருவரும் கரிகாலன் படைக் கடலிலே தத்தம் படைகளாகிய சிற்றாறுகளைக் கலக்குமாறு செய்து, தாமும் வட நாட்டுப் போர்க்கு வருவதாய்ப் புறப்பட்டனர்.

அவ்வாறு வளர்ந்துகொண்டே விந்திய பர்வதத்துக்கருகில் நெருங்கும்போது சோழ நாட்டுப் படை பல திறப் படைஞரையும் உடையதாய்ப் பெரியதொரு நாட்டை நகர்ந்து போவது போலப் போய்க்கொண்டிருந்தது. அப்

பக்கத்திலிருந்த அரசர் பலரும் ஒற்றராலும் தூதராலும் இச்செய்தியை முன்னரேயறிந்து, தென்றிசையிலிருந்து வரும் தமிழ் மன்னன் ஒருவனுக்குத் தாம் தலை வணங்கலாகாது என எண்ணி, ஒருங்கு திரண்டு, போர் எதிர்ந்தனர். சில நாட்கள் நிகழ்ந்த போரிலே எதிர்த்து வந்த அரசரிற் பெரும்பான்மையோர் தம் முடியும் குடியும் அழிந்து ஒழிந்தனர். படைஞர் வேறு வழியின்றி, வணங்கித் தமிழகப் படையொடு கலந்தனர். எஞ்சிய சில அரசர், பொன்னும் மணியும் பிற பொருள்களும் மலைபோலக் குவித்துத் திறையளந்து, தலை வணங்கி, உயிருய்ந்தனர்.

எதிர்ப்பார் எல்லாரும் இவ்வாறு தலையிறைஞ்சித் திறையளக்க அவற்றைப் பெற்றுக்கொண்டு, மேலும் மேலும் வளவன் வடதிசை நோக்கிச் சென்றான். அங்கங்குள்ள பல திறமன்னரும் தமிழ்ப் படைஞர்க்குச் செய்யவுரிய உபசாரங்கள் செய்து, கரிகாற் பெருவளத்தான் முன்பு தலைவணங்கித் தம் முடியொடு சென்றனர். தான் எடுத்த காரியம் இவ்வாறு நன்கு நிறைவேறியதால், மனமகிழ்ந்த சோழர் குலத் தோன்றல் இமயவரையை அணுகினன்: படைஞர் பலரோடு அம்மலையைக் கடந்து அப்பால் உள்ள நாட்டை அடைய எண்ணினன். தன் பெயர்க்குப் பொருந்தப் பனிக்கட்டி நிரம்பியிருந்த அப்பெருமலை, தென்னாட்டிலே வாழ்ந்து பயின்ற படை வீரர்க்கு எளிதில் வழி விடாதாயிற்று. அது கண்டு, சோழர் பிரான், மேலும் வடக்கு நோக்கிச் செல்லவொட்டாது தடுத்த அம்மலையைத் தண்டிக்கக் கருதியவன் போலத் தன் கையில் இருந்த செண்டால் அதன் சிகரத்தை அடித்து, உயர்ந்ததொரு நிலையில், அம்மலை தன்னாட்சிக்



கடங்கியதற்கு அறிகுறியாகப் புலிப் பொறி பொறித்தான்.

பிறகு அவன் நினைத்தது முற்றச் செய்த நிமலனைத் தொழுது, தென்னாடு நோக்கித் திரும்பினன். திரும்புகாலில் சோணையாற்றங்கரையில் உள்ள வச்சிர நாட்டையடைந்தான். அந்நாட்டு மன்னன் சோழனது பிரதாபத்தை முன்னமே செவியால் அளந்தறிந்தவனாகையால், விரைந்து வந்து, உபசரித்து, முத்துப் பந்தர் ஒன்றும் பிற பொருள்களும் கொடுத்துத் தமிழ் வேந்தன் நட்புப் பெற்றுக்கொண்டான். தமிழ்ப் படை அதன் பின்னர் மகத நாட்டையடைந்தது. அந்நாட்டு மன்னன் போர்க்கு எதிர்த்து வந்தான். வடவரும் தென்னவரும் கைகலந்து நெடும்போர் புரிந்தனர். தெய்வ பலம் பெற்றிருந்த சென்னியின் பக்கமே வெற்றித்திரு வந்துற்றனள். வடமகத நாட்டு மன்னன் தலை வணங்கித் தன்னகரத்திலே அரும்பணியியற்ற வல்ல தொழிலாளர்களாற் பொன்னும் மணியும் கொண்டு செய்வித்திருந்த பட்டிமண்டபம் ஒன்றையும் பிற அரும்பொருள்களையும் கொடுத்தான். சோழன் அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, அவந்தி நாடு அடைந்தான். அம்மன்னன் வட நாட்டவர் பட்ட பாட்டையெல்லாம் நன்கு கேட்டிருந்ததால், விரைந்து வந்து எதிர் கொண்டு, படைஞர்க்கும் பிறர்க்கும் வேண்டிய உபசாரம் எல்லாம் செய்து, அரசர் பிரானாகிய கரிகாற் பெருவளத்தானை வணங்கி, முன்னின்று, தன் முன்னோர் கால முதல் தன்னாட்டுக்கு அழகு தந்து அமைந்திருந்ததும் பொன்னும் மணியும் பொருந்த அமைத்ததும் ஆகிய தோரண வாயில்

ஒன்றையும் பெரும்பொருள் பிறவற்றையும் கொடுத்துப் பதின் காதம் பின் வந்து வழி விட்டனுப்பினன்.

தமிழ் மறவர் தமிழ் நாடு நோக்கி வந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புலவர் பற்பலர் வந்து, கரிகால் வளவனைப் புகழ்ந்து, பரிசில் பெற்றுச் சென்றனர். அரசர் பலரும் அரசர்க்கரசனென அவனைப் பணிந்தனர். பாரத பூமியில் உள்ள நாடுகள் அனைத்தும் அரசு ஒன்றின்கீழ் வந்ததால், அவ்வரசுக்குரிய அருந்தமிழ் மொழி எங்கும் தனியரசு செலுத்துவதாயிற்று. சோழனும் அவன் பின் வந்த படைஞரும் தம் நாட்டினின்றகன்று சென்ற மூன்றாண்டுகளின் பிறகு திரும்பித் தம் நாட்டுள் வந்தனர்.

நாட்டவர் அனைவரும் பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் பாவை விளக்கும் அலங்காரமாக வீதிகளெங்கும் பரப்பி மாவிலைத் தோரணங்கள் கட்டி, வாழை கமுகு மரங்கள் நாட்டித் தம்மரசனை அன்போடு எதிர்கொண்டனர். அங்கு வந்தாருள் ஒரு புலவர்,

" உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
தமதெனக் கொண்ட தமிழ்ப்பழங் குடியில்
முன்னையோர் புகழெலாந் தன்னையே யடையப்
பிறந்தனை போரிற் சிறந்தனை யரசியல்
நெறியினி லுயர்ந்தனை நினைத்தன முற்றுமாஉம்
ஆற்றலு மமைந்தனை யரசெலாம் பணிய
வடநாட் டமரினில் வாகை சூடிய
களிமால் களிற்றிற் கரிகால் வளவ!
மரபிசை வளர்க்குறூஉம் மைந்தரை யடைந்தனை



கோடையும் படையும் நடையும் மலிய
அறந்தலை சிறப்ப வமைந்தபன் னலமுறீஇ
வேள்விகள் பலவும் விருப்புட னியற்றுபு
வாழ்வினிற் பெருகி வாழிய வாண்டுகள்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே."

என்று பாடி வாழ்த்தினர். அது கேட்ட புரவலன் முக மலர்ந்து, அவர்க்குரிய சிறப்புச் செய்து, நகருட் புகுந்தான்; அரசப் பொறுப்பினரிடம் அரசுரிமையை யேற்றுக்கொண்டு முன் போல அரசாண்டான்.

## IX

நாடு நகரங்கள் அவற்றை ஆளும் அரசனது ஆற்றலுக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருக்கும். அரசு வல்லரசாய் இருக்குமாயின், நாடு நகரங்கள் செல்வங் கொழிக்கும். நாடு உருவத்தாற் பெரியதாயினும், அறிவறை போகிய அமைச்சரைத் துணைக்கொண்ட மெல்லியனாகிய கிழவனால் ஆளப்படுமாயின், உயிரற்ற அழகிய உடம்புபோல இருக்கும். இவற்றை உணர்ந்த கரிகாலன் தன் நாடு பண்டைச் சோழநாட்டெல்லையினுள் அடங்காது பாரத பூமி முழுவதும் ஆகியதால், தன் ஆட்சியின் சிறப்புக்குத் தக்கவாறு, நகரம் ஒன்று அமைக்க வேண்டும் என விரும்பினன்; ஒரு நாள் அரண்மனையில் அறிஞர் பலருடன் அமர்ந்து, அம்முயற்சிக்குத் தக்க ஆராய்ச்சி செய்யலாயினன். அமைச்சர் ஓரைவரும் புலவர் சிலரும் நாட்டு மக்களுள் முதியார் சிலரும் அங்கடைந்தனர். அவரவர் கொள்கைகளையும் வெளிப்படையாக அறிய விரும்பிய வளவர் பிரான், அவர்களோடு அளவளாவலாயினன்.

**கரிகாலன்:**—ஐயன்மீர், யாம் இந்த நாட்டோடு அமையாமல், இறைவனருளால் இமய வரையளவுஞ் சென்று புலி பொறித்துப் பாரத நாடு முழுவதையும் ஆளப் பெற்றுக்கொண்டது நீவிர் அனைவரும் அறிந்ததே. இனி இந்நாட்டின் நலத்தின் பொருட்டு என்னென்ன செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்யவே இவ்வவைக் களத்திலே கூடியுள்ளோம். நாட்டின் நலங் கருதி உங்களால் தெரிவிக்கப்படுவது எதுவாயினும், முற்றுவிக்கச் சித்தமாயிருக்கிறோம்.



**இரும்பிடர்த் தலையார்:**—அரசர் பெருந்தகையே,

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

எனப் பெரியார் அருளிச் செய்தது பொய்யா மொழியன்றோ? அரச பதவி பெற்றவன் தன் ஆட்சிக்குக் கீழடங்கிய குடி மக்கள் தன்னை எளிதில் அடைந்து தமக்கு வேண்டுவனவற்றைத் தெரிவித்துக்கொள்ள இடந் தர வேண்டுவது அமைவே. அரசன் நாட்டின் பொருட்டு என்ன செய்யக் கருதினும், அறிஞராகிய பெரியாரது ஆதரவைப் பெற வேண்டுவது அவசியமாம். அம்முறை கருதி இங்குள்ள பெரியாரெல்லாம், இன்று அழைக்கப் பெற்றது நலமே. இவருள் கவுணியனார், கவுதமனார், கீரனார், கண்ணனார், கௌசிகனார், சேந்தனார், நாகனார், பூதனார், புலியூர் கிழார் முதலிய பெரியோர் பலர் இங்கு வந்திருத்தல் இவ்வவைக் களத்துக்குச் சிறப்பளிக்கின்றது. இந்நல்லோர் உற்றார் அயலார், இன்னார் இனியார், உயர்ந்தார் தாழ்ந்தார் என்ற வேறுபாடுகள் கருதாது, உற்றதையே யுரைக்கும் உயர் குணம் படைத்தோராவர். இவரெல்லாம் கூற விரும்புவது எதுவாயினும் அரசர் பெருமான் செவிசாய்த்து ஏற்றுக்கொண்டு ஆவன செய்தல் முறையென்றே கூறுவேன். பெரியீர்காள், இனி நும் முள்ளத்தில் உள்ளதை வெளியிட்டு உரைக்க வேண்டுகிறேன்.

**கவுணியனார்:**—அரசரேறே, படைத்தலைப் பெரியீர், அன்பர்காள், யான் இப்பேரவைக்கண் தெரிவிக்க விரும்புவது ஒன்றுளது. அஃது அரசர் பிரான் விரைவிலே மேற்கொள்ளற்குரிய வினையாகும். நம்மரசர் வடநாடு சென்று, பல மன்னரையும் வென்று, இமயத்திற் புலி பொறித்த செய்தி நமக்கு மகிழ்ச்சி விளைப்பது மெய்யே. ஆனால், அதன் பயனாய் நம் நாட்டவர்க்கு விளைந்திருக்கும் பெரும்பொறுப்பையும் நாம் மறக்கக் கூடாது என்று கூற விரும்புகிறேன். வென்ற பல நாடுகட்கும் உரிய அரசுகளையும் நம்மிற் சில அதிகாரிகளையும் அமர்த்தல் வேண்டும். வென்ற நாடுகள் அரசும் முறையும் இழந்திருத்தல் நமக்கே இழிவு பயக்கும். இந்நாட்டிலிருந்து அந்நாடுகட்கு அடிக்கடி போய் வரும் பல பொறுப்பாளர்களும் ஏற்படல் வேண்டும். அங்கு அரசு பூண்பார் குடி மக்களுக்கு உரிய நலம் புரியும் முயற்சிகளில் அற நெறிக்கு மாறாக நடப்பாராயின், அவர் செயலால் விளையும் பழி நம் அரசைச் சாரும். ஆகையால், வடநாட்டுப் போரால் நாம் அடைந்த புகழ் குறைபடாதிருக்க வேண்டுமாயின், . அந்நாடுகளை நன்கு ஆட்சி செய்ய வேண்டிய முயற்சிகளை நாமே செய்ய வேண்டும். நாம் அதிக தூரத்திலிருந்து எங்ஙனம் இப்பொறுப்பைத் தாங்குவது என்று இவர் எண்ணலாம். இமய முதற் குமரி வரை நம் அரசின் கீழ் அடங்குவதால், இந்நாட்டினுள் எவரும் எளிதிலே விரைவிலே போய் வரத் தக்கவாறு சாலைகளும் இடையிடையே சோலைகளும் அறச்சாலைகளும் அமைத்தல் வேண்டும். அரசரேனும், அரசரது ஆணை பெற்றவரேனும், இரண்டாண்டு



கட் கொருமுறை அந்நாடுகளைப் பார்வையிட்டு வர வேண்டும். நம் நாட்டுப் படைஞரிற் சிறுசிறு தொகுதியார் அந்நாடுகளில் நம் கொடிக்கு உரிய பெருமை ஓங்கி வளருமாறு காவலாயிருக்கவும் வேண்டும். இவையனைத்தும் செய்தாலன்றி, நாம் இந்நாடுகளை வென்றதால் ஆகும் பயனை அடைய இயலாது போம். இங்குள்ளார் அனைவரும் நான் கூறுவது பொருத்தம் எனவே அறிவர். அரசர் பிரான் வேண்டுவன செய்கவென்று வேண்டுகிறேன்.

**வளவன்:**—ஐய, நீவிர் கூறியவண்ணம் வேண்டுவன செய்ய முதற்கண் பல நெடுஞ்சாலைகள் அமைத்தல் வேண்டியிருத்தலாலும், நம் படைஞரிற் பலர் இப்பொழுதே ஆங்காங்கு நிறுத்தப்பெற்றிருத்தலாலும், இயன்றவளவு விரைவிலேயே தொடங்கி முடிப்போம். நம் நாட்டின் பெருமையைக் காப்பாற்ற இது மிகவும் அவசியம் என நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

**பதுமனார்:**—அரசர் பெருமானே, அறிஞர்களே, யான் நம் சோழ நாட்டகத்தே ஆகவேண்டிய சில செயல்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன். அமர முனிவன் அகத்தியன்றனது கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய கோடாச் செங்கோற் சோழர் தங் குலக்கொடி யாகையாற் புலவர் நாவிற் பொருந்திய அப்பூங்கொடியைப் பிறரெவரும் பொதுமை கொண்டாடா வண்ணம், நம் நாட்டுக்கும் பெரும்பயன் விளைக்குமாறு பெருங்கரைகளுக்குள் அடங்கி ஒழுகச் செயல் வேண்டும். வெள்ளம் பெருகி வருங் காலங்களிலே காவிரியாறு மிகவும் வலியதாய், எவர்க்கும் அடங்காது,

பலவூர்களிலும் புகுந்து, வயல் வளங்களை அழித்துவிடுகிறது. அவ்வாறு விளையும் நஷ்டம் குறைதல் வேண்டும் என்பது குடி மக்கள் கருத்தாகையால், அதற்கிணங்கவும் நாட்டின் நில வளம் நீர் வளம் பெருகவும், காவிரிக்குப் பேரணை யொன்று அமைக்கவும் வேண்டும். கரைகளுக்குள் அடங்கி ஓடும்படி வேண்டும் முயற்சிகள் செய்யவும் வேண்டும். இவை இந்நாட்டுக்கே பெரும்பயன் விளைக்கும் முயற்சிகளாகுமாயினும், பாரத தேய முழுமையும் ஆளும் அரசர் பிரானுக்கு உரிமையான நாடு செல்வஞ் செழித்து விளங்க ஏதுவாமாகையால், இப்பொழுதே தொடங்கி விரைவிலே முற்றுவித்தற் குரியதாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளவன்:—நாம் அங்ஙனமே விரைவிற் செய்வோம். காவிரிக்குக் கரை யமைத்தல் வேண்டு மென்பது எமக்கும் நெடுநாளைய எண்ணமாம். கரையோரமுள்ள ஊரவர் எல்லாம் தத்தம்மால் இயன்றவளவு அரசினர் பொருட்டு மெய்ப்பாடு பட வருவர் என்று எதிர் பார்க்கிறோம். பலரும் ஒன்று திரண்டாலன்றி, இவ்வினை முற்றுமாறில்லை. அக நாட்டவரும் தம்மால் இயன்ற முயற்சியும் உதவியும் செய்தல் நலமேயென்று கூறுவோம். அணை யமைத்தல் விரைவிலே தொடங்கப் பெறும். காவிரித் தாய்க்குச் சிறு சிறு மக்கள் போல அமைந்த பல வாய்க்கால்களும் உள. அவையும் நன்கமைக்கப் பெறும். இம் முயற்சிக்கெல்லாம் நும் உதவி எதிர் பார்க்கப்படும். குடிமக்கள் உழவு ஒழிந்த காலங்களில் இங்குப் பணி பூண விரைந்து வருவாராயின், அரசினர் ஆதரவு பெற்று விரைவிலே முடிக்கலாம். இனி இவ்வாறே பிறர் கருத்தையும் அறிய விரும்புகிறோம்.



கவுதமனார்:—சேர சோழ பாண்டிய மண்டலங்களை யன்றிப் பெரும்புகழ் படைத்த பேரரசுகள் பிறவற்றையும் அடக்கியாளும் அரசர் பெருமானே, நெடுநாளாகப் பாண்டிய நாட்டிலே நடை பெற்று வரும் தமிழ்ச் சங்கம் போன்று, இந்நாட்டிலும் நம் முன்னோர் பெயர் விளங்கச் 'சோழர் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரோடு ஒரு புலவ ரவைக்களம் நிறுவ வேண்டுகிறேன். புலவர் எண்ணிறந்தார் உள்ள இந்நாட்டிலே தமிழ்ச் சங்கம் இல்லாதிருப்பது, பெருங்குறையன்றோ? அக்குறையை நிவர்த்திக்க ஆற்றலுள்ள அரசர் பிரான் நீரே யென்பதை யான் கூறவும் வேண்டுமோ?

வளவன்:—எமக்கும் அது விருப்பமே. அங்ஙனமே செய்கின்றோம். புலவரை ஆதரியாத நாடு நாடெனப்படுமா? நம் நாட்டகத்தே உள்ள புலவர் பலரும் நம்மை அடிக்கடி காண வுதவுமாறு தமிழ்ச் சங்கம் நிறுவுவது எமது முதற் கடமையாம்.

கீரனார்:—மன்னர் மன்னரே, நமது அரசின் எல்லை அதிகமாயதற் கேற்ப, அரசிருக்கை நகரமும் பெரிதாயமைதல் வேண்டும். உறையூர் பெரிய நகரமே யாயினும், இன்னும் வளர்வதற்கு இடமில்லை. வேறு ஏதேனும் பழமையான நகரம் ஒன்றைப் பு[illegible] யமைத்து, அரசிருக்கை யாக்கிக்கொள்ள [illegible] வேண்டுகிறேன்.

கௌசிகனார்:—அரசரே[illegible] உழவும் வாணிகமும் நாட்டு மக்களுக்கு இரு விழி[illegible]ம். உழவினை வளர்க்கக் காவிரிக்குக் கரையும் அணையு[illegible]மைக்க ஏற்றுக்கொண்டீர். வாணிகம், உள் நாட்டு [illegible]மும் கடற்றுறை

வாணிகமும் என இருவகையாம். உள்நாட்டு வாணிகம் நன்கு நடைபெற வேண்டின், நம் நாட்டு நகரங்கள் பலவற்றுக்கும் போக்கு வரவு சௌகரியங்கள் ஏற்பட வேண்டும். சாலைகளிலே தீயார் மறைந்திருந்து வணிகரைத் துன்புறுத்தா வகை காவற்படை நாடெங்கும் அமைதல் வேண்டும். கடற்றுறை வாணிகத்துக்கு உதவுமாறு துறைமுகப் பட்டினங்கள் சில அமைத்தல் வேண்டும். மரக்கலங்கள் பல அமைத்தலும் வேண்டும். இடையிடையே கலங்கரை விளக்கங்கள் சில அமைக்க வேண்டும். இவை யெல்லாம் அமைத்த பிறகு கடற்றுறையில் உள்ள பெரிய பட்டினம் ஒன்றை அரசர் பிரான் உறையுளாகவும் செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்யின், அயல் நாட்டவர் பலர் வரப்போகவும், வியாபாரம் பெருகவும், நம் நாட்டுச் செல்வம் வளரவும் இடம் உண்டாகும்.

**சேந்தனார்:**—அரசர் பெருமானே, இவ்விருவரும் கூறிய யோசனைக்கு உதவியாக யான் ஒன்று கூற விரும்புகிறேன்: முன்னை நாளிலே சம்பாபதி யென்ற பெயர் பூண்டிருந்ததும் காவிரி யாறு கடலொடு கலக்கும் சங்கமுகத் துறையில் உள்ளதுமாகிய புகார் என்னும் காவிரிப் பூம்பட்டினம் மிகவும் அகன்ற இடத்தை யுடையது; சோழர் குலத்தோடு தோன்றி வளர்ந்த தொன்மைப் புகழ் பூண்டது. அந்நகரை அரசிருக்கை யாக்கிக்கொள்ளின், எல்லா வகை நலமும் அங்குப் பொருந்தமுற அமையும். நம் நாட்டின் தற்கால நிலைக்கேற்ற பெருமை வாய்ந்த நகரம் அமைக்க அதுவே அமைவுடையதாம்.

**வளவன்:**-எம் எண்ணத்தில் இருப்பதும் அதுவேயாகும்.



**நாகனார்:**—அரசர்க் கரசரே, அந்நகரம் புதிதாய் அமைக்கப்படும்பொழுது தற்கால நிலைக்கு வேண்டிய பல வகையான சௌகரியங்களும் அதன்கண் அமைக்கப்படல் வேண்டும். அன்றியும், வட நாட்டிலிருந்து நாம் பெற்று வந்துள்ள தோரணவாயிலும், பட்டி மண்டபமும், முத்துப் பந்தரும், பிற அரும்பொருள்களும் அதன்கண் உரிய இடங்களில் அமைக்கப் பெறல் வேண்டும்.

**வளவன்:**—அங்ஙனமே செய்வோம்.

**கண்ணனார்:**—அரசர் பெருந்தகையே, அவ்வாறு அமைக்கப் பெறும் புது நகரத்திலே வான சாஸ்திர ஆராய்ச்சிச்சாலை யொன்று தமிழ்ச் சங்கத்துக்கு அடுத்து அமைக்க வேண்டுகிறேன். நம் நாட்டவர் வான நூலும் கணித நூலும் நன்கு பயில அது பேருதவியாய் இருக்கும்.

**பூதனார்:**—புண்ணியர் குடியிற் பிறந்த புரவலரே, பல நாடுகளையும் நாம் வென்று அடக்கியிருக்கின்றோமாதலால், அவ்வந்நாட்டு மக்களும் நம் நாட்டை நாடுவார்கள். அவர்கள், தொழிற்றிறம் அனைத்தும் அந்நகரத்தே அமைதல் வேண்டும்.

**புலியூர் கிழான்:**—தமிழக மன்னரே, பூம்புகார் எனும் நகரத்தே புது நகரம் அமைக்கும் முயற்சி விரைவிலே தொடங்கப்படும் என்பது கேட்டு மிக்க மகிழ்வெய்துகிறேன். அதுபற்றி யான் கூற விரும்புவன சிலவுள: இப்பொழுது அம்மூதூர் இருக்கும் நிலையை யான் அறிவேன்; இனி அதன்கண் இன்ன அமைவுகள் வேண்டும் எனக் கூற விழைகின்றேன். அந்நகரம் இப்பொழுது

பட்டினப் பாக்கம், மருவூர்ப் பாக்கம் என்ற இரு பகுதிகளை யுடையதாய் இருக்கிறது. பட்டினப் பாக்கத்திலே பழமையான பல மாளிகைகளும், யவனர் வாழிடங்களும், வியாபாரத்தின் பொருட்டுக் கடல் வழியே அயல் நாடுகளிலிருந்து வந்த பிறர் வாழும் இடங்களும், வண்ணமும் சுண்ணமும் கலவையும் பூவும் புகையும் விரைப் பொருள்களும் விற்போர் வாழும் வீதிகளும், பட்டிலும் எலி மயிரிலும் பருத்தி நூலிலும் நுண்ணிழைகளால் ஆடை நெய்வோர் வாழும் இடங்களும், அகிலும் பவளமும் முத்தும் மணியும் பொன்னும் பிற பொருள்களும் அளவின்றி விற்கப்படும் கடைத் தெருக்களும், கடல் வீதியும், பிட்டும் அப்பமும் கள்ளும் மீனும் உப்பும் வெற்றிலையும் விற்பார் வாழும் தெருக்களும், வெண்கலக்காரரும் செம்பு கொட்டிகளும் மரத் தச்சரும் இரும்புக் கொல்லரும் சித்திரக்காரரும் சிற்பிகளும் பொற்கொல்லரும் இரத்தினப் பணிகாரரும் தையற்காரரும் பிறரும் வாழும் இடங்களும், நெட்டியினும் துணியினும் பூவேலை செய்து தொழிற்றிறங் காட்டுவோரும் பிறரும் வாழும் இடங்களும், குழலினும் யாழினும் இசை பயின்ற பாணர் வாழிடங்களும், ஏவலர் வாழும் இடங்களும், பிறவும் சிறுகச் சிறுகக் கலப்புற்று அமைந்துள்ளன. இவற்றை அளவாலும் உருவத்தாலும் பெருக்கி, இன்னின்ன தொழிலாளர் இன்னின்ன இடங்களிலேதான் வாழ்தல் வேண்டும் என்று நியதியமைத்து, நகரின் அழகை வளர்க்க வேண்டும். அயல் நாட்டுப் பொருள்களை வியாபாரம் செய்யும் கடைத் தெருக்கள் தனித்து ஓரிடத்திலும், உள் நாட்டுப்



பொருள்களை விற்கும் பெருங்கடைத் தெரு வேறோரிடத்திலும் ஒன்றோடொன்று கலவாமல் அமைய வேண்டும். பட்டினப் பாக்கத்திலே இராச வீதியும், தேரோடும் வீதியும், கடைத் தெருவும், வணிகர் வாழ் வீதியும், வேதியர் வீதியும், உழவரும் ஆயுள் வேதியரும் காலக்கணக்கரும் வாழும் வீதியும், முத்துக் கோப்போரும் சங்கறுப்போரும் சூதரும் மாகதரும் வேதாளிகரும் நாழிகை யளப்போரும் கூத்தரும் கூத்தியரும் பிறரும் வாழும் உறைவிடங்களும் உள்ள வீதியும், யானைப்பாகரும் தேர்ப்பாகரும் வாழும் தெருக்களும், பிற அமைப்புக்களும் முன்பிருந்தவற்றைக்காட்டிலும் அகலமும் அழகும் அமைய அமைக்கப்பெற வேண்டும். அந்நகரத்திலே பழமையான பல வனங்கள் உள. அவற்றை நன்கு திருத்தி அமைத்தல் வேண்டும். தெய்வ நிலைகள் பல உள. அவையும் இருக்குமிடங்களில் அழகு மிகப் பெற வேண்டுவன செய்தல் வேண்டும். புதுமையான உவவனங்களும் சிங்கார வனங்களும் அமைத்தல் நலமாம் என்றும் கூறுவேன். நகரமைத்தற்குரிய நூலாராய்ச்சி மிக்க அறிஞர் பலர் உதவி இம்முயற்சிக்கு வேண்டும் என்பது நான் கூறாமலே விளங்கும்.

**வளவன் :**—அங்ஙனமே செய்கின்றோம். அன்றியும், மருவூர்ப் பாக்கத்துக்கும் பட்டினப் பாக்கத்துக்கும் இடையே பழமையாக அமைந்த நாளங்காடியைப் பெரிதாக்கி அமைத்து, நகரத்தினர்க்குப் பயன்படுத்தவும் கருதியுளோம்.

**சேந்தனார்:**—முன்னே பல வித அழகுகள் அமைந்திருந்த அந்நகரத்தைப் புதுப்பிக்கும் முயற்சி சாலச்

சிறந்ததே. ஆயினும், பண்டைப் பெருமையை விளக்கத்
தக்க அறிகுறிகள் எவையேனும் இருப்பின், அவற்றை
நிலை மாற்றி அழகழிக்காதிருக்க வேண்டுகின்றேன்.
அவற்றுள் யானறிந்த ஒன்றிரண்டை இங்கே கூறு
கிறேன்: பண்டு தொட்டே பெருமை வாய்ந்த ஐவகை
மன்றங்கள் அந்நகரில் உள. பட்டினத்திலே பிறர்
பொருளைக் கவர்வோர் உளராயின், அவர் வழியறியாது
மயங்க வைக்கும் வெள்ளிடை மன்றம் ஒன்று உண்டு.
கூனரும் குருடரும் ஊமரும் செவிடரும் அழுகு மெய்
கொண்ட பெரும்பிணியாளரும் மூழ்கி நல்லுடம்பு
பெற்றுச் செல்லும் பெருங்குளம் ஒன்றையுடைய
இலஞ்சி மன்றம் என்பது ஒன்று உண்டு. பிறரால்
மருந்தூட்டப் பெற்றுப் பித்தேறினோரும், நஞ்சுண்டு
நடுங்கு துயர் உற்றோரும் நாகங் கடிக்கப்பட்டோரும்
பேய் கோட்பட்டோரும் வந்து வலஞ் செய்து தத்தம்
துயர் நீங்கி மகிழ்ச்சி பெற்றுச் செல்லும் நெடுங்கல்
நின்ற மன்றம் ஒன்று உண்டு. தவ வேடம் பூண்டு தவ
நெறிக்குப் பொருந்தா வொழுக்க முடையோர், ஒழுக்
கங் கெட்ட பெண்டிர், முறை மறந்த அமைச்சர், பிறர்
மனை நயப்போர், பொய்க்கரி கூறுவோர், புறங்கூறும்
புல்லியோர் என்ற இன்னவரை அறைந்துண்ணும் பூதம்
நிற்கும் சதுக்கம் ஒன்று உளது. அரசனது செங்
கோன்மை சிறிது தவறுமாயினும், அறங் கூறும் அவை
யத்திலே ஓரம் பேசும் கருத்தோடு தருமாசனத்தார்
தீர்ப்புக் கூறினும் இக்குற்றங்களைக் கண்டு பொறாது
கண்ணீர் உகுத்து அழும் இயல்புடைய ஒரு தெய்விகப்
பாவை நின்ற மன்றமும் உளது. இவற்றைப் பற்றிப்



புலவர் பலவாறு புகழ்ந்திருக்கின்றனர். இம்மன்றங்க
ளெல்லாம் சிறுமை பெறாது சிறப்புப் பெறுமாறு
வேண்டுவன செய்தல் அரசர் கடமையாம் என்பதை
யான் எடுத்துரைக்க வேண்டுமோ?

வளவன்:—அறிஞர்காள், நீவிர் கூறிய எல்லாம்
மந்திராலோசனை சபையில் நன்கு ஆராய்ந்து, அற
நெறிக்கு மாறு படாத வகையில் உரிய தீர்மானம் செய்
யப் பெற்று, விரைவிலேயே முயன்று முடிக்கப்படும்
என்று கூறுகிறோம்.

அனைவரும்:—அதுவே எம் விருப்பமும் ஆகும்.

வளவன்:—அறிஞர்காள், முன்பு நாம் சோழ நாட்
டளவில் அடங்கிய நாட்டைப்பற்றிய பொறுப்பையே
பெற்றிருந்தோம். இப்பொழுதோ, பாரத பூமி முழு
வதையும் ஆளும் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறோம்.
ஆகையால், நீவிர் கூறிய எல்லாம் நிறைவேற்ற வேண்டும்
என்பது எமது எண்ணமேயாமாயினும், அரச பொறுப்
பின் சிரமத்தால் ஒன்றிரண்டு மறக்க நேரிடுமாயினும்,
யாம் உள் நாட்டகத்தே பல் நாள் இருக்க வியலாமல்
அயல் நாடுகளைப் போய்ப் பார்த்து வர நேருங் காலங்
களில் இம்முயற்சிகள் நிகழ்வதில் எவையேனும் குறை
கள் விளையினும், அவற்றை நீவிர் அனைவரும் அவ்வப்
பொழுது எம்மிடமேனும் அமைச்சரிடமேனும் தெரி
வித்து வேண்டிய சீர்திருத்தங்கள் செய்ய உதவி புரிவீர்
கள், என்று எதிர் பார்க்கிறோம். நம் அம்மானாகிய
இரும்பிடர்த்தலையார் முதுமைப்பருவம் அடைந்திருத்த
லால், அவருக்கு அதிக சிரமம் கொடுக்க யாம் விரும்ப
வில்லை. புது நலம் அமைப்பதற்கும் காவிரிக் கரை

யமைத்தற்கும் பிற முயற்சிகளுக்கும் குறைந்தது ஐந்து ஆண்டுகளேனும் வேண்டும். இத்தொழில்கள் நடைபெற்று வருகையில் மேற்பார்க்கும் பொறுப்பு முழுமையும் அரசினருக்கு என எண்ணி இருக்கமாட்டீர்கள் என நம்புகிறோம். ஆங்காங்கு நும் ஊருகில் நடக்கும் பணிகளை நீவிர் மேற் பார்க்கவும் வேண்டுகிறோம். இனி இறைவன் திருவருளால் நாம் எண்ணிய எண்ணமெல்லாம் நன்கு நிறைவேறுகவென்று வேண்டிக்கொள்வோம். நீவிர் விடை பெறலாம்.

# X

ஐந்தாண்டுகள் சென்றன. பாரத நாட்டிலுள்ள பல சிறு தேயத்தாரும் சோழ நாட்டுக்கு வந்து, ஏகாதிபதியாகிய கரிகாற் பெருவளத்தானுக்குத் திறை யளந்து சென்றனர். காவிரியாறு தன் வெள்ளப் பெருக்கால் நிலங்கட்குக் கேடு விளைக்கா வண்ணம், மலை நிகராக இரு புறமும் கரையமைக்கப் பெற்று, அவற்றுள் அடங்கி ஓடுவதாயிற்று. நதி பாயும் வழியில் உள்ள ஒவ்வொரு கிராமத்தாரும் காவிரிக் கரை யமைக்கும் முயற்சியில் தங்கள் தங்களால் இயன்ற உதவி புரிந்தனர். பணியாளர் தம் பணியை நிறைவேற்றி விடை பெறும் காலம் வரையிற் குடும்பத்தோடு அரசினரால் ஆதரிக்கப் பட்டனர்.

புகார் நகரமும் பெரியார்கள் வேண்டிக்கொண்டவாறு அமைக்கப் பெற்றது. அங்குப் பழமையும் புதுமையும் ஒன்றோடொன்றிணைந்து அழகொடு விளங்கின. தெய்வச் சிற்பிகளால் இயன்றவையோ என்று உலகத்தார் மதிக்கத் தக்க உன்னதமான கோபுரங்களையுடைய ஆலயங்கள் பல அமைந்தன. மருவூர்ப்பாக்கத்திலே நடுநாயகமாய் அரசர்பிரானுக்கென ஒரு பெரிய அரண்மனை அமைந்தது. அதனைச் சுற்றிச் சூரியனைச் சுற்றிய கிரகங்கள்போன்று பலநாட்டரசரும் தத்தமக்கெனச் சிறு சிறு மாளிகைகள் அமைத்துக்கொண்டனர். கடற்கரை

யோரத்திலே பண்டசாலையொன் றமைக்கப்பட்டது. மருவூர்ப்பாக்கத்திலே தமிழ்ச் சங்கத்தின் பொருட்டுப் பெரியதொரு கட்டடம் நிருமிக்கப்பெற்றது. அதற்கருகே ஆயுள்வேத வைத்திய வித்தியா சாலைக்கும் வான சாஸ்திர ஆராய்ச்சிச் சாலைக்கும் உதவுமாறு அகன்ற பெரிய கட்டடங்கள் அமைக்கப்பெற்றன. அந்தணர் பலரும் புலவர் பலரும் அரசர் தமக்கு அமைத்துக் கொடுத்த மனையகங்களிற் குடியேறினர். நில வளமும் நீர் வளமும் அமைந்த சோழநாட்டுக்கு வாணிகத்தால் வளம்பெருக்க வாய்ப்புடையதாய் அமைந்த அந்நகரிலே வணிகரும் உழவரும் அருந்தொழிலாளிகள் பலரும் தத்தமக்கென அமைந்த இடங்களில் மனைகள் அமைத்துக்கொண்டு குடியேறினர். தமிழக மக்களுட் சிறந்தார் பலரும் வடநாட்டு மன்னருட் பெரும்பாலோரும் புது நகரத்தே அரசர் பிரான் புகுதரும் வைபவத்தைக் காணும் அவாவோடு வந்து நிறைந்திருந்தனர்.

ஒளி நூலறிஞரால் எடுத்துரைக்கப்பட்ட நன்னாளிலே சோழ குலாதிபனாகிய கரிகாற் பெருவளத்தான் உறையூரை நீங்கிப் புறப்பட்டுப் பரிவாரங்கள் புடை சூழ, அமைச்சர் பலர் அருகிலே வர, அரசுவாவின் மீதமர்ந்து, வழியெல்லாம் குடி மக்கள் நன்கு உபசரித்து வாழ்த்துக் கூறப் பிரயாணம் செய்து, நல்லோர் குறித்த நன்னாளிலே புகார் நகர் வந்தடைந்தான். நகரத்தே குழுமியிருந்த அந்தணரும் அரசரும் வேளாளரும் வணிகரும் புலவரும் பாணரும் பிறரும் திரண்டு வந்து, அரசனை வரவேற்றனர். அவந்திவேந்தன் உவந்து கொடுத்த தோரண வாயில் வழியே அரசர்க்கரசனாகிய



கரிகாலன் மங்கள வாழ்த்துக்களினிடையே ஐவகை வாத்தியங்களும் முழங்க, நகர்க்குட் புகுந்தான். சோழர் தமிழ்ச் சங்கத்திலே புலத்துறை முற்றுதற்கு வந்திருந்த புலவர் பலரும் தத்தம் அன்பும் ஆதரமும் தோன்றப் பல வகைச் செய்யுட்களால் அரசனை வாழ்த்தினர். நகர்க்குட் புதுமையாக மனைகள் அமைத்துக் குடி புகுந்தார் பலர்க்கும் நல்வரவு கூறப்பட்டது. அரசர் பிரானும் மன மகிழ்ந்து, அங்கு நிறைந்திருந்தார் பலர்க்கும் உபசார மொழிகள் கூறினன். பின்னர் அரசுவாவின் மீது அமர்ந்த வண்ணமே நகர் வலஞ் செய்து, தேவாலயங்களிலே நைமித்திக பூஜைகள் நிறைவேற்றி, அந்தணராசி பெற்று, அரண்மனை புகுந்தான். இரும்பிடர்த் தலையார் அன்று அமைந்த ஆனந்தப் பெருக்கின் எல்லையற்ற தன்மையை இன்னதென அறிய எவரால் இயலும்?

பின்னர்ச் சில தினங்கள் மங்கள முழக்கத்திடையே கழிந்தன. அப்பால் ஒரு தினம் இரும்பிடர்த் தலையார் புலவர் பலர்க்கும் சிறப்புக்கள் அவரவர்க் கேற்றவாறு செய்வித்தனர். பின்பு அயல் நாட்டவர் அனைவரும் தத்தம் இடங்கட்கு விடைகொண்டேகினர். மக்கள் நால்வரும் கல்வி நிரம்பப் பெற்றவர்களாய்ச் சோழர் தமிழ்ச் சங்கப் புலவர்களோடு அளவளாவி இன்புற்றிருந்தனர். மூத்த குமாரியாகிய ஆதி மந்தியார் என்ற அருந்தமிழ்ப் புலமை நலம்படைத்த செல்வி சேர நாட்டரசகுலத்துப் பிறந்தானாகிய அத்தி யென்பானை மணம் புரிந்துகொண்டாள். அவ்விருவரும் சேரநாட்டிற் சில காலமும் சோழ நாட்டிற் சில காலமும் வாழ்வாராயினர். கரிகாலன் இவ்வாறு பல வகையினும் இன்புற்று வாழ்ந்திருக்கையிற்

புலவர் பலர் அவனைக் காண வரலாயினர். ஆண்டுகள் பல சென்றனவாயினும், குடிகளுக்கு அவன் அரசின் கீழ்க் காலப் போக்கே அறியப்படாமல் என்றும் இன்பமயமாய்க் கழிந்தது.

ஒரு நாள் **முடத்தாமக் கண்ணியார்** என்ற புலவர் பெருமான் கரிகால் வளவனைக் கண்டு, தம் புலமை நலத்தைக் காட்டிப் பரிசில் பெற விரும்பி வந்தார். அவர் பொருநராற்றுப்படை யென்றதொரு பெரிய பாட்டைப் பாடி வந்தார். அவர் வருகையை அறிந்த வளவன் அவரை அன்போடு வரவேற்று, அவர் பாடிய செய்யுள் முழுவதையும் நன்கு கேட்டு, மகிழ்ந்தான். பின்னர் அருகிலிருந்த புலவர் பலரோடு அப்பாட்டைக் குறித்து அளவளாவலாயினன்.

**வளவன்:**—ஐய, புலவரே, காவிரிச் சிறப்பை நும் பாட்டிற் கூறிய வண்ணம் அடுக்கிக் கூறி இவ்வவைக்களத்தோரை மகிழ்விக்க வேண்டுகிறோம்.

**முடத்தாமக் கண்ணியார்:**—ஐய, அரசர் கோவே, பாட்டு முழுதும் இன்புற்றுச் செவிக்கொண்டு மகிழ்ந்த நீவிர் விரும்பியவண்ணம் வேண்டுமிடங்களில் மறுமுறை கூறுகிறேன். காவிரியைப்பற்றி நான் கூறிய கருத்து அத்துணைச் சிறப்புடையதாகாது. அதனினும் அழகுபெறக் கூற வல்ல புலவரும் உளர். காவிரியும் இன்னும் எவ்வளவு புகழினும் தாங்கவல்லதே. ஆயினும், என் கருத்தைக் கேட்டலாற் கூறுகின்றேன். மற்ற நாடுகளெல்லாம் கதிரோன் கடுமையால் வெதும்பிப் பஞ்சுச்செடிகள் கரிய, பெருமரங்கள் தீப்பற்ற மக்கள் வருந்தத் தக்க வறட்காலத்திலுங்கூடப் பல்வகைப் பசுமரங்களும் துறைகள்



தோறும் ஓங்கி வளரப்பெற்று நுரையோடு புனல்பெருகி ஒன்றுக்கு ஆயிரமாக நெல்லை வளர்த்துக் கொடுக்கும் பெருமை படைத்தது காவிரியாறு எனவும், அவ்வாற்றின் வளத்தாற் காக்கப்பெறும் நாட்டின் மன்னராகையால் வருவார்க்கு வரையாது வழங்குதல் நுமக்கு எளிதேயாம் எனவும் கூறினேன்.

**அவைக்களப் புலவர் ஒருவர்:**—ஐய, புலவர் பெருமானே, பொருநர் இருந்த நிலையும் பரிசில் பெற்ற பின் ஆகிய அமைவும் கூற வேண்டுகிறேன்.

**முடத்தாமக் கண்ணியார்:**—அவர் வரும்போது அணிந்திருந்த வுடை, வேர்வையில் நனைந்து அழுக்கும் பாசியும் பிடித்திருந்தது; பல இடங்களில் தையல் அமைந்ததாய் இருந்தது. அரசர் பெருமான் அவர் வறுமை யகற்றப் பரிசில் தரா முன்னரே அவரது ஆடைக்கு வேற்றுடை கொடுத்தான். அது தூய வெள்ளிய பட்டுடையெனவும் அழகிய கரையை உடையதெனவும் ஓரங்களில் முடிச்சுக்களை யுடையதெனவும் கூறினேன். 'அரசர் கொடுக்கும் கொடைச் சிறப்பை யானையும் கன்றும் விரும்பியவாறு கொள்கவென்று கூறித் தன்னறியளவையிற்றரத்தர, யானும் என்னறியளவையின் வேண்டுவ கொண்டு, இன்மை தீர வந்தனென்,' என்று கூறினேன்.

**வளவன்:**—ஐய, புலவர் பெருமானே, நுமது பாட்டில் எம் நாட்டகத்தே ஐவகை நிலங்களும் அவற்றின் பொருள்களும் ஒன்றோடொன்று கலந்திருக்கும் அழகை நீவிர் இயற்கைநலந் தோன்றக் கூறியிருக்கும் பகுதி நன்றாய் இருக்கிறது. முழுவதும் மதுரமயமான ஒரு பதார்த்தத்திலே இன்ன பகுதி நன்றாய் இருந்தது என்று எடுத்

துக் காட்ட இயலுமோ? நும் தகுதிக்கு இது போதிய தாகாதாயினும், யாம் தரும் இச்சிறு பொருளைப் பரிசிலாக ஏற்றுக்கொண்டு, இந்நாட்டிலேயே சிலகாலம் வாழ்ந்திருந்து பிறகு நும்மூர்க்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாம்போது வந்துகாண வேண்டுகிறோம். சோழர் தமிழ்ச் சங்கத்தே நும்மை அடிக்கடி காணலாம் என்று நம்புகிறோம்.

முடத்தாமக் கண்ணியார் அதன் பிறகு புலவரிடமும் புலவர் தலைவனாகிய கரிகாலனிடமும் விடை பெற்றுச் சென்றார். அவர் சோழ நாட்டின் இயற்கைச் செல்வத்தைப் புகார் நகரத்தே பலவகையான செயற்கை வளங்களோடு கண்டு மகிழ்ந்து, இன்புற்றுக் காலங் கழித்து வந்தார்.

இவ்வாறு இன்ப முறக் காலங் கழிந்து வருகையில் ஒரு நாள் கரிகாலன் காவிரியிற் புதுப் புனலில் ஆடும் விழாக் கொண்டாட விரும்பினன். 'நகரவ ரனைவரும் தத்தமக்கு விருப்பமான இடங்கட்குச் சென்று காவிரிப் புதுப் புனல் ஆடி மகிழலாம்,' என்று முரசறைவித்தான். பிறகு தானும் தன் மக்களும் அத்தியுமாகப் புறப்பட்டுக் கழார் என்ற ஊர்க்கருகில் உள்ள காவிரிப் பெருந்துறை அடைந்தான். ஆதி மந்தியின் தலைவனாகிய அத்தி யென்பான் நீராட்டிலே மிக்க உற்சாக முடையான்; நீந்தி மூழ்கி ஆடி விளையாடும் பயிற்சியும் உடையான். அரசனுக்கு நெருங்கிய சுற்றத்தாரைத் தவிரப் பிறரெவரும் அத்துறைக்கு வரலாகாது என்று விளம்பரம் செய்யப் பெற்றிருந்ததால், ஞாயிறு எழு முன்னரே அரசனும் மக்களும் மருமகனும் நீராடப் புகுந்தனர்.



பிறரெல்லாம் தம் மனம் திருப்தியடையும் வரையில் நீராடிக் கரையேறிப் பட்டுடுத்துத் திருநீறணிந்து கடவுளைத் தொழுது நின்றனர். கரையகத்திருந்த சிறியதொரு மண்டபத்தே தனக்கென அமைத்த இருக்கையிற் கரிகாலன் அமர்ந்திருந்தான். மக்களெல்லாம் அவனைச் சூழ இருந்தனர். ஆதி மந்தியும் அருகிலே நின்றுகொண்டிருந்தனள். அவளது மனமும் கண்ணும் ஆற்றையே நாடி யிருந்தன.

ஆற்றில் அத்தி இன்னும் நீராடி யிருந்தனன். அவன் நீருள் மூழ்கியும் வெளியில் மிதந்தும் நீந்தியும் குதித்தும் குடம் வைத்து ஆடியும் பல வகையில் விளையாடினன். இப்புதுமையான ஆடல்களை யெல்லாம் கரிகாலன் கண்டு மகிழ்ந்தான். மக்களும் கண்டு ஆனந்த மெய்தினர். ஆதி மந்தியோ, தன் கொழுநன் ஆடும் ஆடலிலே ஆபத்துண்டாகுமோ என்ற கவலையுடையளாயிருந்தனள். இவ்வாறு இருக்கையில் அத்தி முன்னே பல முறை மூழ்கியதுபோல நீருள் மூழ்கினன்; ஒரு சுழியிற் சிக்கிக்கொண்டான்; தன் ஆற்றலை யெல்லாங் காட்டி வெளியேற முயன்றனன். அவன் முயற்சி பலிக்கவில்லை. அரசனும் மக்களும் இதுவும் ஒரு விளையாட்டோ என்று அதிசயத்தோடு பார்த்திருந்தனர். ஆதி மந்தியின் உள்ளம் கலங்கியது. சாதாரணமாக மனிதர் தண்ணீர்க்குள் அடங்கியிருக்கத் தக்க காலத்தைக்காட்டிலும் அதிகம் ஆகியதை அவள் கண்டாள்; உடனே ஆற்றை நெருங்கினாள். கரிகாலன் செய்வதறியாது திகைத்தான். மக்களும் மயங்கினர். ஆதி மந்தி காவிரியாற்றை நோக்கிப் புலம்பலாயினள்:

“அன்பு சிறந்தான் தமிழகத்தை
யடையப் பிறந்தான் அத்தியென்பான்
வன்பு சிறந்தான் வஞ்சிமன்னர்
மரபு விளக்க வரும்பெரியான்
இன்பு சிறந்தான் எழில்சிறந்தான்
எனக்கே யுரியான் யாங்கொளித்தான்
துன்பு சிறந்தேன் கலங்குகின்றேன்
சொல்லாய் கொல்லோ காவேரி!

கண்ணாய் அதன்கட் கருமணியாய்க்
கருத்தாய்க் கருத்தி லுறுபொருளாய்
விண்ணாய் உலகாய்க் கடவுளாய்
விளங்கி யிருந்த விழுமியோன்
பெண்ணாய் அவனுக் குரிமையாய்ப்
பிறந்தே னினைய யாங்கொளித்தான்
மண்ணாய் நீராய் வளர்தருவாய்
வழங்காய் கொல்லோ காவேரி!

மிடலாம் பெருமை மிகவுடையான்
வேந்தர் நடுங்கு படையுடையான்
மடலாம் பனையின் றாருடையான்
மனத்தை யெனக்கே வழங்குவள்ளல்
உடலாம் எனக்கிங் குயிராகி
யுலவி னானை விழுங்கினையே!
கடலாங் கொழுநன் றனைத்தழுவிக்
களிப்பாய் கொல்லோ காவேரி!”

அவள் இவ்வாறு புலம்பிக் கரைந்துருகிவிட்டுக் காவிரிக் கரை வழியே விரைந்தோடினள்.

கரிகாலனும் புனலாட்டுக்குப் புறப்பட்டபோது இருந்த மனமகிழ்ச்சியை இழந்து, புகார் நகரம் நோக்கித்



திரும்பினன். அத்தி, நீரின் வேகத்தால் அடித்துச் செல்லப்பட்டான். நீரிலும் நிலத்திலும் ஆட்டத்தில் வல்லவனாய் ஆட்டனத்தியென்று பெயர் பூண்டு நாடு புகழ வாழ்ந்த அவனது அழகினையும் ஆடும் திறலையுங் கண்டு காவிரியே அவனைக் கவர்ந்து கொண்டாள் என்று அருகி னின்றார் கூறலாயினர். நீந்துந் தொழிலில் மிக்க பயிற்சி யுடையனாகையாற் கரை சேருமாறு அவன் பல முறை முயன்று தலை தூக்கியும், அழுந்தியும், மேலே போய்க் கொண்டிருந்தான். அவன் முயற்சிகள் பலியாமல் காவிரியின் வேகத்தால் கடலினை யடைந்தான். அவன் போகும் வழியைத் தொடர்ந்து கரையில் ஓடி வந்த ஆதி மந்தியும் அங்கு வந்துற்றனள்; கடற்கரையில் நின்று அங்கு நின்றாரைப் பார்த்து, “காவிரியால் விழுங்கப் பெற்று இங்கு வந்த என் தலைவரை யாரேனும் கண்டீர்களோ?” என்று விசாரித்தனள். கரையிலே கடற் காட்சி காணும்பொருட்டு வந்து நின்றுகொண்டிருந்த பெண்டிருள் மருதியென்பாள் கடல் நீரிலே உற்று நோக்கி, “அதோ! நின் கணவன் நீந்தமாட்டாது கடல்நீரில் மூழ்குகின்றான்; பார்!” என்று காட்டி, அவள் கூறிய மொழிகள் ஆதி மந்தியின் செவியகம் புகா முன்னரே அவள் விரைந்து கடலிற் குதித்து நீந்திச் சென்று அலைகளால் அடிபட்டு மயங்கும் நிலையிலிருந்த ஆட்டனத்தியைப் பற்றி யிழுத்து வந்து கரையிற் சேர்த்தாள். அது கண்ட ஆதி மந்தி அங்கு விரைந்தோடிச் சென்று, இழந்த மாணிக்கத்தைத் திரும்பப் பெற்ற நாகம் போலவும் இழந்த பழம்பொருளைத் திரும்பப் பெற்ற மனிதர் போலவும் மகிழ்ச்சி மீதூரப் பெற்றுத் தன் தலைவனைத்

தழுவிக்கொண்டு, அவனுக்கு நேரிட்ட ஆபத்திலிருந்து மீட்டுக் கொடுத்துப் பேருதவி புரிந்த மாருதியை மனமார வாயார வாழ்த்தி, இறைவனைத் தொழுதனள். பிறகு அருகில் நின்ற ஏவலராற் புத்தாடைகள் கொணர்வித்து ஆட்டனத்தியை அணியச் செய்து தன்னுடன் தொடர்ந்து வந்த தேரிலே அவனை யேற்றித் தானும் அமர்ந்து, புகார் நகரத்துப் பெரிய அரண்மனையை யடைந்தாள். தெய்வச் செயலால் எல்லாம் நலமாய் முடிந்ததை யறிந்த கரிகாலன் மகளையும் மருமகனையும் மனமார வாழ்த்தி உபசரித்தான். பின்னர்ச் சில தினங்கள் வரையில் இவ்வற்புதச் செயலே நாடெங்கும் பேசப்படுவதாயிற்று.

புலவர் பலர் நூலாராய்ச்சி செய்யும் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்கும், வான நூலாராய்ச்சிச் சாலைக்கும், ஆயுள் வேத வைத்திய வித்தியா சாலைக்கும் கரிகாலன் அடிக்கடி போய் வரும் வழக்கமுடையவனாயிருந்தான். தமிழ்ச் சங்கத்திற்குப் போயிருந்த காலத்தில் ஒருநாள், கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற அந்தணப் புலவர் அவனைக் காணக் கருதி, அங்குற்றார். அவர் பட்டினப்பாலை என்னுமொரு பெரிய பாட்டுப் பாடி வந்திருந்தார். புலவர் பலர் சூழ்ந்திருக்கும் அவ்வமயத்தே அவ்விடத்திற்கு அவர் வந்ததுகண்டு மகிழ்ந்த வளவன், அவரை அவரது பாட்டை அரங்கேற்றக் கூறினான். அவர்க்குத் தக்க உயர்ந்த இருக்கை யொன்றில் அவரை இருக்கச் செய்து, தானும் தன் நாட்டுப் புலவரும் அவர்க்கு எதிர் முகமாக அமர்ந்திருந்து, அவர் பாட்டைக் கேட்கலாயினன். உருத்திரங் கண்ணனார் செய்



யுள் முழுவதையும் உரிய முறைப்படி படித்து முடித்தார். புலவர் அனைவோரும் கேட்டு மனமுருகி, மகிழ்ச்சி பூத்தனர். வளவனும் முகமலர்ந்தான். பின்னர் அங்கு அந்நூலைப் பற்றிப் பின் வருமாறு அங்கிருந்தார் அனைவரும் பேசிக்கொண்டனர்.

**வளவன்:**—ஐய, புலவர் பெருமானே, நுமது பாட்டு மிகவும் சுவையுடையதாய் அமைந்திருக்கிறது. அதன்கண் உள்ள ஒவ்வொரு பொருளும் அனுபவமிக்க ஓவியம் வல்லான் தீட்டிய ஓவியம் போல அமைந்துளது. அவற்றுட் சில கருத்துக்களை நுமது உரைநடையிற் கேட்க விரும்புகிறோம்.

**உருத்திரங் கண்ணனார்:**—அரசர்க்கரசரே, எதைக் கேட்பினும் எடுத்து உரைக்கவும் பொருள் விரிக்கவும் சித்தமாயிருக்கிறேன்.

**வளவன்:**—இந்நாட்டுப் புலவர் பலர் இங்கு இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிரியமாய் இருக்கும் பொருள்களை விசாரித்தறியலாம். எம் மனத்துக்கு இன்பம் ஊட்டும் பொருள்கள் பல உள. காவிரியைப்பற்றி நீவிர் கூறியுள்ள கருத்துக்கள் தன்மை நவிற்சியே. அவற்றை ஒரு முறை சுருக்கிக் கூறுமின்.

**உருத்திரங் கண்ணனார்:**—வானவுலகத்திலேயுள்ள வெள்ளி என்னும் மீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்றிசைக்குப் போயினும், மழைத்துளியை உண்டு வாழும் வானம்பாடி மனம் புலரும்படி மேகங்கள் வராது மறைந்த வற்கட காலமாயினும், தான் பொய்படாது குடகமலையிடத்தே பிறந்து காலந்தோறும் பெருகி வந்து கடலிலே கலக்கின்ற வசையற்ற புகழை

யுடைய காவிரியாறு என்று நும் நாட்டின் இயற்கையழகுகளில் மிகவும் சிறந்த வொன்றைக் கூறினேன்.

வளவன்:—குயில்களைப்பற்றி நீவிர் கூறுவதென்ன?

**உருத்திரங் கண்ணனார்:**—பரந்த சடையையுடைய முனிவர்கள் தீயிடையில் ஆவுதி செய்து யாகங்கள் இயற்றுமிடத்திருந்து எழுந்த நெய்ம்மணத்தோடு கலந்த புகையைக் கண்டு வெறுப்படைந்து இளமரக்காக்களிலே குயில்கள் ஒடுங்கும் எனப்பட்டது. மேகத்தைக் காணுங்கால் தன் நாவை அடக்கி ஒடுங்கும் இயல்புள்ள குயில், மேகம்போல எழுந்த புகையைக் கண்டு அடங்கி ஒடுங்கியது என்றும், நறுமணம் கலந்த புகையைக் கண்டு வெறுக்கும் இயல்பு அதற்கு உண்டென்றும் கூறியுளேன்.

**வளவன்:**—அது மிகவும் பொருத்தமே. காவிரி கடலொடு கலக்கும் இயல்பை நீவிர் நன்கு அமைத்துப் பாடியுளீர். அக்கருத்தை ஒருமுறை சுருக்கி யுரைக்க வேண்டுகிறேம்.

**உருத்திரங் கண்ணனார்:**—கரியதாகிய பெரிய மலையைச் சேர்ந்த மேகம் போலவும் தாயின் மார்பைத் தழுவிய குழந்தைபோலவும் தெளிந்த நீரையுடைய கடலிலே காவிரியாறு கலந்தது என்றேன்.

வளவன்:—இரண்டு உவமைகள் என்ன பயன் கருதி அமைந்தன?

**உருத்திரங் கண்ணனார்:**—அரசர் பெருமானே, ஓர் யாறு கடலொடு கலக்குமிடத்தே கடலலைகள் மலைபோல எழுந்து நிற்கும். ஆகையாலும், காவிரியாற்று நீர் கடல் நீரின் தன்மையடைந்து அதனோடு கலக்குமாகையாலும், மேகம் மலையிற் படிவது போன்றுளது என்று கூறப்பட்



டது. இங்கு மேகம் என்பதைச் செக்கர் மேகம் என்று கொண்டு செந்நிறமாய் இருக்கும் காவிரி நீரின் நிறத்துக்கு ஒப்பக் கூறுவது பொருத்தமாம். மற்றோர் உவமை, யாற்றுக்கும் கடலுக்குமுள்ள பழமையான தொடர்பை விளக்குவதாம். கடல் தாய் எனவும் யாறு குழவி யெனவும் கூறப்பட்டன. தாயைச் சிறிது பொழுது கூடப் பிரிந்திருக்கலாற்றாத குழவி, தாயின் மார்பகத்தே தழுவிக் கிடத்தற்கு நிகராகக் காவிரி கடலொடு கலக்கும் இயல்பு எடுத்துரைக்கப்பட்டது. இங்குக் காவிரி வேகமாய் வந்து பாய்தலும் கடல் அலைக் கைகளால் அதனைத் தழுவிக்கொள்ளலும் தாய்க்கும் குழவிக்கும் இடையில் உள்ள அன்பென்னும் தொடர்பை விளக்க வுதவும்.

**வளவன்:**—புலவரேறே, இவ்வுவமைகள் மிகவும் நயம்பட அமைந்துள. இங்குள்ள புலவர்கள் எவையேனும் கேட்டறிய விரும்பிற் கேட்கலாம்.

**உருத்திரங் கண்ணனார்:**—புலவர் கேட்டு அவர் மனமகிழும் வண்ணம் மறுமொழி கூறியமைத்தல் என் போன்றார்க்கு இன்பம் தருவதே. புலமைப் புரவலரும் அவரால் ஆதரிக்கப்படும் புலவரும் ஒருங்கிருக்கும் ஒரு பேரவையில் அரங்கேற்றம் செய்ய ஒரு பாட்டைக் கொணரப்பெற்ற என் பேறு பெரிதே.

**முடத்தாமக் கண்ணியார்:**—ஐய, புலவரேறே, நும் பாட்டு முழுவதையுங் கேட்டு உள்ள முருகினேன். எத்துணை முறை கூறினும் அமையப் பெறாத அருங்கருத்துக்கள் பல நும் பாட்டில் உள்ளன. அவற்றுள் ஒன்றிரண்டை இரண்டாமுறை கேட்க விரும்புகிறேன். புகார் நகரத்துக் கடற்றுறைக் கருகில் உள்ள பண்ட

சாலையைப்பற்றி நீவிர் கூறிய கருத்துக்களைக் கேட்க விழைகின்றேன்.

உருத்திரங் கண்ணனார் :—மேகமானது கடலில் முகந்த நீரை மலையிலே பொழியவும், மலையிலே வீழ்ந்த நீர் யாறாகப் பெருகிக் கடலையடையவும் அடைந்த மழைக் காலம்போலக் கடற்கரையிலேயுள்ள காவல்மிக்க பண்டசாலையின்கண் எல்லையில்லாமல் மூட்டைகள் வந்து நிறைந்து கடலிலே கலங்களில் ஏற்றவும் கடலிலே மரக் கலங்களில் வந்து நிற்கும் பண்டங்களைக் கரையில் ஏற்றவும் வேண்டி அறிவும் அனுபவமும் படைத்த பலர் நின்று இவ்விரு வகைப் பண்டங்களையும் அளந்து சுங்கம் முதலியன விதித்துத் தம் கடமையை ஆற்றுவர். ஏற்றுமதியாகக் கடலில் இறங்கும் பண்டங்கள் அளந்து புலிப்பொறி பொறித்து நிறுத்து அனுப்பப்படும். அவ்வண்ணமே இறக்குமதியாக வரும் பண்டங்கள் கண்ணளவால் அளந்து சுங்கம் விதித்துப் புலி பொறித்துக் கரையில் ஏற்றப்படும். மலையிற் பொழிதல் இறக்குமதிக்கும், கடலிற் கலத்தல் ஏற்று மதிக்கும் உவமானமாகக் கூறப்பட்டன.

முடத்தாமக் கண்ணியார் :—இக்கருத்து நம் நகரத்தின் வியாபாரப் பெருக்கத்தை உள்ளவாறு தெரிவிக்கிறது.

கருங்குழலாதனார் :—ஐய, நம் மூர்க் கடை வீதியைப்பற்றி நீவிர் கூறிய கருத்துக்களைக் கேட்க விரும்புகிறேன்.

உருத்திரங் கண்ணனார் :—கடல் வழியே மரக்கலத்தால் வந்த குதிரைகளும், நில வழியே வண்டிகளால்



வந்த மிளகு மூட்டைகளும், மேரு மலையிற் பிறந்த மாணிக்கமும், சாம்பூநதம் என்னும் பொன்னும், பொதிய மலையிலே பிறந்த சந்தனமும் அகிலும், தென்றிசைக் கடலிற் பிறந்த முத்தும், கீழ்த்திசைக் கடலிற் பிறந்த பவளமும், கங்கையாற்று வெளிகளில் உண்டாகும் பொருள்களும், காவிரியாலுண்டாகிய பொருள்களும், சிங்கள நாட்டிலிருந்து வந்த பொருள்களும் கடார நாட்டிலிருந்து வந்த பொருள்களும், சீனம் முதலிய நாடுகளிலிருந்து வந்த கருப்பூரம் பனிநீர் குங்குமம் முதலியனவும், நிலம் நெளிய வந்து நிறைந்து வியாபாரம் ஆகும் கடை வீதி யென்று கூறினேன்.

கருங்குழலாதனார் :—நம் நாட்டு வணிகரது இயல்பைக் கூறும் பகுதி நன்கமைந்துளது. அதனைச் சுருக்கியுரைக்க வேண்டுகிறேன்.

உருத்திரங் கண்ணனார்:—வணிகராவார், தேவரை வழிபட்டும், யாகங்கள் செய்தும், பசுக்களையும் எருதுகளையும் பாதுகாத்தும், நான்மறை போதிய அந்தணர் புகழை வளர்த்தும், புண்ணியம் பண்ணியும், தானங்கள் செய்தும், வருவார்க் கெல்லாம் அன்னமிட்டும், இல் வாழ்க்கையிற் குறைவற வாழ்ந்து வருவர். அவ்வணிகர்கள் உழவர் நுகத்துப் பகலாணி போன்று நடுவு நிலை தவறாது, தம்முடைய பண்டங்களையும் பிறருடைய பொருள்களையும் ஒரு நிகராய் மதித்துக்கொண்டு மிகுதியாகக் கொள்ளாமற் கொடுத்துக் குறைவாகக் கொடாமல் பழிக்கு அஞ்சி மெய் பேசி, இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி வியாபாரம்செய்வார் என்று கூறியுள்ளேன்.

முடத்தாமக் கண்ணியார்:—நந்தம் அரசர் பிரதாபத்தைக் கூறும் அடிகள் நயம்பட அமைந்துள. அவற்றைக் கேட்க விரும்புகிறேன்.

உருத்திரங் கண்ணனார்:—

"மலையகழ்க் குவனே கடல்தூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனென"

எனவும், ஒளியர் பணிந்து ஒடுங்கவும் அறிவாளர் பணி கேட்பவும் வடவர் வாடவும் குடவர் கூம்பவும் போரின் சிறப்பாற் செய்வித்துப் பொதுவரை அழித்துப் பாண்டியனை வென்று, இருங்கோவேள் மரபை அழித்துக் காடழித்து நாடாக்கி, அரண்மனையும் நகரங்களும் அமைத்து வாழும் அரசு என்று நம் அரசர் பிரதாபத்தைக் கூறியுளேன்.

வளவன்:—ஐய, புலவர் பெருமானே, நும் பாட்டின் நடையும் அதன் சொற்செறிவும் பொருட்பொலிவும் அணிநயங்களும் எத்துணை முறைதான் கேட்கினும் அமையாத சுவையும் எடுத்துரைத்தல் எவர்க்கும் எளிதன்று. ஓர் அடிக்கு நூறாயிரம் பொன் பரிசில் தருவதாயினும் பற்றாது என்றே கூறுவேம். ஆயினும், எம் மனத்தின்கண் உண்டாகிய மகிழ்ச்சியை ஒருவாறு வெளியிடும் பொருட்டுப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசிலாய் அளிக்கின்றேம். பெற்றுக்கொண்டு ஆசி கூற வேண்டுவோம்.

உருத்திரங் கண்ணனார்:—அரசர் பெருந்தகையே, நும் முன்னையோருள் தமிழருமை யறிந்தார் பலர் இருந்தனர். எதிர் காலத்திலும் பலர் இருக்கலாம். ஆனால், நும்மைப்போன்று தகுதியறிந்து பரிசில் தரத்தக்க சிறப்



பும் பெருமையும் படைத்தோரும் படைப்போரும் பலர் இரார் என்றே கூறுவேன். தெய்வச் செயலாற் பெரியதோர் அரசுரிமையை அடைந்து, எத்தகையார்க்கும் நலம்புரிந்து அரசாண்டு வருகின்ற நுமக்கு நும் மரபினர் எவர்க்கும் இல்லாத ஒரு பெருமை விளையும். இனி எதிர் காலத்திலே தமிழ் மன்னர் வரலாறுகளைக் கூறுவாரெல்லாம் சோழர் குடியைப் பெரிதாகப் புகழ்ந்து கூறுவதோடு அம்மரபில் நுமக்கொப்பான அரசர் எவரும் இல்லை என்றே துணிந்துரைப்பர். ஆரிய நாடனைத்தையும் வென்று அடிப்படுத்தியிருக்கும் நும் புகழ் தமிழகத்தெல்லையின் அடங்காமற் பாரத பூமி முழுவதும் பரவி வருவதை அறிவேன். வட நாட்டவர் சிலர் நும்மைப் பற்றிப் பாடும் தம்மொழிப் பாடல்களிலே நும் பெயர்ப் பொருளை அறியாது தம் மொழிப் போக்குக்கு ஏற்பப் புதுப்பொருள் கற்பிப்பதையும் அறிவேன். அதுவும் ஒருவாறு பொருத்தமாகவே யிருக்கிறது. பகைவர்களின் படைகளில் உள்ள கரிகளுக்குக் காலனாய் இருத்தலாற் கரிகாலன் என்றும், கலிப்பகையாய் இருத்தலாற் கலிகாலன் என்றும் அமைத்து அவர்கள் புகழ்கின்றனர். அவர் எம்மொழியில் எவ்வண்ணம் புகழினும், ஏற்றற்குரிய இயல்பான பெருமையோடு விளங்கும் நுமது பெயர் உண்மையும் உலகமும் உயிர்த் தொகைத் தொடர்ச்சியும் உள்ளவளவும் உலகின்கண் நின்று நிலைப்பதாக. நும் மரபின் பெருமை வளர்க்கப்பிறந்த மக்கள் கல்வியும் கல்விப் பயனும் அறிவினர் சேர்க்கையும் பெற்று உலகம் புகழ வாழ்வாராக. அரசரே, இனி யான் விடை பெற்றுக்கொள்ளலாம் அன்றோ?

வளவன்:—புலவர் பெருமானே, எம் நாட்டை நாடி வந்தார்க்கு இங்கே வாழ்ந்து வழி வழித் தழைக்குமாறு அனுமதி கொடுக்கும் வழக்கம் எம்மிடம் உண்டேயொழிய, அவர்க்குச் சிறிதளவு பரிசில் கொடுத்து உடனே விடை தந்து அனுப்பும் வழக்கம் எம்மிடம் இல்லை. ஆகையால், நாம் இப்பொழுது நுமக்கு விடை தரக்கூடாதிருப்பதுபற்றி வருந்துகிறோம். புலவர் பலர் இருந்து வாழ்தற்காக யாம் அமைத்துள்ள புதுமையான மனையகங்களுள் ஒன்றிலே நீவிர் நும் மனைவி மக்களோடு வாழ்ந்திருந்து, இந்நாட்டுத் தமிழ்ச் செல்வம் வளருமாறு உதவி புரிய வேண்டுகிறோம்.

உருத்திரங் கண்ணனார்:—கற்றாலும் தமிழ்க் கல்வியைக் கற்க வேண்டும்; கற்று, நல்ல புலமை வாய்க்கப் பெற வேண்டும்; இறைவன் அருட்டுணையும் பெற வேண்டும்; இயற்கை நலம் தோற்றப் பாடும் வாக்கு வளம் படைக்க வேண்டும். புலமைத்திறம் படைத்துப் பெறும் பயன் என்ன? உண்மையிற் புலமையை அறிந்து ஆதரிக்கும் புரவலரை அடைதலேயாம். அவ்வாறு உத்தம குணங்கள் பல வாய்ந்த நும்மைப் பாடிப் புகழும் பேறு பெற்றதாலன்றோ, பின்னாளில் வரும் பெருமக்கள் நும்மைப் புகழும்போது என்னையும் நினைக்கும் பேறு பெற்றேன்? இதனினும் சிறந்த வாழ்வு எனக்கு என்னுளது? விருப்பம் போலவே செய்கிறேன்.

# XI

பின்னும் பத்தாண்டுகள் சென்றன. ஆண் மக்கள் இருவரும் தமக்கு உவப்பான அரசர் குடிகளிலே மணம் புரிந்துகொண்டனர். பெண் மகள், ஆதி மந்தி முன்பு வாழ்க்கைப்பட்ட சேரர் மரபிலே மற்றொரு கிளையில் இளையான் ஒருவனை மணந்துகொண்டனள். இவர்கள் தத்தம் நாடுகளில் வாழ்ந்து வந்தனர். ஆண் மக்கள் இருவரும் பாரத பூமி முழுவதும் சுற்றிப் பார்த்து நாடாட்சியில் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து வந்தனர்.

திருமாவளவனும் முதுமைப் பருவம் அடைந்தான்; அற நூல்களையும் அருள் நூல்களையும் ஆராய்ந்து அறிஞரோடு அளவளாவுதலே பொழுது போக்காகக் கொண்டிருந்தான். இவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒரு நாள் அரச புரோகிதரும் அந்தணர் சிலரும் அரண்மனை யடைந்தனர். கரிகாலன் அவர்களை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தான். பின்பு அவரனைவரும் தாம் வந்ததன் காரணத்தை வெளியிடத் தொடங்கினர்.

புரோகிதர்:—அரசர் பிரானே, இவ்வந்தணர் அனைவரும் நும் அரசாட்சியின் நலத்தால் இந்நாட்டில் மன மகிழ்ச்சியோடு வாழ்ந்து, அரிய பல நூல்களை ஆராய்ந்தறிந்து, உலகினர்க்குதவும் புண்ணிய சீலம் படைத்தவர்கள்; நும்மிடம் நெடுநாளாகத் தெரிவிக்கக் கருதிய

தொரு செய்தியைக் கூறுமாறு இன்று இங்கு அடைந்திருக்கின்றனர்.

**வளவன்**:—அந்தணப் பெரியீர்காள், நீவிர் நம்மிடம் தெரிவிக்க விரும்புவது யாதோ? இறைவன் திருவருள் துணையாகக் கொண்டு எம்மால் இயற்றப்பட வேண்டுவது ஏதேனும் இருப்பின், தெரிவிக்க வேண்டுகிறோம்.

அந்தணருள் முதியவர் ஒருவர் அங்கு வந்தவர் அனைவர்க்கும் பிரதிநிதியாகப் பேசத் தொடங்கி, முதற்கண் அரசனை ஆசீர்வதித்தார். பிறகு, "மஹாமண்டலேசுவரரும் சக்கரவர்த்தியுமாயிருக்கின்ற சூரிய வம்ச திலகமாகிய சோழ மஹாராஜா அவர்களிடம் நாங்கள் தெரிவிக்க விரும்புவது ஒரே விஷயம்: அதுவும் தேசத்தின் க்ஷேமத்தைக் கருதுவதேயாம். **'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி'** என்பது உலக வாக்கியம். நம்முன்னோர்கள் நம்மீது கொண்டருளிய அபாரகருணையால் நமக்கென வைத்துச் சென்ற புதைபல்கள் வேத சாஸ்திரங்களாம். வேதமோ, அளவற்றது; கால வரம்பற்றது. சாஸ்திரங்கள் பல வகையாம். ஒவ்வொரு சாஸ்திரத்தின் ஓர் அமிசத்தில் ஒருவன் பூர்ண ப்ரவீணதை அடையவேண்டுமென்றால் அவன் ஆயுட்காலம் முழுதும் அப்பியசிக்க வேண்டியிருக்கிறது. தமிழிலும் அப்படியே பல சாஸ்திரங்களும் செய்யுட்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் முன்னோர் சென்ற முறை பற்றிப் பயின்று வருமாறு கலாசாலைகள் எல்லாம் நிறுவியிருக்கிறீர்கள். அநேகர் விசேஷ ஞானம் சம்பாதித்தவர்களாயிருக்கிறார்கள். வேத சாஸ்திரங்



கள் ஸமஸ்த ஜனங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்வதற்காகச் சில கர்மாக்களை விதித்திருக்கின்றன. அவற்றுள், இன்னின்ன வர்ணத்தார் இன்னின்ன கர்மாக்களை இன்னின்ன காலங்களிலே செய்யவேண்டும் என்ற நியதியும் இருக்கின்றது. வைதிக வித்தை இந்த நாட்டிலே பரவுதற்கு உதவியாயிருந்த தங்கள் வமிசத்தார் சாஸ்திரங்களிலே பூர்ண விசுவாஸம் உடையவர்கள். தாங்களும் அப்படியே இருக்கிறீர்கள். இந்நாள் வரையில் எவ்வளவோ புண்ணிய காரியங்களைச் செய்து பூமண்டலத்தில் உள்ள பிரஜைகளைத் திருப்திபடுத்தியிருக்கிறீர்கள். தேவலோகத்தில் உள்ள தேவர்களுக்கு உரிய யாகாதிகளைச் செய்து அவர்களைத் திருப்திபடுத்த வேண்டுவது அரசர் கடமைகளில் ஒன்றாம். தாங்கள் இத்தேசத்திலே அபிவிருத்தி செய்திருக்கும் சாஸ்திரங்கள், தங்கள் முன்னோர்கள் செய்தது போலத் தாங்களும் பல யாகங்கள் செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கின்றன. மஹாராஜாவாய் இருக்கிற தாங்கள் இவ்விஷயத்தில் உத்ஸாஹம் காட்டாமல்இருக்கும் பட்சத்தில் பொதுஜனங்கள் சாஸ்திராபிப்பிராயங்களை உல்லங்கனம் செய்ய இடம்உண்டாகும். தங்களுக்கும் விருத்தாப்பியம் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. அசுவ மேத யாகம் தாங்கள் செய்யத் தக்கதாய்த் தங்கள் முன்னோர் பலர் செய்திருக்கின்றனர். பாரத பூமி முழுதும் தங்களை எதிர்க்கச் சக்தியுள்ள மன்னர் ஒருவரும் இரார். ஆகையால், விரைவிலே தொடங்கி அசுவ மேத யாகம் ஒன்று செய்ய வேண்டுகிறோம்.

வளவன்:—அந்தணப் பெரியீர்காள், எமக்கும்நெடுநாளாக இவ்வெண்ணம் இருந்ததுண்டு. நுங்கள் கருத்தை அறியவேண்டும் என்றே பொறுத்திருந்தோம்; இனி விரைவிலே தொடங்குவோம். புரோகிதர் வேண்டுவன செய்வார். நீங்களும் உதவியாயிருந்து நிறைவேற்றி வைக்க வேண்டுகிறோம்.

பிறகு அந்தணரனைவரும் விடைபெற்றுச் சென்று புரோகிதர் உதவியால் யாக சாலைக்கு இடம் ஒன்று தீர்மானித்து, யாகத்துக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் சேகரிப்பாராயினர். நன்னாள் ஒன்றிலே உத்தம லக்ஷணங்கள் அமைந்த குதிரை யொன்று நிலமெலாஞ் சுற்றி வருமாறு அனுப்பப் பெற்றது. அதைப் பின்றொடர்ந்து அரசகுமாரரும் வீரர் பல்லாயிரவரும் சென்றனர். அப்பரிமா சென்ற இடங்களிலெல்லாம் சிறப்புச் செய்யப்பெற்று விரைவில் மீண்டு வந்தது. பிறகு அதைக் கொண்டு அந்தணர் பலர் உதவியாற் கரிகாலன் தன் கோப்பெருந்தேவியோடு யாக சாலையில் அமர்ந்திருந்து, அசுவமேத யாகம் இயற்றினான்; காவிரியில் அவப்பிரத ஸ்நானம் செய்தான்; அந்தணர் பலர்க்கும் புலவர் பலர்க்கும் செம்பொன் வழங்கினான். பிறகு அரண்மனை புகுந்தான்.

அதன் பின்பு சில வருடங்கள் கரிகாலன் அரசப் பொறை தாங்கியிருந்தான். அயல்நாட்டு அரசர் பலரும் முறைப்படி திறை யளந்துகொண்டிருந்தனர். ஒருமுறை அவரனைவரும் பூம்புகார் நகருக்கு வந்து, அரசர் பெருமானைக் கண்டுகொள்ள வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. குறித்ததினத்திலே அவரனைவரும்வந்து



தம் அரசர்க்கரசைக் கண்டு வணங்கித் தாம் செய்தற்குரிய சிறப்புக்கள் செய்து, சில நாள் வாழ்ந்திருந்தனர். அவரனைவரும் நகரத்தில் இருக்குங்காலத்தே தன்மூத்த மகனாகிய கோக்கிள்ளிக்கு இளவரசப்பட்டம் சூட்டித் தான் அரசப் பொறையிலிருந்து சிறிது சிறிதாக விலகிக் கொள்ளக் கருதியிருப்பதைக் கரிகாலன் தெரிவித்தான். அமைச்சரும் அந்தணரும் புலவரும் அரசரும் அதனை மனமின்றி யேற்றுக்கொண்டனர். அரசரெல்லாம் உரிய காலத்தில் விடை பெற்றுத் தத்தம் நாடுகட்குச் சென்றனர்.

கரிகாலன் அதன்பிறகு அறநூல்களை ஆராய்ந்து, நல்லோர்களோடு அளவளாவிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தான். ஒருநாள், சில புலவர்களுடன் தெய்வ விஷயமான சம்பாஷணை செய்துகொண்டிருந்தான். அந்தணர் பலரும் பிற அறிஞரும் அங்கிருந்தனர். பின்வரும் பேச்சு நிகழ்ந்தது:

வளவன்:—அறிஞர்களே, இத்துணையாண்டுகளாக நாம் நாட்டின் நலங் கருதியே உழைத்து வந்திருக்கிறோம். உண்மைப் பொருளை யுணர்த்தும் நூல்கள் நம் நாட்டிற் பல திறப்பட்டிருத்தலால், அவற்றையெல்லாம் ஆராய்ந்தோம்; அறிந்தோர்களோடு அளவளாவினோம்; பல புண்ணிய தலங்களுக்குச் சென்றோம்; இறைவனைத் தொழுது வணங்கி வாழ்த்தினோம்; வேத சாஸ்திரங்களிற் சொல்லிய நற்கருமங்களில் எமக்கு விதித்தவற்றையெல்லாம் செய்தோம். இருப்பினும், எம்முள்ளம் அமைதி பெறவில்லையே! இதற்குக் காரணமும் எம்மால் அறிய இயலவில்லை.

அறிஞர் ஒருவர்:—அரசர் பெருமானே, மக்களாய்ப் பிறந்தார் செய்தற்குரியவெல்லாம் செய்தும், நம் மனம் அமைதி பெறாமைக்குக் காரணம் ஒன்றே; யான் எனது என்ற பற்றுக்கள் இரண்டும் நம்மைப்பற்றி விடவில்லை. 'யான் எனது என்னும் பிணக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்,' என்று பெரியார் கூறுவர். எல்லாமாய் அல்லவுமாய் இருந்த இறைவனை ஏதேனும் ஒரு பயன் கருதி வணங்கி வாழ்த்தும் இயல்பே மக்களிடம் பொதுவாய் உளது. ஒரு பயனும் எதிர் பாராமலே வணங்கி வாழ்த்தி அப்பணியே பயனாகக் கொள்ளும் மன நிலை ஒருவர்க்கு வருமாயின், அவரே மனவமைதி பெற வல்லார் ஆவர். காணப்படும் பொருள்களிலுள்ள ஆசை அடியோடு அற்றாலன்றிக் காணற்குரிய அரும்பொருளைக் காண்டல் இயலாது. உள்ளத்தை அவனுக்குக் கோயிலென்றாக்கக் கருதின், முன்னை அங் கடைந்திருந்த அழுக்குக்களை யெல்லாம் ஓட்ட வேண்டும். மனவமைதி பெற்று மனித வாழ்வின் பயனைப் பெறுதற்கு நம் பெரியோர் கண்ட வழி இதுவேயாம்.

வளவன்:—'இன்ன தன்மைத்து; இன்ன உருவமுடைத்து; இன்ன ஆற்றலுடைத்து: இதுதான் பொருள்,' என்று காட்டவல்லார் எவரையும் யாம் இந்நாள் வரையிற் கண்டிலேம். காட்ட வல்லார் உளராயின், அவர் நம் கண்ணிற் படாமற் கடவுட் பயன் தாமே துய்த்து மறைந்திருப்பார் போலும்!

அந்தணர் ஒருவர்:—வேதங்களால் தெளித்துக் கூறப்பட்ட பொருளை ஆராய்ந்தறிந்தார் பலருளர். அறிகின்றாரும் உளர். அறிவாரும் உளராகலாம். இன்னது



கண்டேயம் என்று உண்மையிற் கண்டாராலும் விள்ளப் படாத பெருமையுடைய அப்பொருளைக் காட்ட வல்லார் உளராதல் அருமையே. தாம் தாம் துய்க்கும் இன்பச் சுவையைத் தாமே கண்டு ஆனந்திக்கலாகுமேயன்றிப் பிறர்க்குக் காட்டலும் கூடுமோ? காட்ட வல்லாராயிருப்பார் சாமானியமான மக்கட் பிறப்பினரோடு ஒப்பாகக் கருதத் தக்கவராகார். அவரை மக்களினத்திலும் தேவரினத்திலும் மேம்பட்டார் என்றே கூறல்வேண்டும். அத்தகையார் இறைவன் அருளொளியின் துளியாய் அநேக ஆயிர ஆண்டுகள் இடைப்பட உலகத்திலே தோன்றித் தம் அரும்பணியை நிறைவேற்றுவர். அவரைக் காண்டல் எவர்க்கும் எளிதில் இயலாது. அதற்குரிய நல்வினை செய்தார்க்கே அப்பேறு பெற வுரியதாம்.

வளவன்:—நீவிர் கூறுவனவெல்லாம் எமக்கும் உண்மை யென்றே தோன்றுகின்றன. ஆயினும், உள்ளமுற வுய்த்துணர்ந்து கடைப்பிடிக்கத் தக்க மனவூற்றம் இல்லாமை யொன்றே எம்மிடம் உள்ள குறையாம். அவனை யறிதலும் அவனருளாலே அமைவதன்றோ? அவனருள் கொண்டே அவன் தாள் வணங்குவேம்; வரும் பயனைப் பெறுவேம்.

தமிழ்ப் புலவர் ஒருவர்:—அரசர் பிரானே, அவனருளாலே அவன்றாள் வணங்குவது என்பது நம் நாட்டுப் பெரியார் அருளிச்செய்த அருள் நூல்களின் கருத்தாம். ஆணல்லன் பெண்ணல்லன் அலியல்லன் என நூல்களால் வரையறுக்கப்பட்ட கருணை வள்ளல், உருவமுடையனோ இலனோ யாம் அறியோம். ஆயினும், அருளே யுருவமாயுடையான் எனவும், அன்பினால் உருகியடை

வார்க்கு அணியனாய் எளிதிற் பெறலாம் பொருளாய் இருக்கின்றான் எனவும் அறிவோம். பல நூல்களையும் கற்று அவற்றின் பொருளை உற்றுணர்ந்து, மனமுருகிக் கதறி விளிப்பார்க்கே இறைவன் அருள் புரிவான் என்று எண்ண வேண்டா. சிற்றெறும்பின் சிற்றொலியும் செவிக்கொண்டு அதற்கு வேண்டியவாறு அருள் புரியும் அமலன், உண்மையான அன்போடு நினைவார்க்கு மிகவும் நெருங்கிய உறவினனாகவே இருப்பன். அன்னையென்றும் தந்தையென்றும் நாம் உலகத்தே அறிந்த நெருங்கிய உறவினர் நம் கண் முன்னே மாண்டு மண்ணாகக் கண்டோம். இவ்வுலகிற்கெல்லாம் உயிர்கட்கெல்லாம் அம்மையப்பனாகி என்றும் அழியாதவனாகியிருக்கும் அவனே மனித வருக்கத்தார்க்கு உரிய உறவாய் என்றும் முன்னிற்கக் காண்போம். அறிதல் அரிதாயினும் எளிதே. அவன் அருளின் திறத்தை யாரே அளவிட வல்லார்!

வளவன் :—நீவிர் பேசும் பேச்சுக்களெல்லாம் எம் உள்ளத்தை உருக்குகின்றன.

செறிவிற் செறிந்த செறிவாகித்
தெளிவிற் றெளிந்த தெளிவாகி
அறிவிற் புகுந்த வறிவாகி
யருளிற் கிளரும் அருளாகிப்
பிறிவிற் பிறிந்த பலவாகிப்
பிறியா வொன்றாய்ப் பிறங்குகின்ற
குறியிற் கிடந்து மயங்காதே
குறைகள் பெருகிக் குலைந்தேனே.



பெண்மைப் பொருளை யாண்மையெனப்
பேச வுரிய பெரும்பொருளை
நுண்மைப் பொருளை நுணங்கறிவின்
நூலோர் உருகி நுனித்துணரும்
உண்மைப் பொருளை யுறுபொருளை
யுணரு மறிவைப் பெறாதேயான்
திண்மைப் பொருளை யுலகிலுள்ள
சிறுமைப் பொருளைப் பற்றுவனே.

பற்றப் படுநற் பெருந்திருவைப்
பற்றும் வழியை யறியாதே
குற்றப் படுகர்க் குழியிடையே
குறிக்கும் பொருளை மறந்தயர்ந்து
சுற்றப் படுபல் துயர்த்தொகையைச்
சுற்றி மயங்கி வாழ்ந்திருந்தேன்
முற்றப் பெறுபே ரின்பநலன்
முதல்வ னருளிற் பெறுவேனே.

அருளே நிறைவாய் அறிவுருவாய்
அமைந்தாய் அமல! அடியேன்பால்
மருளே மிகுமால் உலகமயல்
வழிந்தே பெருகி யோடிவரும்
இருளே மிகுமிப் பிறவியிடை
யினியும் பிறவாப் பேறருளிப்
பொருளே அருள்வாய் பொருளாகிப்
பொருளை யுணர்த்தும் புதுப்பொருளே!

இப்பாடல்களைப் பாடிய பிறகு அவன் மயங்கிக் கீழே வீழ்ந்தான். அனைவரும் நெருங்கினர்: அவன் இறைவன் அடி நிழலடைந்ததை அறிந்தனர்.

அருகில் நின்ற கருங்குழலாதனர் என்ற பு[illegible]ராய் கரிகாலன் சிவபத மடைந்த காட்சியைக் கண்டார்; முருகினர். "திருமாவளவன் என்ற செஞ்ஞா[illegible]யும் வீழ்ந்தது. புலவருலகத்தை இருள் சூழ்ந்தது. வீரருள் வீரனைக் காண்பேமா என்று நெடுநாளாக எதிர் பார்த்திருந்த விண்ணவர் வென்றனர். மண்ணவர் தோற்றனர். பாரத தேயத்தில் உள்ள பல நாட்டு மன்னரும் தம் ஏகாதிபதியாகிய தலைவனை யிழந்தனர். அமர் பல கடந்ததும், அரண் பல அடைந்ததும், புலவரைப் புரந்ததும், பாணரை வாழ்வித்ததும், அறநெறி யறிந்த பெண்டிரோடிருந்து வேத வேள்விகள் முடித்ததும் ஆகிய அம்மன்னன் செயல்களைப் பற்றி யாரே புகழ வல்லாராவர்? உலக மன்னவன் என்ற பொருளொடு பொருந்திய பட்டப் பெயர் பூண்ட அம்மன்னன் இன்று யாங்கு ஒளித்தான்? இவ்வுலகம் அப்பெருஞ்செல்வத்தை இழந்ததால் இரங்கத் தக்கதே! வேனிற்காலத்தே தம் ஆடுகளுக்குப் பச்சிலையுணவு கொடுக்குமாறு கோவலர்கள் பூவும் இலையும் உதிரக் கொய்து அழித்த வேங்கை மரம்போல அம்மன்னர் பிரான் அன்புக்குரிய மகளிரும் தம் பொன்னணிகளைக் களைந்தனர். இத்தகைய காட்சியைக் காணவும் எனக்கு அமைந்திருந்ததே!" என்று கூறிப் புலம்பினர்; கையறு நிலை பாடினர்.

அறிஞர் பலர் திரண்டு கோக்கிள்ளி என்ற மூத்த மகனுக்கு முடி சூட்டினர்; இளைய மகனைக் கொண்[டு] தந்தைக்குரிய கடன்களை யெல்லாம் ஆற்றுவித்தனர். சோழ நாடெங்கும் முதற்கண் இச்செய்தி பரவியது; பின்பு தமிழக முழுவதும் பாரத தேச முழுவதும் பரவியது. அதனால் பல நாட்டரசரும் புதிய அரசனது மகுடாபிஷேகத் திருவிழா[illegible]பொருட்டு வந்தனர்



த்தலும் பிறத்தல்தானும் இவ்வுலக இயற்கை ன்றே அறப்பயன் உணர்ந்தோர் கூறும் அறிவுரையின் னை அனைவரும் அறிந்தனர்.

"பொன்னிமயக் கோட்டுப்
புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன்
மதிற்புகார் வாழ்வேந்தன்"

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் தினமும் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்

* * *

மயன்விதித்துக் கொடுத்த மரபின......"

—இளங்கோவடிக

77280

Printed at the B. N. Press, Mount Road, Madras.